# மங்கள நூலகம்



# திருக்குறள் கதைகள்

சாவி

**உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )**

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

**Universal (CC0 1.0) Public Domain Dedication**

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

லட்சியம். நான் சென்னைக்குப் போய்ச் சித்திரக் கலை பயிலப் போகிறேன். இதற்குத் தாங்கள்தான் எப்படியாவது தந்தையின் சம்மதம் பெற்றுத் தரவேண்டும் '' என்றான் ராஜு. தந்தையிடமிருந்து ஆக வேண்டிய எந்த ஒரு காரியத்தையும் தன் தாயின் மூலமாகச் சாதித்துக் கொள்வது தான் அவனுடைய வழக்கம்.

பாகீரதி தன் மகன் விரும்பியபடியே அவன் தந்தை மாசிலாமணியின் சம்மதம் பெற்று அவனைச் சென்னைக்கு அனுப்பி வைத்தாள்.

ராஜு சென்னையில் ஓர் அறையை வாடகைக்கு எடுத்துக் கொண்டான். சித்திரக் கலையில் தன் முழு கவனத்தையும் ஈடுபடுத்தினான். இரவு பகலாய்க் கண் விழித்து அந்தக் கலையைப் பயின்றான். எத்தனை எத்தனையோ சிருஷ்டிகள்! என்னென்னவோ முகபாவங்கள்! உலகத்தின் ஆசாபாசங்களை யெல்லாம் பிரதிபலிக்கும் முகத் தோற்றங்கள்! உள்ளத்தின் உணர்ச்சிகளை யெல்லாம் எடுத்துக் காட்டும் உருவகங்கள்! சிருஷ்டிக் கடவுளே கண்டு வியக்கும் வண்ண ஓவியங்கள்!

ராஜுவின் புகழ் உச்சத்தை எட்டியது. புகழுடன் அவன் சித்திரங்களுக்கு நல்ல மதிப்பும் ஏற்பட்டது, யார் யாரோ அவன் சித்திரத்தை விலை கொடுத்து வாங்கிக் கொண்டு போனார்கள். வெறும் புகழினால் மட்டும் என்ன பயன்? புகழுடன் பணத்தையும் விரும்பினான் அவன். ஓய்வு ஒழிவு இன்றிச் சித்திரங்களை எழுதிக் குவித்தான். ஆயினும் அத்தனை வேலைகளுக்கிடையிலும் அவன் தன் தாயாருக்குக் கடிதம் எழுதுவதற்கு மட்டும் தவறவில்லை.

'' அம்மா, நான் நந்திவனத்தைவிட்டு வந்து நாலு ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டன. தங்களைப் பார்க்க வேண்டுமென்று மிகவும் ஆவலாயிருக்கிறேன். ஆனால் எனக்கு இங்கு ஓய்வு என்பதே துளிக்கூட இல்லை. என் சித்திரங்களுக்கு நல்ல விலை கிடைக்கிறது. நேற்றுக்கூட ஒரு ஜமீன்தாரின் படத்தை வரைந்து கொடுத்தேன்.

ஆயிரம் ரூபாய் கிடைத்தது. எனக்குக் கிடைத்துள்ள இவ்வளவு பெருமைக்கும் புகழுக்கும் தங்கள் அன்புதான் காரணம். அடுத்த வாரம் நந்திவனம் வரத் தீர் மானித்திருக்கிறேன்.

இப்படிக்கு,

ராஜு.

''அம்மா! என்று ஆவலோடு அழைத்துக் கொண்டே வீட்டுக்குள் நுழைந்தான் ராஜு. உள்ளிருந்து விரைந்து வந்த அவன் தாயார், ''வாடா ராஜு'' என்று கனிந்த சொற்களால் அவனை எதிர்கொண்டழைத்தாள்.

''ஏன் இப்படி இளைத்துப் போய்விட்டாய்?'' என்று கேட்டாள் பாகீரதி.

ஆனால் உண்மையில் ராஜு கேட்க வேண்டிய கேள்வி அல்லவா அது?

அவன் தாய் அடையாளமே தெரியாதபடி மாறிப் போயிருந்தாள். நாலு வருடங்களுக்கு முன்னால் அவளுடைய களை பொருந்திய முகத்திலிருந்த ஆனந்தமெல்லாம் எங்கே? அந்தக் கவர்ச்சி மிக்க கண்களிலிருந்த ஒளியெல்லாம் எங்கே? முகத்திலே ஏன் இத்தனை வாட்டம்? நெற்றியிலே ஏன் இந்தச் சுருக்கம்? பார்வையில் ஏன் இத்தனை சோகம்?

''அம்மா, ஏன் இப்படி மெலிந்து விட்டீர்கள்? உங்களுக்கு என்ன குறை?'' என்று பதறினான் ராஜு.

பாகீரதி சிரமப்பட்டுத் தன் முகத்திலே மகிழ்ச்சியைத் தருவித்துக் கொண்டவளாய், ''ஒன்றுமில்லை ராஜு'' என்று மழுப்பினாள்.

''அம்மா, தாங்கள் எதையோ மறைக்கப் பார்க்கிறீர்கள். என்னிடம் உண்மையைச் சொல்ல மாட்டீர்கள்...?''

''எனக்கு ஒரு குறைவும் இல்லை ராஜு! உன்னிடம் மறைப்பதற்கு என்ன இருக்கிறது?''

"அம்மா, நான் கலியாணம் செய்துகொள்ளாமல் இருப்பது தங்கள் மனக்குறைக்குக் காரணமாயிருந்தால் சொல்லுங்கள். நான் உடனே மணம் புரிந்துகொண்டு விடுகிறேன். நான் சித்திரம் பயிலுவதற்கு மணவாழ்க்கை இடையூருக இருக்குமே என்பதற்காகவே இதுவரை கலியாணம் வேண்டாம் என்று சொல்லிக் கொண்டிருந்தேன். இனி அந்தக் குறை தங்களுக்கு வேண்டாம்."

மகனுடைய அன்பும் பாசமும் பாகீரதியின் நெஞ்சத்தை நெகிழ வைத்துவிட்டன. அவள் கண்களிலிருந்து கண்ணீர் கூட வந்து விட்டது.

"ராஜு! பசியோடு வந்திருப்பாய்; குளித்துவிட்டுச் சாப்பிட வா, எழுந்திரு" என்று பேச்சை மாற்றிஞள் பாகீரதி.

"அப்பா எங்கே?"

"அவர் சென்னைக்குப் போயிருக்கிருர். இப்போதெல்லாம் அவர் கிராமத்திலேயே தங்குவதில்லை. புதிதாக சர்க்கரை மில் ஒன்று ஆரம்பிக்கப் போகிருராம். அது சம்பந்தமாக அடிக்கடி பட்டணம் போய் விடுகிருர்"

'அப்படியா? அடிக்கடி சென்னைக்கு வரும் அப்பா என்னை ஏன் ஒரு முறைகூட வந்து பார்ப்பதில்லை?' என்று தனக்குள்ளாக எண்ணிக் கொண்டான் ராஜு.

அவன் நந்திவனத்தில் நாலே தினங்கள்தான் தங்கியிருந்தான்; அதுவும் தாயாரின் ஆசைக்கிணங்கி. இல்லையென்ருல் மறுதினமே புறப்பட்டுப்போயிருப்பான்.

நந்திவனத்துக்குச் சென்று திரும்பியது முதல் அவன் உள்ளத்தில் நிம்மதியே இல்லாமற் போய்விட்டது. அவன் தாயின் அன்பு முகமும், அதில் காணப்பட்ட இனம் தெரியாத சோகமும் அவன் மனத்திரையில் ஓர் அழியா ஓவியமாகப் பதிந்துவிட்டன. தாயின் சோகத்துக்குக் காரணம்? அதைத்தான் அவனுல் ஊகிக்க முடியவில்லை.

களை பொருந்திய முகம்; ஒளி வீசும் கண்கள்; மகிழ்ச்சி பொங்கும் மலர்ந்த பார்வை!—இது நான்கு வருடங்களுக்கு முந்திய தன் அன்னையின் தோற்றம்! இப்போது? அந்தக்

கண்களிலே ஏதோ ஒருவித ஏக்கம். முகத்திலே இனம் புரியாத ஒருவித சோகம்.

அந்த ஏக்கமும் சோகமும் கலந்த தன்னுடைய தாயின் முகத்தை ஒரு சித்திரமாகத் தீட்ட விரும்பினான் அவன். ஆனால் அது அத்தனை எளிதான காரியமா? அற்புதமாக வரைய வேண்டிய அபூர்வ சித்திரம் அல்லவா அது? 'தாயின் தெய்வத் திருவுருவில் எவ்விதப் பிசகும் நேர்ந்துவிடக் கூடாது. அப்படி நேர்ந்துவிட்டால் அதைவிடக் கொடிய செயல் வேறு இருக்க முடியாது. இதுவரை நான் வரைந்த சித்திரங்களையெல்லாம் காட்டிலும் மகத்தான ஓவியமாகத் திகழவேண்டும். எந்த சைத்திரிகனும் இதைக் காட்டிலும், சிறந்த ஓர் ஓவியத்தை வரைந்துவிட முடியாது என்ற அள வுக்கு அது அமைய வேண்டும்' என்று எண்ணினான் ராஜு.

அந்தச் சித்திரத்தை அவசரப்பட்டு முடித்துவிட விரும்ப வில்லை அவன். தன்னுடைய முழுத் திறமையையும் காட்டி, காலத்தையெல்லாம் அதற்காகவே ஈடுபடுத்தி வரைய வேண்டிய உன்னத உயிரோவியம் அது என்பதற்காக, அதை எழுதத் தொடங்காமலே காலம் தாழ்த்திக் கொண்டி ருந்தான் அவன்.

அன்று விஜயதசமி, அவனைத் தேடி அவன் இருக்கும் அறைக்கு ஒரு பெண் வந்தாள். நல்ல அழகி. ஆனால் அவளுடைய அழகு அவனை வசீகரிக்கவில்லை. எவ்வளவோ அழகிகளைத் தன் தூரிகையால் சிருஷ்டித்திருந்த அந்தப் புகழ் பெற்ற கலைஞனுடைய கண்ணோட்டத்தில் அந்தப் பெண் ஓர் அழகியாகப் படவில்லை. அவன் அவளைப் பார்த்துக் கேட்டான் :

"நீ வந்த காரியம்?"

"தங்களிடம் சித்திரம் கற்க."

"சித்திரக் கலையை நான் யாருக்குமே இலவசமாகக் கற்பிப்பதில்லையே!"

"தாங்கள் கேட்கும் பொருள் என்னவானாலும் தயங் காமல் தருவேன். எப்படியும் தங்களிடம் சித்திரம் பயில வேண்டும். இதுவே என் லட்சியம்."

"சரி; இன்று விஜயதசமி. நல்ல நாள். உன் பெயர்?"

"தமயந்தி."

பயிற்சி தொடங்கி இரண்டு ஆண்டுகள் கடந்தன. சென்னையில் சர்வதேசச் சித்திரக் காட்சி ஒன்று நடைபெறப் போவதாகப் பத்திரிகைகளில் அறிவிப்பு வெளியாயிற்று.

நண்பர்கள் பலர் ராஜுவைத் தூண்டினார்கள்; "இந்தக் காட்சியில் உன்னுடைய சித்திரமும் இடம் பெறவேண்டும். மேனாட்டுக் கலைஞர்களும் அறிஞர்களும் வந்து உன் சித்திரத்தைக் கண்டு வியக்க வேண்டும். நீ எழுதும் அந்தச் சித்திரத்தின் கீழ் நீ என்ன விலை எழுதி வைத்தாலும், அந்த விலை கொடுத்து அதை வாங்கிக் கொள்ளவும் பலர் முன் வரவேண்டும். இந்த அரிய வாய்ப்பை நீ இழந்துவிடக் கூடாது!"

ராஜு சிந்தித்தான். 'புகழ் பெருகும், நல்ல விலை கிடைக்கும்' என்ற சொற்கள் அவனைத் தீவிரமாகச் சிந்திக்க வைத்தன.

"தமயந்தி! சித்திரக் காட்சியில் நான் பங்கு கொள்வது பற்றி உன் அபிப்பிராயம் என்ன?" என்று கேட்டான் ராஜு.

"அவசியம் தங்கள் சித்திரம் அதில் இடம் பெற வேண்டும்; இதுவே என்னுடைய விருப்பமும்" என்றாள் அவள்.

ராஜு யோசித்தான்; 'காட்சிச் சாலையில் வைக்கக் கூடியதாக என் வசம் எந்தச் சித்திரமும் இல்லையே.

சித்திரக் காட்சியில் வைப்பதற்குரிய சித்திரம் எதுவாக இருக்கலாம்: எதை! எழுதலாம்? ஆம்! என் அருமைத் தாயாரின் உருவத்தையே எழுதி வைக்கிறேன்.'

ராஜு தூரிகையைக் கையில் எடுத்துக் கொண்டான். அவன் இதய ஆழத்தில் பதிந்து விட்டிருந்த அன்னையின் சோக வடிவத்தைக் கண் எதிரில் கொண்டு வந்தான். பத்தே நாட்களில் அதை எழுதி முடித்துவிட்டான் அவன்.

என்ன விந்தை ! அன்னையின் உள்ளத்தில் மறைந்து கிடந்த அந்த இனம் தெரியாத சோகம் அவனுடைய சித்திரத்தில் அப்படியே பிரதிபலித்தது. அவன் நீண்ட காலமாக 'எழுத வேண்டும், எழுதவேண்டும்' என்று காலம் கடத்திக்கொண்டிருந்த அந்தச் சித்திரம் முழு வெற்றியுடன் அமைந்து விட்டது. அந்தப் படத்துக்குக் கீழே தன் கையெழுத்தைப் போட்டான். படத்தின் விலை இருபத்தையாயிரம் என்றும் எழுதி, அதன் கீழ் ஒட்டிச் சித்திரக் காட்சிச் சாலைக்கு அனுப்பிவிட்டான்.

சித்திரக் காட்சிக்கு விஜயம் செய்த சமஸ்தான மன்னர் ஒருவர் அதை இருபத்தையாயிரம் கொடுத்து வாங்கிக் கொள்வதாகவும், சித்திரத்தைக் கண்காட்சி முடிந்ததும் எடுத்துக் கொள்வதாகவும் கூறிவிட்டுப் போயிருந்தார்.

ஆயினும் கலைஞன் ராஜுவின் உள்ளத்தை ஏதோ ஒன்று அரித்துக்கொண்டிருந்தது. 'தாயின் சோக வடிவத்தை எல்லோரும் வியக்கத்தக்க முறையில் எழுதி அதனுல் பெரும் கீர்த்தி பெற்றுவிட்டேன். ஆனுல் இதுதானு என்னுடைய லட்சியம்? ஒரு சித்திரத்தின் பயன் இதுதானு ? சித்திரத்தின் வெற்றிக்கு மூலகாரணமான என் தாயின் துன்பத்தைக் கண்டுபிடித்து அதைத் துடைக்கும் சக்தி எனக்கு இல்லையே !'

இந்தச் சமயத்தில் யாரோ அறைக் கதவைத் தட்டும் ஓசை கேட்டது.

"யார் அது?"

"நான்தான் தமயந்தி. இன்று சித்திரக் கண்காட்சிச் சாலைக்குப் போயிருந்தேன். அவ்வளவு பேரும் தங்கள் சித்திரத்தைச் சூழ்ந்துகொண்டு நிற்கிருர்கள். தங்களுக்குத்தான் முதல் பரிசு என்றும் அறிவித்துவிட்டார்கள்" என்று பெருமிதத்துடன் கூறினுள்.

ராஜு ஆழ்ந்த சிந்தனையில் லயித்திருந்தான்.

"ஐயா, இன்று மாலை என் வீட்டில் தங்களுக்கொரு சிறு விருந்து நடத்தப் போகிறேன்" என்ருள் தமயந்தி.

"ஏன் ? என்ன விசேஷம் ?"

"இன்று எனக்குப் பிறந்த தினம். தாங்கள் தடை சொல்லாமல் விருந்துக்கு வரவேண்டும்."

" ஆகட்டும்."

அன்றுதான் ராஜு, தமயந்தியின் இல்லத்துக்கு முதல் முறையாகச் சென்றான். அந்த வீட்டில் தமயந்தியும் அவள் மூத்த சகோதரி லலிதாவும் மட்டுமே இருந்தனர். லலிதா 'ஒரு மாதிரி'யாக வாழ்க்கை நடத்துபவள் என்பதைப்பற்றி அவன் ஏற்கெனவே கேள்விப்பட்டிருந்தான். ஆனாலும் அதைப்பற்றி யெல்லாம் அவனுக்கு என்ன அக்கறை? தமயந்தி அவனுக்குப் பணம் கொடுக்கிறாள். அவன் சித்திரம் கற்றுக்கொடுக்கிறான்...அவ்வளவுதான்.

விருந்துக்குப் பிறகு தமயந்தி ராஜுவை ஒரு ஹாலுக்கு அழைத்துச் சென்றாள். அங்கேயிருந்த அபூர்வமான தந்தப் பொருள்களையும், சித்திரங்களையும், சிலைகளையும் அவனுக்குக் காட்டினாள். எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டே வந்த ராஜு ஹாலுக்கு மத்தியில் சுவரில் மாட்டப் பட்டிருந்த ஒரு படத்தைக் கண்டதும் அசைவற்று நின்றான். காரணம், அது ராஜுவின் தந்தை மாசிலாமணியின் படம் !

"என்ன? அப்பாவின் படமா? அவர் படம் இங்கு எப்படி வந்தது ? ஓகோ ! 'ஒரே கணத்தில் அவனுக்கு எல்லாம் விளங்கி விட்டன. 'அம்மா கூறினாளே, அடிக்கடி பட்டணம் போகிறார் என்று, இதற்குத்தானா ? அம்மா ! உங்கள் முகத்திலே உள்ள சோகக் களங்கத்துக்குக் காரணம் இதோ நிதர்சனமாக விளங்கிவிட்டது. இந்த ரகசியத்தைத்தானே என்னிடம் சொல்லாமல் மூடி மறைத்தீர்கள் ? இதோ தெரிந்துவிட்டது அம்மா அந்த உண்மை !'

ராஜு, அப்புறம் அந்த வீட்டில் அதிக நேரம் தாமதிக்கவில்லை. சீக்கிரமே புறப்பட்டுவிட்டான், புறப்பட்டவன் நேராகக் காட்சிச் சாலைக்குச் சென்றான். அங்கிருந்த தன் தாயின் படத்தைக் கையில் எடுத்துக்கொண்டான்.

காட்சிச் சாலை அதிகாரியிடம் சென்று, " ஐயா; இந்தச் சித்திரக் காட்சியில் என் படத்தை வைத்திருக்க இய

லாமைக் வருந்துகிறேன். உங்கள் பரிசும் எனக்கு வேண்டாம். பாதியில் திருப்பி எடுத்துக்கொண்டு போவ தற்காக என்னை மன்னிக்கவும்'' என்ருன்.

''ஏன்? உங்கள் படத்தை ஜமீன்தார் ஒருவர் இருபத் தைந்தாயிரம் விலைக்கு வாங்கிக் கொள்வதாக வாக்களித்து விட்டுப் போயிருக்கிருரே!''

''அந்தப் பணம் எனக்கு வேண்டாம். என் சித்திரத்தின் மதிப்பு எவ்வளவு என்பதைக் காட்டுவதற்காகத்தான் நான் விலை போட்டிருந்தேனே தவிர, விற்பதற்காக அல்ல. நான் இதை விலைக்கு விற்க விரும்பவில்லை'' என்று கூறிவிட்டுச் சித்திரத்தை எடுத்துக்கொண்டு நேராக தமயந்தியின் வீட்டுக்குச் சென்ருன். தான் வரைந்த தன் தாயின் படத்தை, அந்த உயிரோவியத்தை, உள்ளத்தை உருக்கும் அந்தச் சோக வடிவத்தை, அந்தப் பத்தினித் தெய்வத்தை, அந்த வீட்டில் மாட்டப்பட்டிருந்த தன் தந்தையின் படத் துக்குப் பக்கத்தில் மாட்டிவிட்டான்.

''தமயந்தி! இந்தப் படத்தை நான் உன்னுடைய பிறந்த தினப் பரிசாக அளிக்கிறேன். இதை நீங்கள் என்றென்றும் இதோ இங்கே உள்ள இந்த போட்டோவுக்குப் பக்கத்திலேயே வைத்திருக்க வேண்டும். அதற்கு இஷ்ட மில்லை யென்ருல் இப்போதே சொல்லி விடுங்கள். நான் இதை என் கையோடு எடுத்துக்கொண்டு போய்விடுகிறேன்'' என்ருன்.

தமயந்திக்கும் அவள் சகோதரிக்கும் ஒன்றுமே புரிய வில்லை. பரிசாகக் கிடைத்த அந்த அற்புதமான கலை நுட்பம் மிக்க படத்தை இழப்பதற்கு அவர்களுக்கு மனம் வரவில்லை. ராஜுவின் இஷ்டப்படியே அப்படத்தை அந்த போட்டோ வுக்குப் பக்கத்திலேயே வைப்பதற்கு ஒப்புக்கொண்டார்கள்.


சில தினங்களுக்கெல்லாம் அந்த வீட்டுக்கு மாசிலாமணி வந்தார். மகிழ்ச்சியுடன் உள்ளே நுழைந்தவர் அங்கே தன் போட்டோவுக்குப் பக்கத்தில் தன் மனைவியின் படம் மாட்டப்பட்டிருப்பதைப் பார்த்துத் திடுக்கிட்டார். அந்த

உயிரோவியத்துக்கு அடியில் 'ராஜு' என்று கையெழுத்திட்டிருப்பதையும் கண்டார். அந்தப் படத்தையே வெகு நேரம் வைத்த கண் வாங்காமல் பார்த்துக்கொண்டிருந்தார்.

"சுவாமி, அந்தப் படத்தைப் பார்த்தீர்களா? எத்தனை அழகாயிருக்கிறது? அந்தக் கலை பொருந்திய முகத்தில் தெரியும் சோகத்தைப் பார்த்தீர்களா? இந்தப் புண்ணியவதி யாரோ? இந்த அம்மாளின் சோகத்துக்கு என்ன காரணமோ? பாவம், பார்ப்பதற்கே மிகவும் பரிதாபமா யிருக்கிறது. இதை எழுதியவர் ஒரு சிறந்த சைத்திரிகர். அவரிடம் என் தங்கை சித்திரம் பழகி வருகிறாள். சில தினங்களுக்கு முன்னால் அவர் என் தங்கையின் பிறந்த தின விழாவுக்காக இங்கே வந்திருந்தார். அப்போது உங்கள் போட்டோவையே வெகுநேரம் பார்த்துக் கொண்டிருந்தார். பிறகு, இருபத்தைந்தாயிரம் பெறக்கூடிய இப் படத்தை என் தங்கைக்குப் பரிசாகக் கொடுத்து, தங்கள் போட்டோவுக்குப் பக்கத்திலேயே மாட்டி வைக்க வேண்டும் என்றும் சொல்லிவிட்டுப் போனார்" என்றாள் லலிதா. லலிதாவின் சொற்கள் ஒவ்வொன்றும் அவர் இதயத்தைப் பிளந்தன. அவர் கண்களிலிருந்து கண்ணீர் பெருகியது. "லலிதா, நான் வருகிறேன். இது என் மனைவியின் படம். ராஜு என்னுடைய மகன். இன்றோடு நீ என்னை மறந்து விடு" என்று கூறிவிட்டு வெளியே போய் விட்டார் மாசிலாமணி.

அது முதல் அவர் சென்னைக்குச் செல்வதையே அடியோடு நிறுத்திவிட்டார். இதை அறிந்த பாகீரதியின் முகத்தில் இருந்த ஏக்கம், சோகம் எல்லாம் மறைந்து விட்டன. பழைய ஆனந்தமும் களையும் அவள் முகத்தில் பரிபூரணமாகக் குடிகொண்டன.

அந்தச் சித்திரத்தின் மூலம் தனக்குக் கிடைக்க விருந்த பொருளையும், புகழையும் இழந்தது பற்றி ராஜு துளிக்கூட வருத்தப்பட வில்லை. அதை காட்டிலும், ஒரு நிகரற்ற செல்வத்தைத் தன் தாய்க்கு அளித்த பெருமையும் திருப்தியும் அவன் உள்ளத்தில் நிரம்பியிருந்தன.




பொழுது புலரும் நேரம். கல்யாணியின் விழி மலர்கள் மலர்ந்தன. கொல்லைப்புறத்து மல்லி அரும்புகள் பனி நீரில் தோய்ந்து பல் காட்டிச் சிரித்தன.

''ம்மாஆ...!'' என்று அழைத்தது கொட்டிலிலிருந்த கன்றுக்குட்டி.

ஆனால், கன்றின் குரல் கேட்டுக் கனிந்து வந்து பால் கொடுக்க அதன் தாய்ப் பசு இல்லை.

கண் விழித்த கல்யாணி கொட்டிலுக்கு ஓடிச் சென்றாள். கன்றுக் குட்டியை அன்போடு தடவிக் கொடுத்தாள். ஆதரவோடு புல் எடுத்துப் போட்டாள்.

அந்தச் சமயம் அவளுக்குத் தன்னுடைய தாயின் நினைவு தோன்றவே, துக்கம் அவள் கண்களைக் கலக்கி விட்டது.

ஆம்; கல்யாணியும் தாயற்ற ஒரு சேய்தான்.

'அம்மா' என்று அன்போடு அழைப்பதற்கு அவளுக்கொரு அன்னை இல்லை. உள்ளத்தில் தோன்றும் உணர்ச்சி

களையெல்லாம், உரிமையோடு சொல்லிக்கொள்ள அவளுக்கொரு தாய் இல்லை.

கொட்டிலிலிருந்து திரும்பிய கல்யாணி அவசரம் அவசரமாக அடுப்பைப் பற்றவைத்து, அப்பாவுக்கும் அண்ணனுக்கும் காப்பி தயாரித்தாள்.

"அண்ணா! எழுந்திரு; காப்பி ஆறிப் போகிறது." படுக்கையிலே கிடந்த தன் அண்ணன் ராஜாமணியைப் புரட்டி விட்டாள் கல்யாணி.

கண்களைக் கசக்கிக்கொண்டே எழுந்த ராஜாமணி கடிகாரத்தைப் பார்த்தான்.

மணி ஏழரை!—திக்கென்றது அவனுக்கு. "அப்பா எழுந்துவிட்டாரா?" என்று அச்சத்தோடு கேட்டான்.

"ஆறரைக்கே எழுந்துவிட்டார். காலைப் பத்திரிகையைப் படித்துக் கொண்டிருக்கிறார். நீ இத்தனை நேரம் தூங்கிக் கொண்டிருப்பது தெரிந்தால் கோபிக்கப் போகிறார்: சீக்கிரம் எழுந்து வா!"

ராஜாமணி ஒரே ஓட்டமாக ஓடித் தோட்டத்துக்குள் மறைந்தான்.

எட்டரை மணிக்குள் கல்யாணி சமையல் வேலைகளை முடித்துக்கொண்டு, மாலைவேளை டிபனுக்காக ரொட்டியும் தயாரித்து விட்டாள்.

"அப்பா! சாப்பிட வருகிறீர்களா?" என்று அழைத்தாள்.

"ராஜாமணி எங்கே? அவனுக்கொரு தனிப் பந்தியா? ஆபீஸ் கவனமே இல்லையா, அவனுக்கு?" என்றார் அவளுடைய தந்தை மேகநாதன்.

'இதோ வந்துவிட்டேன்' என்று சொல்லிக்கொண்டே பயந்தவண்ணம் அப்பாவின் பக்கத்தில் அமர்ந்தான் ராஜாமணி. இருவருக்கும் அன்னத்தைப் பரிமாறினாள் கல்யாணி.

அப்பா எப்போதும்போல் கடுகடுப்பாகவே இருந்தார். கடந்த பத்து வருட காலத்தில் தந்தையின் முகத்தில் அவள்

ஒரு முறுவலைக் கண்டதில்லை. அவர் நாவிலிருந்து ஓர் அன்புச் சொல் வெளி வந்து அறிந்ததில்லை. உலக வாழ்க்கையையே முற்றிலும் வெறுத்தவர் போல் காணப்பட்டார் அவர். அதற்கு என்ன காரணம்? அவருடைய சுபாவமே இப்படித்தானோ? அன்பு என்பதே அவர் உள்ளத்தில் துளியும் கிடையாதோ?

ராஜாமணிக்கும் கல்யாணிக்கும் அப்பாவின் அதிசயமான போக்கு ஒரு புரியாத ரகசியமாகவே இருந்தது.

கூடத்தில் அப்பா கனைக்கும் சப்தம் கேட்டது. இருவரும் பேச்சை நிறுத்திவிட்டார்கள்.

மணி பத்து. ராஜாமணியும் கல்யாணியும் ஆபீசுக்குப் புறப்பட்டு விட்டார்கள்.

கார்னேஷன் சைக்கிள் தொழிற்சாலையில் கல்யாணி ஒரு டைப்பிஸ்ட். நடராஜன் ஒரு சூப்பரிண்டெண்ட். அவனுடைய சந்தன மேனியையும், சுருட்டை மயிரையும் முதல் முதலாகப் பார்த்தபோதே கல்யாணி தன் இதயத்தை அவனுக்குப் பறி கொடுத்துவிட்டாள். நடராஜனும் அப்படித்தான். கல்யாணியைக் காணும்போதெல்லாம் அவனுக்கு என்னென்னவோ கற்பனைகள் தோன்றின. அவள் அருகில் இருக்கும் சமயங்களில் தன் நண்பர்களிடம் ஏதாவது வேடிக்கையாகப் பேசுவான். தன் ஹாஸ்யத்தைக் கல்யாணி ரசிக்கிறாளா என்று கடைக்கண்ணால் கவனிப்பான். கல்யாணி சில சமயம் சிரிப்பாள். சில சமயம் சிரிப்பை அடக்கிக் கொண்டு மௌனமாகத் தன் அப்பா மாதிரி 'உம்'மென்று முகத்தை வைத்துக்கொண்டு விடுவாள். அம்மாதிரி சந்தர்ப்பங்களில் நடராஜன் ரொம்பவும் திண்டாடிப் போவான். கல்யாணிக்கு உண்மையாகவே தன்னிடம் காதல் இருக்கிறதா இல்லையா என்று விளங்கவில்லை அவனுக்கு.

ஒரு நாள் அவனைத் தனியாகச் சந்தித்துத் தன் விருப்பத்தைச் சொல்லியே விட்டான். அவளும் அவனிடம் தனக்குள்ள காதலைத் தெரிவித்தாள். அன்று முதல் இருவருடைய நட்பும் படிப்படியாக வளர்ந்து வந்தது. நடராஜனைத் தன்

வாழ்க்கைத் துணைவனுக்கிக் கொள்ளத் துடித்தது அவள் உள்ளம்.

ஆனால், இந்த விஷயத்தை அப்பாவிடம் எப்படிச் சொல்வது? அதற்குரிய தைரியம் தனக்கு ஏது? சொன்னால் அதை அவர் எப்படி ஏற்றுக்கொள்வாரோ? கல்யாணி தன் தாயை நினைத்துக் கண்ணீர் உகுத்தாள். தன் தங்கை அழுது கொண்டிருப்பதைக் கண்ட ராஜாமணி, "கல்யாணி; நீ ஏன் அழுகிறாய்? உனக்கு என்ன குறை? அப்பா ஏதாவது சொன்னாரா?" என்று அன்போடு கேட்டான்.

"அதெல்லாம் ஒன்றுமில்லை..."

"பின் என்னதான் சொல்லேன்?"

கல்யாணி மௌனமாயிருந்தாள்.

"சொல்ல மாட்டாயா, கல்யாணி! உன் சொந்த அண்ணனிடத்தில் கூற முடியாத ரகசியம் அப்படி என்ன இருக்க முடியும்?"

"ஒன்றுமில்லை, அண்ணா! எனக்குச் சொல்லவே வெட்கமா யிருக்கிறது!"

"ஓகோ! எனக்குப் புரிந்து விட்டது. நடராஜன் விஷயம் தானே? உனக்கும் அவனுக்கும் உள்ள நட்பு எனக்குத் தெரியும். நடராஜனே என்னிடம் சொன்னான். அப்பா விடம் இந்த விஷயத்தைச் சொல்லி எப்படியாவது அவரைச் சம்மதிக்க வைக்க வேண்டும். அடுத்த தை மாதத்திற்குள் உனக்கும் நடராஜனுக்கும் கலியாணத்தை முடித்துவிட வேண்டும். அவ்வளவுதானே? அடி அசடே! இதற்காகவா அழுகிறாய்?"

கூடத்தில் அப்பா கனைக்கும் சப்தம் கேட்டது.

"ராஜாமணி!"

அப்பாவின் கம்பீரமான குரல் கேட்ட மகன் அடக்க ஒடுக்கத்துடன் அவர் முன் போய் நின்றான்.

"அங்கே யாருடன் பேசிக் கொண்டிருந்தாய்?"

"கல்யாணியோடு தான்."

"என்ன விஷயம்?"

"எனக்கு ஒரு நண்பன் இருக்கிறான். நடராஜன் என்று பெயர். அவனுக்கு இன்னும் கலியாணம் ஆகவில்லை. கல்யாணி வேலை செய்யும் சைக்கிள் தொழிற்சாலையில் தான் அவனும் வேலை பார்க்கிறான். இன்று கல்யாணியின் திருமணம் பற்றி அவனிடம் பேசிப் பார்த்தேன். தனக்குச் சம்மதம்தான் என்றும், தன் தந்தையைக் கேட்டு மற்ற விஷயங்களை முடிவு செய்து கொள்ளும்படியும் கூறினான்."

கல்யாணி மறைந்திருந்தபடி இந்தயெல்லாம் கேட்டுக் கொண்டிருந்தாள். 'அப்பா என்ன சொல்வாரோ?' என்று அவள் இதயம் பயத்தினால் படபடத்தது. ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தாள். அப்பாவின் கண்களில் லேசாக நீர் துளித்திருப்பதைக் கண்டு திடுக்கிட்டாள்.

'இதென்ன? அப்பா ஏன் அழுகிறார்?'—அவளுக்கு ஒன்றுமே புரியவில்லை.

மேகநாதன் கேட்டார்: "நடராஜனா அவன் பெயர்? அவன் யாருடைய பிள்ளை என்று சொன்னாய்?"

"வெல்ல மண்டி சிவ சங்கரனுடைய பிள்ளை."

"சிவசங்கரனா? அவனை எனக்கு நன்றாகத் தெரியுமே. ரொம்ப நாள் பழக்கமாயிற்றே? அது சரி; கல்யாணியின் கல்யாணத்துக்கு இப்போது என்ன அவசரம்? அந்தக் கவலை இப்போது உனக்கு வேண்டாம்" என்றார் மேகநாதன்.

கல்யாணிக்கும் வயதாகி விட்டதல்லவா? அவளும் எத்தனை நாள் கன்னிப் பெண்ணாகவே காலம் கழிக்க முடியும்? ஒரு நல்ல இடத்தில் அவளை வாழ வைக்க வேண்டாமா? தாங்கள்தான் சிவசங்கரனைப் பார்த்துக் கலியாணத்தை நிச்சயம் செய்துகொண்டு வரவேண்டும்."
— துணிந்து கேட்டுவிட்டான் ராஜாமணி.

"நானா? நான் போகமாட்டேன்" என்று கூறிவிட்டு வெளியே போய் விட்டார் மேகநாதன். அப்பா கல்யாணி

யின் கல்யாணத்துக்குச் சம்மதிக்கிருரா இல்லையா என்றே புரியவில்லை ராஜாமணிக்கு.

'' அண்ணு! எனக்குக் கலியாணமாகிவிட்டால் அப்புறம் உனக்கும் அப்பாவுக்கும் யார் சமைத்துப் போடுவார்கள்? நீ முதலில் கலியாணம் செய்துகொண்டு உன் மனைவி இந்த வீட்டுக்கு வந்த பிறகுதான் நான் மணம் செய்துகொள் வேன். இல்லாவிட்டால் எனக்கும் கலியாணம் வேண்டாம் '' என்று பிடிவாதம் பிடித்தாள் கல்யாணி.

'' அசடே, ஆண்களுக்கு எந்த நிமிஷத்திலும் கலியாணம் ஆகிவிடும். பெண்கள் விஷயம் அப்படியில்லை. உன் மனதுக் குப் பிடித்த கணவன் கிடைக்கும்போதே கலியாணத்தை முடித்துவிடுவதுதான் நல்லது '' என்ருன் ராஜாமணி.

'' அது சரி அண்ணு! கலியாணத்தை யார் நிச்சயம் செய்வது? அப்பாவோ ஒரு வழிக்கும் வரமாட்டேன் என்கிருர். இதற்கு என்ன செய்வது?''

'' கல்யாணி! நீ கவலைப்படாதே. நடராஜனின் தந்தை யிடம் நானே விஷயத்தைச் சொல்லித் திருமணத்துக்கு ஏற்பாடு செய்கிறேன் '' என்ருன் ராஜாமணி.

'' ஆமாம்; திருமணம் நிச்சயமாளுல் ஐயாயிரம் ரூபாயாவது வேண்டுமே! அவ்வளவு பணத்துக்கு எங்கே போவது? அப்பாவிடமும் பணம் கிடையாதே '' என்ருள் கல்யாணி.

அவர்கள் உள்ளம் குழம்பியது.

அப்போது அப்பாவின் கனைப்புக் குரல் கேட்கவே இரு வரும் பேச்சை நிறுத்தி விட்டார்கள்.

"கல்யாணி, நடராஜனின் தந்தையைக் கண்டு கலியாணத்துக்கு முகூர்த்தம்கூட வைத்துகொண்டு வந்து விட்டேன். தை மாதம் பதினேழாம் தேதி முகூர்த்தம்'' என்று சொல்லிக் கொண்டே உள்ளே நுழைந்தான் ராஜா மணி.

"சரி, அண்ணா! அப்பாவிடம் சொன்னாயா? அப்பா ஒப்புக் கொண்டாரா? பணத்துக்கு என்ன செய்யப் போகிறாய்?"

"சொன்னேன்; அப்பா 'சரி சரி' என்று தலையை ஆட்டினார். அவ்வளவுதான். பணத்துக்கு என்ன செய்வதென்று எனக்கும் புரியவில்லை" என்றான் ராஜாமணி.

நாட்கள் இயந்திரம்போல் ஓடின. முகூர்த்த நாள் நெருங்கிக் கொண்டிருந்தது. ஆனால் மேகநாதனோ கிணற்றில் கல்லைப் போட்டதுபோல் உட்கார்ந்து கொண்டிருந்தார். அவர் முகத்தில் கடுகடுப்பும், கவலையும் எப்போதும்போல் தாண்டவமாடிக் கொண்டிருந்தன.

"முகூர்த்தத்துக்குத் தேதி வைத்துவிட்டுப் பணத்தைப் பற்றிச் சிறிதும் கவலையில்லாமல் உட்கார்ந்திருக்கிறாரே, அப்பா" என்று அண்ணனும் தங்கையும் யோசித்தார்கள்.

கலியாணத்துக்கு நாலு தினங்களுக்கு முன்னால் மேகநாதன் திடீரென்று வெளியே புறப்பட்டார். அன்றிரவே ஐயாயிரம் ரூபாய் பணத்துடன் வீட்டுக்குத் திரும்பி வந்தார். அண்ணனும் தங்கையும் ஆச்சரியத்தில் ஆழ்ந்தனர்.

'அப்பாவுக்கு இவ்வளவு பணம் எப்படிக் கிடைத்தது?' —இதுதான் அவர்கள் ஆச்சரியத்துக்குக் காரணம்.

முகூர்த்தத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளில் மும்முரமாக முனைந்தார் மேகநாதன். தெருவில் பந்தல் போட்டு வாழை மரங்கள் கட்டப்பட்டன. அழைப்பிதழ்கள் அச்சடிக்கப் பட்டன. மேள வாத்தியம் முழங்கிற்று. நடராஜனுக்கும்—கல்யாணிக்கும் குறித்த முகூர்த்தத்தில் 'ஜாம் ஜாம்' என்று விவாகம் நடந்தேறியது.

எல்லாம் முடிந்து, மறு நாள் பொழுது விடிந்தது. இதென்ன விந்தை! திடீரென்று மேகநாதனைக் காணவில்லை. அவர் படுத்திருந்த கட்டில்மீது ஒரு கடிதம் கிடந்தது. அதை எடுத்து ஆவலோடு படித்தாள் கல்யாணி.

"அன்புள்ள கல்யாணி, ராஜாமணி!

இக் கடிதத்தைக் கண்டு நீங்கள் இருவரும் ஆச்சரியப் படுவீர்கள். வாழ்க்கையில் செய்யக்கூடாத ஒரு மாபெரும்

தவற்றை நான் செய்துவிட்டேன். ஏன் தெரியுமா? உங்கள் மீது நான் கொண்டுள்ள அன்பு காரணமாகத்தான். நீங்கள் இருவரும் பலதடவைகள் என்னைப்பற்றிப் பேசிக் கொண்டிருந்ததையெல்லாம் நான் மறைந்திருந்து கேட்டுக் கொண்டிருந்தேன். 'அப்பா ஏன் நம்மிடம் அன்பாயில்லை?' என்று ஒவ்வொரு முறையும் நீங்கள் பேசிக் கொண்டபோது என் இதயம் சுக்குநூருக வெடித்து விடும்போல் ஆகிவிடும். ஆனால், நான் ஏன் உங்களிடம் அன்பு காட்டவில்லை என்பதை வெளிப்படையாகச் சொல்லிக் கொள்ள முடியாத நிலையில் அவஸ்தைப் படுவேன்.

அதற்கு என்ன காரணம் தெரியுமா? உங்கள் இருவரிடமும் எனக்கிருந்த அளவற்ற அன்புதான்.

நான் உங்களிடம் கொண்டிருந்த அன்புக்கு இணையாக இந்த உலகத்தில் வேறு எதையுமே சொல்லிவிட முடியாது. ஆயினும் என் உள்ளத்திலிருந்த அன்பு நீறுபூத்த நெருப்பாகவே மறைந்து கிடந்தது. வெளித் தோற்றத்துக்கு அன்பில்லாதவனைப்போலவே நடந்துகொண்டேன். அதனால் நீங்கள் இருவரும் என்னை இதயமற்றவன் என்றுகூட எண்ணிவிட்டீர்கள். சுவைமிக்க இனிய சுளைகளைத் தன்னுள் அடக்கிக் கொண்டுள்ள பலாப்பழம் வெளிப்புறத்தில் ஒரே முள்ளாகத் தோற்றமளிக்கவில்லையா? அதைப் போலவே தான் என் வெளித் தோற்றத்தைக் கண்ட நீங்களும் என் உள்ளத்தில் அடங்கிக் கிடந்த அன்பை அறிய முடியாதவர்களாக இருந்தீர்கள். ஆனால், உங்கள் இருவருக்காகவே இதுவரை நான் உயிர் வாழ்ந்தேன். என் அன்பையெல்லாம் உங்களிடமே செலுத்திக் கொண்டிருந்தேன். வெளிப்படையாக அல்ல; மறைமுகமாகத்தான்.

அந்த ரகசிய அன்புக்குக் காரணம் என்னவென்று உங்களுக்கு விளங்கவில்லை அல்லவா? என் அருமைக் குழந்தைகளே! சொல்கிறேன் கேளுங்கள்: இந்த உலகத்தில் நான் யார் மீதெல்லாம் அன்பு பாராட்டினேனோ, அவர்களையெல்லாம் நான் இழந்துவிட்டேன்; அல்லது அவர்களுக்கெல்லாம் ஏதாவது ஒரு துன்பம் நேர்ந்து கொண்டிருந்தது. என்னுடைய அன்பின் சக்தி அத்தகையது.

முதன் முதலில் நான் உங்கள் தாயை மணந்து கொண்டேன். அவளிடம் மாருத அன்பு செலுத்தினேன். அதன் பலன் என்ன தெரியுமா? அவள் என்னை இந்த உலகத்தில் தனியாகத் தவிக்கவிட்டுப் பிரிந்து போய்விட்டாள். அப்புறம் எனக்கு மிஞ்சிய செல்வங்கள் நீங்கள் இருவரும்தான்.

கல்யாணி, இப்போது நம் வீட்டில் வளரும் கன்றுக் குட்டியை ஈன்றெடுத்த தாய்ப் பசு ஏன் இறந்து விட்டது என்று உனக்குத் தெரியுமா? நான் அதனிடம் அன்பு செலுத்தினேன். தினமும் புல்போட்டு ஆசையோடு வளர்த்தேன். முடிவு - அந்தப் பசு இறந்து விட்டது.

நம் தோட்டத்தில் உள்ள தென்னை மரம் என்ருவது காய்த்துப் பார்த்திருக்கிருயா? இல்லையே? அது என்றுமே காய்க்காது. ஏன் தெரியுமா? நான் அதை அன்போடு தினமும் காலையும் மாலையும் தண்ணீர் ஊற்றி வளர்த்தேன். அதனுடைய பலன் அது காய்க்காமலே போய்விட்டது. இவ்வளவுக்கும் பின்னர் நான் எப்படி உங்களிடம் அன்பு செலுத்த முடியும்? என் உள்ளத்தைக் கல்லாக்கிக் கொண்டேன். அன்பற்றவனுக நடந்து கொள்கிறேன்.

ஆயினும் சிற்சில சமயங்களில் என் அன்பை உங்கள் மீது வெளிப்படையாகப் பொழிந்துவிட என் உள்ளம் துடிக்கும். ஆனுல், அதனுல் ஏற்படக்கூடிய விபரீத முடிவுக்கு அஞ்சி அப்படியே அடக்கி விடுவேன்.

கடைசியில் ஒரு நாள் என் இதயத்தின் அடிவாரத்தில் அமுங்கிக் கிடந்த அந்த அன்பைச் சோதிக்கும் காலம் வந்து விட்டது.


உன் திருமண விஷயம்தான். நீயும் ராஜாமணியும் அன்று நடராஜன் விஷயமாகப் பேசிக் கொண்டிருந்ததை நான் மறைந்திருந்து கேட்டுக் கொண்டிருந்தேன். அந்தச் செய்தியைக் கேட்டபோது நான் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. எப்படியும் என் அன்பு மகளின் விருப்பத்தை நிறைவேற்றிவிடத் துடித்தது என் உள்ளம். ஆயினும் நானே போய்க் கலியாணத்தை நிச்சயம் செய்யவில்லை.

என் அன்பு காரணமாக அந்தக் கலியாணம் தடைப்பட்டு விடக்கூடாதே என்ற கவலேதான். ஆனாலும் ராஜாமணி முயற்சி செய்ததை நான் தடுக்கவில்லே. சம்மதம் போலவும் சம்மதம் இல்லாது போலவும் ஜாடைமாடையாக இருந்து விட்டேன். கடைசியில் கலியாணம் நிச்சயமாயிற்று. 'அப்பா பணத்துக்கு என்ன செய்வார்?' என்று கவலேப் பட்டீர்கள். உங்கள் இருவருடைய தவிப்பைக் கண்டு நான் உருகிவிட்டேன். நல்ல நிலேயிலிருந்து சறுக்கிவிட்ட நாணயம் தவருத ஓர் ஏழை நான். எப்படியும் உன் கலியாணத்தை நடத்தி விடுவதென்று முடிவு செய்தேன். பணத்துக்கு எங்கே போவது? எனக்கு ஒரு வழியும் புரியவில்லே. அமைதி இழந்து விட்டேன்.

கால் போன போக்கில் எழுந்து நடந்தேன். எப்படியோ பணத்தைக் கொண்டு வந்து உன் கலியாணத்தை நடத்தி விட்டேன். கல்யாணி! அந்தப் பணம் எப்படிக் கிடைத்தது என்று மட்டும் கேட்காதீர்கள். எப்படியோ கிடைத்தது. அவ்வளவுதான். அந்த விவரத்தை நான் சொல்ல விரும்ப வில்லே. இதுவரை என் வாழ்க்கையில் ஒரு சிறு தவறுகூடச் செய்தறியாத நான், மாபெரும் தவறு ஒன்றைச் செய்து விட்டேன். குற்றம் செய்த பிறகு - மானம் இழந்த பிறகு - இந்த உலகத்தில் நான் எப்படி வாழ முடியும்? நான் செய்த குற்றத்துக்கு நானே தண்டனே விதித்துக் கொண்டு விட்டேன். அதுதான் மரணம்.

என் அன்புச் செல்வங்களே! இதுதான் என் அன்பின் ரகசியம். என் மரணத்தில் ஒரு மாசு இருந்தபோதிலும் என் அன்பு மக்களின் ஆசையை நிறைவேற்றிய திருப்தி எனக்கு இருக்கிறது. அதுவே போதும் எனக்கு.

இப்படிக்கு,
உங்கள் அன்புள்ள
அப்பா.''



# கழுகு

பெரிய கடை வீதிப்பக்கம் போகிறவர்கள் யாராயிருந்தாலும் ராயர் கிளப்புக்குள் நுழையாமல் திரும்பமாட்டார்கள். பசியே இல்லாதவர்கள்கூட அந்தக் கிளப்புக்குள் நுழைந்து ஒரு கப் காபியாவது சாப்பிட்டால்தான் திருப்தி அடைவார்கள்.

ராயர் கிளப்பிலிருந்து வீசும் வெங்காய வடையின் 'கம்'மென்ற வாசனை வீதிவழியே செல்கிறவர்களைக் கவர்ந்து இழுக்கும்.

கிளப்புக்குள் நுழைந்து விட்டாலோ முதலாளி முகுந்தராவின் உபசாரம் நம்மைத் திணற அடித்துவிடும்.

''அண்ணா, அண்ணா!'' என்று அவர் கிளப்புக்கு வருகிறவர்களை அன்போடு அழைக்கும்போது அந்தக் குரலில் குளுமை இருக்கும். இனிமை இருக்கும், பண்பு இருக்கும், மரியாதை இருக்கும், உபசார இருக்கும்.

முகுந்த ராவைத் தெரியாதவர்கள் அந்த ஊரில் ஒருவருமே கிடையாது. சாதுவான மனிதர். எப்போதும் சிரித்த முகம். குணத்திலோ பச்சை வாழைப்பட்டை. ராயர் கிளப் தோன்றிய பிறகு பெரிய கடைவீதி ஏற்பட்டதா, அல்லது பெரிய கடைவீதி தோன்றிய பிறகு ராயர் கிளப் ஏற்பட்டதா என்பது ஒருவருக்குமே தெரியாது.

கிளப் வாசலில் உயரமான தென்னங்கீற்றுப் பந்தல். பந்தலுக்குப் பந்தல் போட்டதுபோல் ஒரு பெரிய வேப்ப மரம். பக்கவாட்டில் மூங்கில் தட்டிகள். அந்தத் தட்டிகளுக்குமேலே ஒன்றன்மீது ஒன்ருக ஒட்டப்பட்ட சினிமா விளம்பரப் 'போஸ்டர்'கள். வாசலில் நிரந்தரமாகக் கட்டப்பட்ட சிமெண்டுத் தொட்டி. அதற்குப் பக்கத்தில் ஒரு நாட்டு நாய்.

பந்தலுக்குள் குழையும் முன்பே ராயர் நம்மைக் கவனித்து விடுவார்.

"வாங்க அண்ணு, வாங்க! எங்கே இரண்டு நாளாகக் காணேம்?" என்று சிரித்துக்கொண்டே வரவேற்பார்.

இதற்குள் அவர் கைகள் மேஜைமீதுள்ள மணியை அடிக்கும்.

"அடே பிந்து! யார் வந்திருக்கா பாருடா. அண்ணுவுக்குச் சூடா ரெண்டு ரவா தோசை போட்டுக்கொண்டு வாடா! அதுக்கு முன்னுலே ஜில்லுனு ஒரு டம்ளர்லே பானை ஜலம் கொண்டு வந்து கொடு. சீக்கிரம்...ஓடியா..."

"பானைத் தண்ணீர் தானு? 'ஐஸ் வாட்டர்' இல்லையா?" என்று கேட்டால், "அது எதுக்கு அண்ணு? உடம்புக்கு உஷ்ணம்! பானைத் தண்ணீர் சாப்பிடுங்கள்; சில்லென்று இருக்கும்" என்று கூறிக்கொண்டே தாமே உள்ளே சென்று, தம் கையாலேயே தண்ணீர் எடுத்துவந்து கொடுப்பார்.

கிளப்புக்கு வருகிறவர்கள் சும்மாப் போக மாட்டார்கள். அவரவர்கள் குடும்ப சமாசாரம், ஊர் அக்கப்போர், முனிசிபல் தேர்தல் எல்லாவற்றையும்பற்றி ராயரிடம் ஒரு 'ஆவர்த்தம்' பேசி முடித்துவிட்டுத்தான் செல்வார்கள்.

ராயர் எந்தக் கட்சியிலும் சேரமாட்டார். பொதுவாக எதிலும் பட்டுக் கொள்ளாமல் அவரவருக்குத் தகுந்தாற் போல் பக்குவமாகப் பதில் சொல்லி அனுப்பி விடுவார்.

''என்னய்யா ராயரே, நீரும் இத்தனை வருஷமா ஓட்டல் நடத்துகிறீரே? ஜம்மென்று ஒரு கட்டடத்தைக் கட்டிப் போடக் கூடாதா? உமக்குப் பிறகு ஓட்டல் வைத்தவர்களெல்லாம் கட்டடம் கட்டி விட்டார்களே! நீர் மட்டும் இப்படி தென்னங்கீற்றுக் குடிசையிலேயே எத்தனை நாளைக்குக் காலம் கடத்தப் போகிறீர்?' என்று கேட்டால், ''வேப்ப மரத்திலேயும் தென்னங்கீத்துலேயும் இருக்கிற சுகம் வேறு எதுக்கு அண்ணு வரும்? கட்டடம் அழகா இருந்துட்டாப் போதுமா? காப்பியும் பலகாரமும் ருசியாயிருக்க வேண்டாமா?'' என்பார்.

''அது உண்மை; எங்கே போனாலும் ராயர் கிளப்பிலே வந்து காப்பி சாப்பிட்டாத்தானே திருப்தி ஆகுது?'' என்பார் பக்கத்தில் உட்கார்ந்திருக்கும் இன்னொரு ஆசாமி.

வேறொருவர் வருவார். ''இதென்னய்யா, இட்லிக்கு சாம்பார் இல்லேங்கறுரு உங்க ஆளு?'' என்பார் கோபமாக.

சாம்பார் தீர்ந்து விட்டாலும், 'சாம்பார் தீர்ந்து விட்டது. சட்னிதான் இருக்கிறது' என்று சொல்லமாட்டார் ராயர். கிரித்துக்கொண்டே கல்லாவை விட்டு எழுந்து சென்று அந்த ஆசாமியின் காதில் ரகசியமாக, ''உங்களுக்கு சாம்பார் இல்லேன்னு சொல்லுவோமா? இன்றைக்கு அமாவாசை பாருங்க. வெங்காய சாம்பார் உங்களுக்கு உதவாதுன்னு சொல்லி யிருப்பான். தேங்காய்ச் சட்னி போடச் சொல்லட்டுமா?'' என்று அந்த ஆசாமிக்குக் கோபம் வராதபடி இனிமையாகப் பேசி நிலைமையைச் சமாளித்து அனுப்புவார்!

இதற்குள் இன்னொருவர், ''என்ன ராயரே, ஒரு தோசைக்குச் சொல்லி ஒன்பது மணி நேரம் ஆவுது! இங்கே ஒரு சப்ளையரும் திரும்பி வரல்லே. எழுந்து போக வேண்டியதுதானு?'' என்று சத்தம் போடுவார்.

"யாரு? மருந்துக்கடை மாணிக்கமா? அவசரப்படா தீங்க தம்பி! எல்லோருக்கும் போல உனக்கும் கொடுத்துட முடியுமா? ஸ்பெஷல் தோசையாப் போட்டிருப்பாங்க, கொஞ்சம் பொறு, இதோ முறுகலா வந்துவிடும்" என்று சமாதானப் படுத்துவார்.

"என்ன ராயர்வாள்! வெக்கை தாங்கல்லியே, இரண்டு மின்சார விசிறி போடக் கூடாதோ?" என்று கேட்பார் வழக்கமாக வரும் வக்கீல் குப்புசாமி அய்யங்கார்.

"ஸார்வாளுக்கு 'பான்'லேயே இருந்து பழக்கம்! குளுகுளுன்னு வேப்பங்காற்று வீசுகிறபோது மின்சார விசிறி எதுக்கு?" என்பார் ராயர்.

இப்படி ஆளுக்குத் தக்கபடி எல்லாம் பேசி, அனைவரையும் திருப்தி செய்து அனுப்புவதில் கைதேர்ந்தவர் ராயர்.

சில மாதங்களுக்கு முன் ஒருநாள்...

அதே பெரியகடை வீதியின் மற்றொரு கோடியில் 'கிருஷ்ண விலாஸ்' என்றொரு புதிய ஓட்டல் ஆரம்பமாயிற்று. அந்த இடத்தில் பூட்டப்பட்டுக் கிடந்த ஒரு பழைய கட்டடத்தை விலைக்கு வாங்கிப் புதுப்பித்து புதிய ஓட்டல் ஒன்றைத் தொடங்கினார் கிருஷ்ணமணி. ஆரம்ப தினத்தன்று வாசலில் வாழை மரம், பாண்டு வாத்தியம் எல்லாம் அமர்க்களப்பட்டன.

சாம்பிராணிப் புகை, ஊதுவத்தி வாசனை, ரேடியோ சங்கீதம், மின்சார விசிறி, குளிர் பானங்கள், நிலைக் கண்ணாடிகள், எவர்சில்வர் பாத்திரங்கள், வழவழப்பான மேஜை நாற்காலிகள் - இத்தனை ஆடம்பரங்களும் சேர்ந்து கிருஷ்ண விலாஸை மிகவும் கவர்ச்சிகரமாக்கின.

கூட்டம் சொல்லிச் சாத்தியமில்லை. முதல் நாள் அன்று எந்த ஓட்டலுக்குமே கூட்டம் வருவதில் வியப்பில்லை அல்லவா? அன்று ராயர் ஓட்டலில் ஈ காக்கை இல்லை. ஈ காக்கைகளெல்லாம்கூடக் கிருஷ்ண விலாஸுக்குப் பறந்து போய்விட்டிருந்தன!

பெரிய கடை வீதியில் எத்தனையோ ஓட்டல்கள் ஆரம்ப மாகி, மூடு விழாவும் நடந்துவிட்டது. அதனாலெல்லாம் ராயர் கிளப் வியாபாரம் பாதிக்கப்பட்டதே இல்லை. ஆரம்ப தினத்தன்று எல்லாரும் அங்கே போவார்கள். மறுநாளே பழையபடி ராயர் கிளப்புக்கே திரும்பி வந்து விடுவார்கள். இது ராயருக்கு மிகவும் பழக்கமான விஷயம். தனக்குண்டான வியாபாரம் எப்போதும் நடந்துவிடும் என்பதில் அவருக்கு அசைக்கமுடியாத நம்பிக்கை!

புதிய ஓட்டல் முதலாளி கிருஷ்ணமணி உட்கார்ந்திருந்த 'காஷ் டேபிளை'ச் சுற்றிப் பித்தளைக் கிராதிகள் பளபளத்தன. கிருஷ்ண விலாஸ் முதலாளி பாலக்காட்டைச் சேர்ந்தவர். ரொம்ப நல்ல மனிதர்தான். ஆனால் சொல்லில் இதம் இருக்காது. முகத்தில் எப்போதும் எள்ளும் கொள்ளும் வெடித்துக் கொண்டிருக்கும். யாருக்கும் வணங்கி பதில் சொல்ல மாட்டார். வெட்டு ஒன்று துண்டு இரண்டாகத் தான் பேசுவார். ஓட்டல் சிப்பந்திகளிடமும் சரி, சாப்பிட வருகிறவர்களிடமும் சரி, ஒரே கண்டிப்புத்தான். இதனால் ஊரில் அவருக்குப் பொல்லாதவர் என்ற பெயர் ஏற்பட்டு நிலைத்து விட்டது.

"ஒரே புழுக்கமாயிருக்கிறது. அந்த விசிறியைக் கொஞ்சம் போடச் சொல்கிறீர்களா?" என்று யாராவது அவரைக் கேட்டால், "ஏன் ஐயா, அதோ அந்த மூலையில் விசிறி சுற்றிக்கொண்டிருக்கிறதே கண் தெரியல்லே, அங்கே போய் உட்காருங்களேன்" என்பார், முகத்தில் அறைந்த மாதிரி.

"ஐயா, இந்தக் காப்பிக்குப் பால் போதவில்லை. கொஞ்சம் பால் கொண்டுவரச் சொல்லுங்கள்" என்று அவரிடம் யாரும் கேட்டுவிட முடியாது.

"காப்பிக்குப் பால் போதாதா? அப்படியானால் எங்களுக்குக் காப்பி தயாரிக்கத் தெரியாது என்று சொல்கிறீர்களா? உமக்குப் பால் போதவில்லையென்றால் அது எங்கள் காப்பியின் குற்றம் இல்லை. இஷ்டமிருந்தால்

சாப்பிடுங்கள். இளலையென்றால் வேறு ஓட்டலைப் பார்த்துச் செல்லுங்கள்'' என்பார் அலட்சியமாக.

"ஐயா, இட்லிக்கு சாம்பார் போடச் சொல்லுங்க!'' என்பார் ஒருவர்.

"ஏன் ஐயா, சட்னி போட்டப்புறம் சாம்பார் வேறே கேக்கறீங்க? ஏதாவது ஒண்ணு தான் போட முடியும்.'' - இது தான் கிருஷ்ணமணியின் பதில்.

காலையில் ஓட்டல் திறந்ததும் கிருஷ்ண விலாஸுக்குள் கையில் சில்லறை இல்லாமல் நோட்டுடன் செல்லக்கூடாது;

"ஏன் சார், காலையில் இரண்டணாவுக்குச் சாப்பிட்டு விட்டு ஐந்து ரூபாய் நோட்டை நீட்டறீங்களே. இது நியாயமா? இப்ப சில்லறை கிடையாது. இந்தாங்க சீட்டு, அப்புறம் வந்து பாக்கிப் பணத்தை வாங்கிட்டுப் போங்க'' என்பார்.

கிருஷ்ண விலாஸுக்கு வழக்கமாக வரும் ஆசாமி ஒருவர் ஒரு நாள் சாப்பிட்டுவிட்டு வெளியே போகும்போது பில்லைக் கிருஷ்ணமணியிடம் நீட்டி, "இந்த பில்லுக்குப் பணம் நாளைக்குக் கொடுத்து விடுகிறேன்; கையில் சில்லறை இல்லை'' என்று பல்லைக் காட்டினார்.

கிருஷ்ணமணி முகத்தைக் கடுமையாக வைத்துக் கொண்டு, "இதோ என்ன போர்டு போட்டிருக்கிறது. பார்த்தீர்களா?'' என்று தமக்குப் பக்கத்தில் மாட்டப் பட்டிருந்த போர்டைச் சுட்டிக் காட்டினார்.

"'இன்று ரொக்கம்; நாளை கடன்' என்று போட்டி ருக்குது'' என்றார் கடன் சொன்னவர்.

"பின் எதற்காகக் கடன் சொல்கிறீர்? கையில் சில்லறை இல்லையென்றால் சாப்பிடக்கூடாது. அல்லது சாப்பிடுவதற்கு முன்பே என்னிடம் கேட்டிருக்க வேண்டும். இப்போது நான் கடன் கொடுத்தால் இந்தக் கடனைக் கொடுத்துவிட்டு இன்னொரு நாள் மறுபடியும் கடன் கேட்பீர். அப்புறம் கடன் வளர்ந்துகொண்டே போகும். கடன் கொடுத்தால் உமது சக்திக்கு மீறி அதிகமாகச் சாப்பிடுவீர். அப்புறம் கடனைத்

திருப்பிக் கொடுக்க முடியாமல் திண்டாடுவீர். பிறகு என் ஓட்டலுக்கு வருவகையே நிறுத்திக் கொள்வீர். கையில் உள்ள பணத்துக்குத் தகுந்தபடி சாப்பிட்டால் சாப்பிடுகிறவர்களுக்கும் நல்லது; எனக்கும் கஷ்டமில்லை. சரி! இன்று நீர் சாப்பிட்டதற்குப் பணம் தர வேண்டாம். இனி கடன் கேட்காதீர்கள். போய்வாரும்'' என்று சொல்லி அனுப்பினார். அவ்வளவுதான்; அன்று அவமானம் தாங்காமல் தலையைக் கவிழ்த்துக்கொண்டே போன அந்த ஆசாமி அப்புறம் அந்த ஓட்டல் பக்கமே திரும்பவில்லை!

இப்படி எதற்கெடுத்தாலும் கண்டிப்புடன் நிர்த்தாட்சண்யமாக நடந்து கொண்ட கிருஷ்ண விலாஸ் முதலாளி தம் சிப்பந்திகள் விஷயத்திலாவது கொஞ்சம் கருணை காட்டுவாரா? அதுதான் கிடையாது.

எந்த சர்வராவது கண்ணாடி டம்ளரைக் கைதவறி கீழேபோட்டு உடைத்து விட்டாலும் போதும்; அவனுடைய சம்பளப் பணத்தில் டம்ளரின் விலையைப் பிடித்து விடுவார். நகரசபை உத்தியோகஸ்தர்கள் யார் வந்தாலும் பல்லைக் காட்டும் வழக்கம் அவரிடம் கிடையாது. ஒரு கப் காபி இனாமாகக் கொடுக்கும் வழக்கமும் கிடையாது. ரூல்படி எல்லாம் செய்து வைத்து விடுவார். எந்த அதிகாரிக்கும் பயப்படமாட்டார். இதனால் கிருஷ்ண விலாஸ் முதலாளியை ஒருவருக்குமே பிடிக்கவில்லை. ''என்ன மனுஷன் ஐயா அவர்? கொஞ்சங்கூட தாட்சண்யமில்லாமல் பேசுகிறார்'' என்று ஒருவருக்கொருவர் பேசிக் கொண்டார்கள். கிருஷ்ண விலாஸுக்குப் போவதையும் கொஞ்சம் கொஞ்சமாக நிறுத்திக் கொண்டார்கள்.

நாளடைவில் அந்த ஓட்டலில் வியாபாரம் குறைந்தது. ஆரம்ப காலத்தில் இருந்த களையும் விறுவிறுப்பும் பிறகு இல்லாமற் போய்விட்டது!

முன்போல் அங்கே சாம்பிராணி மணம் கமழ்வதில்லை.

ரேடியோ பாடுவதில்லை.

விசிறிகள் சுழல்வதில்லை.

கிருஷ்ணமணி அடிக்கடி சோம்பல் முறித்துக் கொட்டாவி விட்டார்.

ராயர் கிளப்பில் மட்டும் எப்போதும் போல் சுறுசுறுப்பாக வியாபாரம் நடந்து கொண்டிருந்தது.

''வாங்க அண்ணு வாங்க! அடே பிந்து! அண்ணுவுக்கு டிகிரி காப்பி கொண்டு வந்து கொடுடா'' என்று ராயர் வழக்கம்போல் இன்முகத்துடன் குளுமையாக எல்லோரையும் வரவேற்றுக் கொண்டிருந்தார்.

கடைசியில் ஒரு நாள் கிருஷ்ணவிலாஸ் வாசலில் தமுக்குத் தட்டும் ஓசை கேட்டது. கிருஷ்ணமணிக்குக் கடன் அதிகமாகி விட்டதால் கிருஷ்ணவிலாஸ் மூடப்பட்டு சாமான்கள் ஏலத்தில் விடப்பட்டன.


''என்னய்யா, ராயரே, கிருஷ்ணவிலாஸில் மின்சார விசிறி மலிவாக ஏலத்தில் கிடைக்கிறதே. வாங்கிப் போடுங்களேன்'' என்ருர் ஒரு வாடிக்கைக்காரர்.

''அதெல்லாம் எதுக்கு அண்ணு? வேப்ப மரத்திலும், தென்னங்கீற்றிலும் இருக்கிற சுகம் வருமா?'' என்ருர் ராயர்.

ஒரு தோப்பு; அந்தத் தோப்பில் பற்பல விதமான மரங்கள் ஓங்கி வளர்ந்து கம்பீரமாக நின்று கொண்டிருந்தன. எல்லாம் பெரிய பெரிய மரங்கள்! வயிரம் பாய்ந்த மரங்கள். அவற்றுக்கிடையே ஒல்லியான கமுகு மரம் ஒன்றும் இருந்தது.

திடீரென்று ஒருநாள் பலமான புயல் காற்று வீசியது. அந்தச் சூருவளியின் வேகம் தாங்காமல் தோப்பிலிருந்த மரங்கள் அத்தனையும் சடசடவென்று கீழே சாய்ந்துவிட்டன.

ஆனுல், காற்றின் போக்குக்கெல்லாம் வணங்கிக் கொடுத்த அந்தக் கமுகு மரம் மட்டும் அந்த இடத்தில் பழையபடியே நின்று கொண்டிருந்தது. 'வளைந்து கொடுப்பவர்களே இந்த உலகத்தில் வாழ முடியும்' என்பதை அந்தக் கமுகு மரம் இந்த உலகுக்கு அறிவுறுத்திக்கொண்டு இருந்தது.




'' பஜரே கோபாலம்.......

' ஜல் ஜல் ' என்ற ஜாலரா சப்தத்துடன் தெருக் கோடியில் வரும்போதே, சீதாராமய்யாவின் குரல் வீதி முழுதும் நிறைந்து ஒலிக்கும்.

எண்பதை எட்டிப் பிடிக்கும் தள்ளாத பருவம். மனித வாழ்க்கையின் இன்ப துன்பங்களையெல்லாம் அநுபவித்துச் சலித்துப் பழுத்துப்போன அவர் உடலில், சக்தியும் ரத்தமும் குன்றி, சதைப் பிடிப்பெல்லாம் சுருங்கி, புருவத்தின் ரோமம் நரைத்து, செறிந்து, மங்கிக் கூசும் கண்களின் மேற்பகுதியை மறைத்துக் கொண்டிருந்தன. சதைச் சுருக்கங்கள் முகமெல்லாம் ஆழ உழுதுவிட்டிருந்தன.

நாமாவளிக்கிடையே அடிக்கடி புகைந்து வரும் இருமலும் அதைத் தொடர்ந்து 'நாராயணா, நாராயணா!'

என்னும் கிரமபரிகார உச்சரிப்பும் கேட்போரின் உள்ளத்தைக் கிளறி விடும்.

கையிலே ஜாலரா, தோளிலே பிட்சா பாத்திரம், கழுத்திலே தாமரை மணிமாலை, நெற்றியிலே அட்சதைத் திலகம், தலையிலே தியாகய்யரைப்போல் போர்த்திக் கட்டப்பட்ட வஸ்திரம், கக்கத்திலே குறுக்குக் கம்பிகளெல்லாம் இற்று வெலெத்துப்போன கறுப்புக் குடை.

பாடிக்கொண்டே, ஜாலராவைத் தட்டிக்கொண்டே, இருமிக்கொண்டே, தளர் நடை போட்டுக்கொண்டே ஊர் ஊராய்த் தெருத் தெருவாய்ச் சுற்றி அலைந்து உஞ்சவிருத்தி மூலம் கிடைக்கும் அரிசியைக்கொண்டு அன்றாடக் காலட்சேபத்தை நடத்தி வந்தார் அந்தத் தொண்டு கிழவர்.

அலைந்து திரிந்து சேகரித்துக் கொண்டுபோகும் அரிசியைப் பொங்கிப்போட அவருக்கு இந்த உலகத்தில் ஒருவருமே இல்லை.

தனித்து உழலும் ஒரு திக்கற்ற ஆத்மா அவர்.

பட்டிபுரம் கிராமத்துத் தெருவில் நடந்து வரும்போது அவர் கால்கள் தாமாகவே ஓரிடத்தில் வழக்கமாக நின்று விடும்.

அவர் நிற்கும் அந்த இடத்துக்கு எதிரில்தான் அந்த பிராஞ்சு தபாலாபீஸ் இருந்தது.

உள்ளே போஸ்ட் மாஸ்டர் வராகாச்சாரி அன்று வந்த தபால்களை 'ஸார்ட்' செய்துகொண் டிருப்பார்; அல்லது 'சடக் சடக்' என்று முத்திரை குத்திக் கொண்டிருப்பார்; அல்லது ஏதாவது எழுதிக் கொண்டிருப்பார்; அல்லது தெருத் திண்ணையில் கூப்பாடு போட்டுக் கொண்டிருக்கும் பள்ளிக்கூடப் பிள்ளைகளை உள்ளிருந்தபடியே அதட்டி அடக்கிக் கொண்டிருப்பார்.

சிற்சில சமயங்களில் திண்ணைமீது வந்து கால்மேல் கால் போட்டபடி, வெற்றிலையை மடித்துப் போட்டவண்ணம் உலகத்தையே துரும்பாக மதிக்கும் பாவனையில் அமர்ந்திருப்பார்.

போஸ்ட் மாஸ்டர் திண்ணையில் இல்லாத நேரங்களில் சீதாராமய்யா ஜன்னல் ஓரமாகச் சென்று உள்ளே எட்டிப் பார்ப்பார்.

"யார், சீதாராமையாவா? வாய்யா!" என்று உள்ளிருந்து ஓர் அதிகாரக் குரல் கிளம்பும்.

"ஆமாம்...... நான்தான்...... எனக்கு ஏதாவது மணியார்டர் உண்டா?" என்று தமது குரலை அடக்கித் தாழ்த்திப் பணிவாகக் கேட்பார் சீதாராமய்யா.

"மணியார்டர்தானே? உமக்குத்தானே? வந்திருக்கய்யா வந்திருக்கு; உம்ம பேரன் மெட்ராஸிலே கலெக்டர் வேலை பண்றான் பாரும், அவன் அனுப்பி யிருக்கான்! கையெழுத்துப் போட்டு வாங்கிக்கிறீரா?"—எக்காளச் சிரிப்புடன் வெகு அலட்சியமாகவும் கேலியாகவும் கூறுவார் வராகாச்சாரி. பின்னோடு, "அட, போய்யா போ, வேலை மெனக் கெட்டவரே! மணியார்டராம், மணியார்டர்! உமக்கு எவனய்யா மணியார்டர் அனுப்பப் போறான்? தினைக் வந்து என் பிராணனை வாங்கறீரே?..."

வராகாச்சாரியின் குரலில் அசட்டையும் அகம்பாவமும் பின்னிக் கொண்டிருக்கும்.

"நிஜமாகவே என் பேரன் ஒரு நாளைக்கு எனக்கு மணியார்டர் அனுப்பத்தான் போறான்; உம்ம கையாலேயே நீர் அதை எனக்குக் கொடுக்கத்தான் போகிறீர்!" என்பார் சீதாராமய்யா.

"ஆமாம்; உம்ம பேரன் பணம் அனுப்பப் போறான். நீர் அதை வாங்கி மாடி வீடு கட்டப் போகிறீர். பகல் கனவா காண்கிறீர்? இந்தக் காலத்திலே பெற்ற அப்பனையே பிள்ளை காப்பாற்ற மாட்டேங்கறான். எவனோ பேரனும். தாத்தாவைக் காப்பாத்தப் போறானும். பட்டணத்திலே, அவன் எங்கே 'ததிங்கிணத்தோம்' போட்டுக் கொண்டிருக்கிறானோ? மணியார்டர் அனுப்புவானும் மணியார்டர்? அனுப்புவான், அனுப்புவான். பார்த்துக்கொண்டே இரும். கேட்டுக்கொண்டே இரும்" என்பார் போஸ்ட் மாஸ்டர்.

"போஸ்ட் மாஸ்டர் அப்படிச் சொல்லக்கூடாது, என் பேரன் ரொம்ப நல்ல பையன். கட்டாயம் மணியார்டர் அனுப்புவான்!" — அசைக்க முடியாத நம்பிக்கையுடன் கூறுவார் சீதர்ராமய்யா.

"ஐயா, பேஷாய் அனுப்பட்டும். நானு அதுக்கு குறுக்கே நிற்கப் போகிறேன்?" என்பார் போஸ்ட் மாஸ்டர்.

"நாராயணு நாராயணு!" என்று ஈனசுரத்தில் சொல்லிக்கொண்டே சீதாராமையா அந்த இடத்தை விட்டு நகர்வார்.

"பஜரே கோபாலம்" — இந்தக் குரல் தெருக்கோடி வரை ஒலித்துவிட்டுப் பிறகு கொஞ்சம் கொஞ்சமாகத் தேய்ந்து மறையும்.

"எனக்கு ஏதாவது மணியார்டர் உண்டா?" — சீதாமய்யா தினம் தினம் ஆவலோடு, நம்பிக்கையோடு கேட்கும் கேள்வி இது.

"இல்லையே!" — போஸ்ட் மாஸ்டர் வராகாச்சாரி ஒவ்வொரு நாளும் அலுக்காமல் சலிக்காமல் கூறும் பதில் இது.

மூன்று வருட காலமாக நாள் தவருமல் சீதாராமய்யா இதே கேள்வியைத் திரும்பத் திரும்பக் கேட்டுக் கொண்டிருக்கிருர். போஸ்ட் மாஸ்டர் அதே பதிலைத் திரும்பத் திரும்பச் சலிக்காமல் சொல்லிக் கொண்டிருக்கிருர்.

'ஐயோ பாவம்! இப்படி ஒரு அப்பாவி ஆத்மா இந்த உலகத்தில் நம்பிக்கையுடன் வாழ்ந்து கொண்டிருக்கிறதே!' — இதை எண்ணும்போது வராகாச்சாரிக்குத் தம்மை அறியாமல் சிரிப்பு வரும்.

வராகாச்சாரி தாலுகாபீசில் ஹெட் கிளார்க்காயிருந்து ரிடயரானவர். பெரிய வாயாடி. இந்த உலகமே அவருக்கு அலட்சியம். யாரையும் 'எடுத்துப் போட்டது போல்' தான் பேசுவார்.

'' வராகாச்சாரியா? மண்டைக் கிறுக்கு பிடித்த ஆசாமி யாச்சே? இதயத்திலே ஒன்றும் கிடையாதுதான். ஏழை எளியவர்களிடத்தில் அன்புள்ளவர்தான். ஆனாலும் மகா கர்வம் பிடிச்ச மனுஷனய்யா'' என்பதுதான் அவரைப் பற்றி அந்தக் கிராமத்து மக்கள் கொண்டிருந்த அபிப் பிராயம்.

தாலுகாபீசிலிருந்து விலகிய பிறகு தம் சொந்தக் கிராம மாகிய பட்டிபுரத்துக்குத் திரும்பி வந்து பிராஞ்சு போஸ்ட் மாஸ்டர் வேலையை ஒப்புக்கொண்டார். தம் சொந்த வீட்டிலேயே போஸ்டாபீஸ், திண்ணைப் பள்ளிக்கூடம் இரண்டையும் நடத்திக்கொண்டு, சர்க்காரிடமிருந்து சம்பளம், வாடகை இரண்டையும் பெற்றுக் கொண்டிருந் தார்.

வராகாச்சாரிக்கு விஷ மந்திரமும் தெரியும். சுற்று வட்டாரத்தில் யாருக்குப் பாம்பு கடித்தாலும் இரவு பகல் எந்த நேரத்திலும் போஸ்ட் மாஸ்டரைத் தேடிக்கொண்டு வந்து விடுவார்கள். அவர் தம் வேட்டியின் ஓரத்தைக் கிழித்து மந்திரம் ஜபித்து, நாலு முடிச்சுப் போட வேண்டியதுதான் தாமதம்; விஷம் மளமளவென்று இறங்கி, போன உயிரே திரும்பி விடும்.

பத்து வருடங்களுக்கு முன்னால்......

சீதாராமய்யாவின் மகள் வயிற்றுப் பேரன், ஏழு வயதுச் சிறுவன்—ரங்குடு தாத்தாவின் பராமரிப்பில் வளர்ந்து கொண்டிருந்தான். அவனுடைய தாய் அந்தக் குழந்தையை அநாதையாக விட்டுவிட்டுக் காலமாகி விடவே, பேரனை எடுத்து வளர்க்கும் பொறுப்பு சீதாராமய்யாவின் தலையில் சுமந்தது.

தாத்தாவின் கஷ்டங்களை உணர்ந்த ரங்குடு, ''தாத்தா, நான் நன்றாப் படிச்சு சம்பாதிக்க ஆரம்பிச்சுட்டா நீ பிச்சை எடுக்கிறதை நிறுத்திடுவியா?'' என்று கேட்டான்.

'' ஆமாம்.''

'' தாத்தா! பிச்சை எடுக்கிறது கேவலம்தானே?''

'' கடவுள் நாமாவைப் பாடிக்கொண்டே தெருவிலே நடந்து போறேன். அவர்களாகக் கொடுக்கிற அட்சதையை

வாங்கிக்கொண்டு வரேன். அதுவும் அன்றாடம் நமக்கு வேண்டிய அளவுக்குத்தான் வாங்கறேன். நாளைக்கும் சேர்த்து வாங்கற பழக்கம் கிடையாது. ஆண்டவன் என் தலையிலே இப்படித்தான் எழுதியிருக்கார்'' என்று கண்ணீர் உகுத்தார் கிழவர்.

ரங்குடுவின் இளம் உள்ளம் வேதனைப்பட்டது.

''தாத்தா, நீ இப்படிக் கஷ்டப்படறதைப் பார்க்க எனக்குச் சங்கடமாயிருக்கு. எத்தனை நாளைக்கு நீ இப்படி வெயிலிலும் மழையிலும் ஊர் ஊரா அலைஞ்சு கஷ்டப்படப் போறே?''

''என்ன செய்யலாம் கண்ணு! நீ சீக்கிரம் படிச்சுப் பாஸ் பண்ணிட்டா அப்புறம் எனக்கு ஒரு கஷ்டமும் இல்லே'' என்று அவனைச் சமாதானப்படுத்துகிறபோதே கிழவருக்கு அசாத்திய இருமல் வந்துவிட்டது. அந்த இருமலில் அவர் உடலே குலுங்கி அதிர்ந்தது.

முதல் நாள் மழையில் அலைந்து திரிந்துவிட்டு வந்திருந்ததால் அவருக்குத் தலைவலி, இருமலுடன் லேசாக ஜுரம் வேறு கண்டிருந்தது.

''நாராயணா, நாராயணா!'' என்று சொல்லிக் கொண்டே தரையில் படுத்துவிட்டார் தாத்தா.

'ஐயோ, தாத்தாவால் வெளியே போக முடியாதே! தாத்தாவுக்கும் எனக்கும் யார் சாதம் போடுவார்கள்? எப்படிச் சாப்பிடுவது! அரிக்கு என்ன செய்வது?'—ரங்குடுவின் இளம் உள்ளத்தில் பெரும் திகைப்பும் திகிலும் தோன்றிக் குழம்பின.

தாத்தாவுக்குத் தெரியாமல் குடிசையை விட்டு வெளியே சென்றான் அவன்; சற்று நேரத்திற்கெல்லாம் மூன்று ரூபாயுடன் திரும்பி வந்தான்.

''தாத்தா, உனக்கு மருந்து வாங்கிக்கொண்டு அப்படியே கடைக்குப் போய் அரிசி வாங்கிக்கொண்டு வரட்டுமா?''

''மருந்தும் அரிசியும் வாங்கப் போறயா? உன்னிடம் பணம் ஏது?''—ஆச்சரியத்துடன் கேட்டார் கிழவர்.

"நான் சேர்த்து வெச்சிருந்தேன்."

கிழவர் அவன் பேச்சை நம்பவில்லே. "பொய்! உண்மையைச் சொல்; எங்கேயோ போய்த் திருடிக்கொண்டு வந்திருக்கே!"—தாத்தாவின் முகத்தில் கோபமும் ஆத்திரமும் பொங்கிக் கொண்டிருந்தன.

"இல்லே தாத்தா, நிஜமாச் சொல்றேன். நான் சேர்த்து வெச்சிருந்தேன்."

அவர் நம்பவில்லே. ஆவேசத்துடன் எழுந்து போய் ரங்குடுவைப் பளீர் என்று கன்னத்தில் அறைந்து, அவன் பிடரியைப் பிடித்துக் குடிசைக்கு வெளியே வேகமாகத் தள்ளிவிட்டு, "திருட்டுப் பயலே, இந்த வீட்டுக்குள் இனி காலடி வைக்கப் போறே! பிச்சை எடுக்கறது கேவலமாப் போச்சு உனக்கு! திருடறது உத்தமத் தொழிலா?" என்று கதவைச் சாத்திக் கொண்டார். திருடியாவது தாத்தாவின் கஷ்டத்தைத் தீர்க்க விரும்பினான் ரங்குடு.

ஆனால் தாத்தாவோ அவனை அடித்துத் துரத்தி விட்டார்.

அழுதுகொண்டே வெளியே சென்ற ரங்குடு அன்று போனவன்தான்; பிறகு அவன் அந்தக் குடிசைக்குத் திரும்ப வேயில்லே.

தாத்தா குமுறிக் குமுறி அழுதார். ரங்குடு, எங்கே போனே?" என்று ஏக்கத்தோடு கதறினார்.

"'பிச்சை எடுக்கிறது கேவலம் இல்லேயா தாத்தா?' என்று என்னைக் கேட்டாயே! ரங்குடு, நீமட்டும் திருடலாமா?" என்று தூக்கத்தில் வாய் பிதற்றினார்.

"நிஜம்மா சொல்றேன் தாத்தா! நான் தெரியாமல் திருடிவிட்டேன். இனிமேல் நான் திருடவே மாட்டேன்."—ரங்குடுவின் இந்தக் கெஞ்சும் குரல் அவர் இதயத்தைப் பிளந்தது.

இந்தச் சம்பவம் நடந்து பத்து வருடங்கள் ஆகி விட்டன.

'இப்போது ரங்குடு எங்கே இருக்கிறானோ? என்ன செய்கிறானோ? அவன் ரொம்பப் பெரியவனாக வளர்ந்திருப்பான். படித்துப் பாஸ் செய்திருப்பான். பட்டணத்திலே

வேலையாயிருப்பான். ஒரு நாளைக்கு எனக்கு மணியார்டர் அனுப்புவான்!'

சீதாராமய்யா தம் பேரனிடம் திடமான, உறுதியான, மாறாத, மாற்றமுடியாத நம்பிக்கை வைத்திருந்தார்.

அந்த நம்பிக்கையின் பேரில்தான், ''எனக்கு ஏதாவது மணியார்டர் உண்டா?'' என்று ஒவ்வொரு நாளும் வராகாச்சாரியைக் கேட்டுக் கொண்டிருந்தார்.

அன்று பொழுது விடிந்ததும் சீதாராமையா வெளியே புறப்பட்டார். நாலு தெருக்கள் சுற்றிவிட்டு, தபாலாபீஸ் தெருவுக்கு வந்தார். தபாலாபீசை அடைந்ததும் ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தார். வழக்கம்போல் ''எனக்கு ஏதாவது மணியார்டர் உண்டா?'' என்று கேட்டார்.

குனிந்தபடி ஏதோ கவனமாக எழுதிக் கொண்டிருந்த வராகாச்சாரி எரிச்சலுடன் திரும்பி, ''போமய்யா, வேலைமெனக்கட்டவரே; மணியார்டரும் இல்லே, மண்ணாங் கட்டியும் இல்லே!'' என்று சீறி விழுந்தார்.

வராகாச்சாரியின் சுபாவம் அறிந்த சீதாராமய்யா அவர் கோபத்துக்காகச் சிறிதும் வருத்தப்படவில்லை. அவருடைய வருத்தமெல்லாம் அன்றும் தனக்கு மணியார் டர் வரவில்லையே என்பதுதான்.

'நாராயணா! எத்தனை காலத்துக்கு நான் இப்படிக் கஷ்டப்பட வேண்டும்? என் பேரன் மணியார்டர் அனுப் பவே மாட்டானா? என் கஷ்டம் தீரவே தீராதா? நான் என்றென்றைக்கும் 'நடந்து நடந்து, உடல் மெலிந்து உயிரை விட வேண்டியதுதானா?' - கிழவர் தள்ளாடித் தள்ளாடி நடந்தார்.

மணி பதினொன்று இருக்கும்; நல்ல வெயில். களைப்புத் தாங்காமல் சாலை ஓரத்திலுள்ள பாழடைந்த அநுமார் கோயில் மண்டபத்தில் போய்ப் படுத்துக் கொண்டார். சோர்வின் மிகுதியால் அவர் கண்கள் குழி விழுந்து கிடந்தன. படுத்தவர் அப்படியே அயர்ந்து தூங்கிவிட்டார். சிறிது நேரத்துக்கெல்லாம் விழித்துக் கொண்டு எழுந்தவர், காலின் கீழ் 'வழ வழ'வென்று ஏதோ நெளிவதுபோல் உணர்ந் தார். சட்டென்று காலை உதறிவிட்டுக் கீழே பார்த்தார்.

அதே சமயத்தில் அவருடைய காலால் மிதிபட்ட பாம்பு 'புஸ்'ஸென்று சீறிக்கொண்டு அவர் கால்மீது பாய்ந்து பிடுங்கியது. "ஆ, ஐயோ !" என்று அலறிக்கொண்டே கீழே சாய்ந்து விட்டார் கிழவர்.

அப்போது அந்த வழியாக வந்த சிலர் சீதாராமய்யா பாம்பு கடித்துக் கீழே விழுந்து கிடப்பதைத் கண்டு விட்டு ஓடிவந்து அவரைத் தூக்கிக் கொண்டு போஸ்ட் மாஸ்டரிடம் விரைந்தார்கள்.

"என்ன? சீதாராமய்யாவைப் பாம்பு கடிச்சுட்டுதா ?" —பதறினர் வராகாச்சாரி.

பரபரப்புடன் வேட்டியைக் கிழித்து மந்திரத்தை ஜபித்தார். காலம் கடந்துவிடவே, மந்திரத்துக்குப் பலன் இல்லாமற் போய்விட்டது.

சீதாராமய்யா என்றென்றும் மீளமுடியாத நிரந்தர உறக்கத்தில் ஆழ்ந்துவிட்டார். நம்பிக்கை நிறைந்த, சலனமற்ற அவர் முகத்தையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார் வராகாச்சாரி. எதற்குமே கலங்காத அவரது கண்களிலிருந்து கண்ணீர் கொட்டிக் கொண்டிருந்தது.

சீதாராமய்யாவின் உயிரற்ற உடல் அவரைப் பார்த்துக் கேட்டது:

"எனக்கு ஏதாவது மணியார்டர் உண்டா ? என் பேரன் ரொம்ப நல்ல பையன்...... கட்டாயம் மணியார்டர் அனுப்புவான்."

வராகாச்சாரியின் இதயம் குமுறிப் பொங்கிற்று. காரணம் : அன்று நிஜமாகவே சீதாராமய்யாவுக்கு ஒரு மணியார்டர் வந்திருந்தது. அவருடைய பேரன் ரங்குடு தான் அனுப்பியிருந்தான் !

ஒரு மணிக்குமுன் சீதாராமய்யா வந்து கேட்டபோது எங்கோ கவனமாக, "மணியார்டரும் இல்லே, மண்ணாங்கட்டியும் இல்லே" என்று தாம் அலட்சியமாகப் பதில் கூறி விட்டதை எண்ணி எண்ணித் துக்கப்பட்டார் வராகாச்சாரி.

"இப்ப என்ன சொல்றீங்க போஸ்ட் மாஸ்டர் ? என் பேரன் பணம் அனுப்பிச்சிருக்கானா இல்லேயா, பாரும் !"

போஸ்ட் மாஸ்டரைப் பார்த்துச் சீதாராமய்யா கேலி செய்வதுபோல் இருந்தது.

"அட பாவமே! பேரன் மணியார்டர் அனுப்பியிருக்கிறன் என்பதை அறிந்தால் சீதாராமய்யா எவ்வளவு சந்தோஷப் படுவார்? மணியார்டர் வரும் வரும் என்று எத்தனை நம்பிக்கையோடு எத்தனை காலமாகக் காத்திருந்தார். சீதாராமய்யாவின் வாழ்க்கையில் கிடைத்த ஒரே சந்தோஷத்தை—பேரன் அனுப்பிய மணியார்டரில் கையெழுத்துப் போட்டு வாங்கும் சந்தர்ப்பத்தை—ஒரே வார்த்தையில் இல்லாமல் செய்துவிட்டேனே? நான் மணியார்டரைக் கொடுத்திருந்தால் அவர் அநுமார்கோயில் மண்டபத்துக்குப் போயிருக்க மாட்டாரே! அவரைப் பாம்பும் கடித்திருக்காதே! பொறுப்பற்ற என் பதில் ஒரு நல்ல ஆத்மாவின் முடிவுக்குக் காரணமாகி விட்டதே! அசட்டையாக நான் செய்துவிட்ட குற்றம் எவ்வளவு பெரிய விபரீதமாக முடிந்துவிட்டது!" என்று துடிதுடித்துப் போனர் வராகாச்சாரி.

'என் ஆயுள் காலத்தில் பாம்புக் கடிக்கு நான் மந்திரம் போட்டுப் பிழைக்காத 'கேஸ்' இது ஒன்றுதான். என் தபாலாபீசுக்கு வந்த மணியார்டர் 'டெலிவரி' ஆகாமல் கிடப்பதும் இதுதான் முதல் தடவை.'—வராகாச்சாரியின் இதயத்தை யாரோ கசக்கிப் பிழிவது போல் இருந்தது. தாம் செய்த பெரும் பிழைக்குப் பிராயச்சித்தமாகச் சீதாராமய்யாவின் அந்திமக் கிரியைகளைத் தாமே நடத்தி முடித்தார்.

கவிழ்ந்த முகத்துடன், கனத்த இதயத்துடன் மேஜை முன்பு வந்து உட்கார்ந்தார் வராகாச்சாரி. மணியார்டர் 'பாரம்' அவரைப் பார்த்துச் சிரித்தது. கண்ணீரைத் துடைத்தபடியே வராகாச்சாரி அந்த மணியார்டரைக் கையிலே எடுத்துப் பார்த்தார். அதில் சீதாராமய்யாவின் முகம் தெரிந்தது.

'எனக்கு ஏதாவது மணியார்டர் உண்டா?'

---




அவர் தான் அந்த ஹாஸ்ய நடிகர்—கோமாளி ராமண்ணு! ஓகோ, உங்களுக்குத் தெரியாதோ அவரை ?...

அந்தக் காலத்தில் அவர் பெயரைத் தெரியாதவர்களே யாரும் கிடையாது. முப்பது ஆண்டுகளுக்கு முன்னுல் நாடக உலகில் பெரும் புகழுடன் விளங்கிய நடிகர் அவர்.

கோமாளி ராமண்ணு மேடையில் தோன்றுகிருர் என்ருல் போதும்! கூட்டம் சொல்லி முடியாது. சுற்று வட்டாரங்களிலிருந்தெல்லாம் ஜனங்கள் கட்டுச் சாத மூட்டையுடன் நாடகம் பார்ப்பதற்கு வந்துவிடுவார்கள்.

ராமண்ணு கோமாளியாக மேடையில் தோன்றி, ஒரு தடவை கண்களைச் சிமிட்டித் தலையை இப்படியும் அப்படியும் ஆட்ட வேண்டியதுதான்! கொட்டகையில் சிரிப்பு அலை குளுகுளுவென்று பரவும். ராமண்ணு, கால் ஆர்மோனிய வாத்தியக்காரரின் பக்கத்தில் போய் நின்று கொண்டு,

"அப்பா, நோட்டு வாங்கப் பணம் வேணும்" என்று கூறிக்கொண்டே எதிரில் வந்து நின்ருன் அவருடைய மகன்.

"சீ, போடா! வெளியே புறப்படறப்போ அபசகுனம் மாதிரி!" என்று எரிச்சலுடன் கூறிவிட்டுக் கிளம்பிஞர் அவர்.

அன்று முழுதும் ராமண்ணு எங்கெங்கோ அலேந்தார். தெரிந்தவர்களிடமெல்லாம் கடன் கேட்டுப் பார்த்தார். யாரிடத்திலும் காலணுப் பெயரவில்லே. நடந்து நடந்து, அலேந்து அலேந்து, பசியும் களேப்பும் மேலிட்டவராய் வீட்டுக்குத் திரும்பி வந்தார்.

'சே! நானும் ஒரு மனிதனு? இதுவும் ஒரு பிழைப்பா? ஊரெல்லாம் என் நடிப்பைக் கண்டு மகிழ்கிறது. ஆனுல் என் உள்ளவேதனேயை அது அறியவில்லே. என் குடும்பம் சோற்றுக்கில்லாமல் திண்டாடுகிறது. ஆனுல் ஊரார் அதைப்பற்றிக் கவலேப்படவில்லே. நான் திண்டாடுகிறேன். உலகம் என்னேக் கொண்டாடுகிறது. இதுதான் ஒரு கோமாளியின் வாழ்க்கையா? இன்னும் எத்தனே காலத்துக்கு நான் இவ்வாறு வாழ்க்கையுடன் போராடுவது?... தூ!' என்று அலுத்துக் கொண்டார் ராமண்ணு.

ராமண்ணு தன் மனேவியை அழைத்து, "குடிக்கக் கொஞ்சம் மோர் இருந்தால் கொடு" என்ருர்.

அவர் மனேவி மோருக்குப் பதிலாக நீரைக் கொண்டு வந்து கொடுத்துவிட்டு, "இதுதான் இன்னிக்கு மோர்; பழைய பாக்கியைக் கொடுத்தாத்தான் இனிமே தயிர் போடுவேன்னு சொல்லிட்டா தயிர்க்காரி" என்று வருத்தம் தோய்ந்த குரலில் கூறிஞள்.

"தங்கம்! வாங்கிய கடனேத்தான் நம்மால் சரியாத் திருப்பிக் கொடுக்க முடிவதில்லேயே! அவங்களும் எத்தனே நாளேக்குத்தான் கடன் கொடுத்துக்கிட்டு இருப்பாங்க?" என்ருர் ராமண்ணு.

"சரி; நீங்க போன காரியம் என்ன ஆச்சு?" என்று கேட்டாள் தங்கம்மாள்.

''கால் கடுக்க அலைஞ்சதுதான் மிச்சம். கேட்ட இடத்தி லெல்லாம் கையை விரிச்சுட்டாங்க'' என்று சோகம் ததும்பக் கூறினார் ராமண்ணா.

''இந்தாங்க, இந்த மூக்குத்தியைக் கொண்டுபோய் அடகுக் கடையிலே வெச்சுப் பணம் வாங்கிட்டு வாங்க. தஞ்சாவூருக்குப் போய் வந்ததும் மீட்டுக்கலாம்'' என்று தன்னுடைய மூக்குத்தியைக் கழற்றிக் கொடுத்தாள் தங்கம்மாள்.

ராமண்ணா அதை அடகுக் கடைக்கு எடுத்துக்கொண்டு போய்ப் பத்து ரூபாய் பணம் வாங்கி வந்தார். ஏழு ரூபாயை மனைவியிடம் கொடுத்துவிட்டு, மூன்று ரூபாயைப் பஸ் சார்ஜுக்கு வைத்துக் கொண்டார். அவரிடம் ஒரே ஒரு சட்டைதான் இருந்தது. அதுவும் நைந்துபோன ஒரு பழைய சட்டை. முதுகுப் பக்கத்தில் கிழிந்து போயிருந்தது. அதை எடுத்துத் துவைத்தபோது கிழிசல் இன்னும் பெரி தாகி விட்டது. அவர் மனைவி அடுத்த வீட்டிலிருந்து நூலும் ஊசியும் வாங்கி வந்து அதைத் தைத்துக் கொடுத்தாள்.

மறு நாள் காலை.

ராமண்ணா துவைத்த சட்டையை எடுத்துப் போட்டுக் கொண்டு அந்த மூன்று ரூபாய்களுடன் பஸ்ஸுக்குப் புறப் பட்டார். அப்போது வாசலில் கூடை வியாபாரி 'ஆரஞ்சுப் பழம்' என்று கூவிக்கொண்டே போனான். ராமண்ணாவின் பெண் குழந்தைகளில் ஒன்று ஓடி வந்து, ''அப்பா! எனக்கு ஆரஞ்சுப் பழம் வாங்கித்தாப்பா'' என்று கெஞ்சியது.

''சீ, கழுதை! ஆரஞ்சுப் பழமா வேணும் உனக்கு! இந்தா ஆரஞ்சுப் பழம்'' என்று கூறிக்கொண்டே அந்தக் குழந்தையின் முதுகில் இரண்டு அறை வைத்து விட்டார்.

அன்றிரவு தஞ்சாவூரில் நடைபெற்ற ஸ்பெஷல் நாடகத்தில் ராமண்ணா அரண்மனை விதூஷகனாக வேடம் தாங்கினார். ஒரு காட்சியில் அரசன், விதூஷகனிடம் மூன்று ஆரஞ்சுப் பழங்களை உரித்துக் கொடுத்து, அந்தப் பழங்கள் மூன்றையும் அப்படியே முழுசாக விழுங்கும்படி கட்டளை இட்டார்.

விதூஷகன் திருதிருவென்று விழிப்பதைக் கண்ட ராஜா, "விதூஷகரே, விழுங்கப் போகிறீரா இல்லையா?" என்று மிரட்டினார்.

அரசனுடைய உத்தரவுக்கு அஞ்சிய விதூஷகர் பழங்களை எடுத்து ஒவ்வொன்றாக விழுங்கினார். அப்போது கொட்டகையில் எழுந்த கரகோஷம் கூரையையே பிய்த்துக்கொண்டு போயிற்று!

ராமண்ணாவின் கண்களில் கண்ணீர் துளித்தது.

காரணம்?

அன்று காலை அவருடைய குழந்தைகளில் ஒன்று, ஆரஞ்சுப் பழம் வாங்கித் தரும்படி அழுது பிடிவாதம் செய்தபோது அவர் அதன் முதுகில் இரண்டு அறைகள் வைத்துவிட்டு வந்தாரல்லவா?

'என் குழந்தை ஆரஞ்சுப் பழம் கேட்டது. என்னால் வாங்கித் தர முடியவில்லை. இங்கே நாடக மேடையில் ஆரஞ்சுப்பழம் தின்னும்படி அரசன் என்னை வற்புறுத்துகிறான். என் குழந்தைகள் ஆசைப்பட்டுக் கேட்ட ஆரஞ்சுப் பழங்களை நான் விழுங்க வேண்டியிருக்கிறதே!'—கண்ணீரைத் துடைத்துக் கொண்டார் ராமண்ணா.

நாடகம் முடிந்தது.

பளபளக்கும் பட்டு அங்கிகளைக் கழற்றிவிட்டு, தமது பழைய கந்தல் சட்டையை எடுத்துப் போட்டுக்கொண்டார் ராமண்ணா.

ராஜபார்ட் ரங்கப்பா கொடுத்த பதினைந்து ரூபாயைப் பெற்றுக்கொண்டு ஊருக்குத் திரும்பி வந்தார்.

மூக்குத்தி?......

அதை மீட்கவே முடியவில்லை. அதற்குள் எத்தனையோ பிடுங்கல்கள்!

ராமண்ணாவின் வாழ்க்கை இன்று நேற்று மட்டும் இப்படி நடக்கவில்லை. அவர் கோமாளி வேஷம் போடத் தொடங்கிய காலத்திலிருந்தே இந்தக் கதிதான்.

மாதத்தில் நாலைந்து ஸ்பெஷல் நாடகங்களில் 'சான்ஸ்' கிடைக்கும். அதில் வீட்டு வாடகை, கடைச் சாமான், பள்ளிச் சம்பளம்—இவ்வளவும் கொடுத்தாக வேண்டும். முடியுமா? இவ்வளவுக்கும் அந்தப் பணம் ஈடு கொடுக்குமா?

கடன்காரர்கள் அவர் கழுத்தை நெரித்தார்கள்.

ராமண்ணு பல்லைக் கடித்துக்கொண்டு வாழ்க்கைத் தோணியை ஓட்டிக் கொண்டிருந்தார். கடும் புயலும் மழையும், கடலின் கொந்தளிப்பும் சேர்ந்து அவர் செலுத்திய ஓடத்தை உலுக்கிக் குலுக்கின.

ராமண்ணுவின் இருண்ட வாழ்க்கையில் ஒரு சிறு வெளிச்சம்மட்டும் தூரத்தில் நட்சத்திரம்போல் ஒளிர்ந்து கொண்டிருந்தது. அந்த ஒளி, அவர் மகனுடைய வருங்காலம் தான். அவன் படிப்பை முடிக்க இன்னும் மூன்று வருடங்களே இருந்தன. அப்புறம் அவன் தன்னைக் காப்பாற்றத் தொடங்கிவிடுவான்.

மகன் தலையெடுத்து உத்தியோகம் பார்க்கத் தொடங்கி விட்டால் அன்றோடு தன் கஷ்டங்களெல்லாம், கவலைகளெல்லாம் தீர்ந்து ஒழிந்துவிடும். பின்னர் தன்னையும் தன் நடிப்பையும் கண்டு சிரிக்கும் ஊராரைப்போல் தானும் சிரிக்கலாம். சிரித்துக்கொண்டே இருக்கலாம். இந்த ஒரே நம்பிக்கையுடன்தான் அவர் இத்தனை காலமும், இத்தனை துன்பங்களையும் பொறுத்துக் கொண்டிருந்தார்.

நாலு ஆண்டுகள் நகர்ந்து சென்றன. ராமண்ணுவுக்கு இப்போது வயது கிட்டத்தட்ட ஐம்பதுக்குமேல் ஆகி விட்டது. வறுமையின் மங்கிய ஒளி அவர் கண்களில் பிரதிபலித்தது. முதுமையின் வடு அவர் உடலெங்கும் வியாபித்திருந்தது.

இன்னும் ஒரு வருஷத்தில் தம் மகன் வேலைக்குப் போக ஆரம்பித்து விடுவான். அன்றே இந்தக் கோமாளித் தொழிலுக்குத் தலை முழுக்குப் போட்டு விடலாம். இந்த ஒரே நம்பிக்கைதான் அவரை வாழ வைத்தது.

ஒரு நாள் காலையில் 'தலையை வலிக்கிறது' என்று சொல்லிக்கொண்டிருந்த அவருடைய மகனுக்கு மாலையில்

நல்ல காய்ச்சல் கண்டுவிட்டது. ராமண்ணு கலங்கிவிட்டார். அவர் மனைவி கை வைத்தியமாக ஏதேதோ செய்து பார்த்தாள். எதற்கும் ஜுரம் குறையவில்லை. இரண்டு நாட்கள் நடந்தன. மகன் படுத்த படுக்கையாகவே கிடந்தான். டாக்டரை அழைத்து வந்து வைத்தியம் செய்ய வசதியில்லாத ராமண்ணு, மனக் கவலையோடு இங்குமங்கும் அலைந்து கொண்டிருந்தார். மூன்றும் நாள் சற்று ஜுரம் குறைந்தது. இந்தச் சமயத்தில் ராமண்ணுவுக்கு ஒரு கடிதம் வந்தது. ராஜபார்ட் ரங்கப்பாதான் எழுதியிருந்தார். மதுரையில் சேர்ந்தாற்போல் ஏழு நாடகங்களுக்கு ஏற்பாடாகி யிருக்கிறதென்றும், மொத்தத்துக்கும் சேர்த்து நூறு ரூபாய் தருவதாகவும் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. அத்துடன் மதுரையில் நாடக ரசிகர்கள் சங்கத்தில் ராமண்ணுவின் நடிப்பைப் பாராட்டி ஒரு பொன்னுடை போர்த்திக் கௌரவிக்க ஏற்பாடு நடந்து கொண்டிருப்பதாகவும் அவர் எழுதியிருந்தார்.

ராமண்ணுவுக்கு மகிழ்ச்சி தாங்கவில்லை. மனைவியிடம் கடிதத்தைப் படித்துக் காட்டி, "தங்கம், இத்தனை துன்பங்களுக்கும் நடுவிலே எனக்கு யோகம் அடிக்குது பார்த்தியா?" என்று சிறு பிள்ளை போல் கூறி மகிழ்ந்தார்.

"ஆமாம்; மதுரைக்குப் போகப் பணத்துக்கு என்ன செய்யப் போறீங்க?" என்று கேட்டாள் தங்கம்மாள்.

"நாடகக் காண்டிராக்டர் குப்புசாமிப் பிள்ளை இந்த ஊருக்கு வந்திருக்காராம். அவர்தான் மதுரையிலே காண்டிராக்ட் எடுத்திருக்காராம். அவரைப் போய்ப் பார்த்துப் பணம் கேட்டு வாங்கி வரப் போகிறேன்" என்று புறப்பட்ட ராமண்ணு முப்பது ரூபாயுடன் திரும்பிவந்தார்.

படுக்கையில் படுத்திருந்த அவர் மகன், "அப்பா, பள்ளிக்கூடத்திலே இன்னும் பத்து நாளைக்குள் பணம் கட்டாவிட்டால் பரீட்சைக்கே சேர்த்துக்க மாட்டாங்களாம்" என்று ஈனசுரத்தில் முனகினான்.

"கவலைப்படாதே தம்பி, மதுரையிலிருந்து திரும்பி வந்ததும் கட்டி விடலாம். இன்னும் பத்து நாள் இருக்கிற

தில்லையா? அதுக்குள்ளே உனக்கும் உடம்பு குணமாயிடும். தங்கம்! இந்தா, இந்த இருபது ரூபாயை வச்சுக்க. வைத்தியரை அழைச்சுக்கிட்டு வந்து தம்பிக்கு மருந்து வாங்கிக் கொடு. அவன் உடம்பை கவனிச்சுக்க. ஜாக்கிரதை'' என்று மனைவியிடம் எச்சரித்துவிட்டு மதுரைக்குப் புறப்பட்டு விட்டார் ராமண்ணு. ஆயினும் அவர் மனத்தில் நிம்மதி இல்லை. அந்தச் சமயம் அவர் மனைவியும் கருவுற்றிருந்தாள். ராமண்ணு எப்படியோ மனத்தைக் கல்லாக்கிக்கொண்டு மதுரைக்குப் பயணமானுர்.

மதுரையில் மூன்று நாட்கள் தொடர்ந்தாற்போல் நடைபெற்ற நாடகம், நான்காம் நாள் அடாது மழை பிடித்துக்கொள்ளவே தடைப்பட்டு விட்டது.

ஆனுல், ராமண்ணுவுக்குப் பொன்னுடை போர்த்துவது என்று முடிவு செய்திருந்த மதுரை நாடக ரசிகர் சங்கத்தார் மட்டும் விழாவை நடத்தி விடுவது என்று முடிவு செய்தனர். பாராட்டு விழாவுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நகரப் பொது மண்டபத்தில் ரசிகர்களும், பொது மக்களும், பிரமுகர்களும், கலைஞர்களும் துளி இடமில்லாதபடி கூடிக் குழுமியிருந்தனர்.

ராமண்ணுவின் நடிப்புத் திறமையைப்பற்றியும் நாடகக் கலைக்கு அவர் செய்துள்ள சேவையைப்பற்றியும், பலர் வெகுவாகப் பாராட்டிப் புகழ்ந்ததுடன், அவருக்குப் பொன்னுடை போர்த்தி, நூறு ரூபாய் பண முடிப்பும் அளித்தனர்.

ராமண்ணுவின் கந்தல் சட்டையைப் பொன்னுடை மறைத்தது. அப்போதும் அவர் சிரிக்கவில்லை. பற்றற்ற துறவி போல் எழுந்து நின்று நகைச் சுவையின் உயர்ந்த தன்மையைப்பற்றிப் பேசினுர்: ''அந்த அரிய கலை ஒன்று தான் எல்லோரையும் ஆனந்தத்தில் ஆழ்த்தும் சக்தி படைத்தது. என்னை இத்தனை காலமும் சாகாமல் வாழ வைத்ததும் அந்தக் கலைதான். அந்தக் கலைக்கும் எனக்கும் கௌரவம் அளித்த உங்கள் அனைவருக்கும் நன்றி'' என்று கூறிவிட்டு உட்கார்ந்தார் அவர். விழா முடிந்தது.

தமக்குக் கிடைத்த பெருமையையும் பணத்தையும் தம் குடும்பத்தாருடன் பகிர்ந்து கொள்ளும் ஆவலுடன் அடுத்த ரயிலிலேயே ஊருக்குப் பயணமானார் ராமண்ணா. வீட்டுக்குச் சென்றதும் முதல் காரியமாக மகனுடைய சம்பளத்தைக் கட்டிவிடலாம் என்ற மகிழ்ச்சி அவர் உள்ளத்தில் நிரம்பி யிருந்தது.

ஆனால், வீட்டை அடைந்தபோது அவர் கண்ட காட்சி......

அங்கே, அவர் மனைவியைக் காணவில்லை !

மகன் ?...

அவனையும் காணவில்லை. இரண்டு பெண் குழந்தை களும் பட்டினியோடு ஒரு மூலையில் படுத்துக் கிடந்தன.


ராமண்ணாவைக் கண்ட அந்தப் பெண் குழந்தைகளில் ஒன்று எழுந்து வந்து, "அப்பா, அண்ணா செத்துப் போயிட் டான் என்றது.

அந்தச் செய்தியைக் கேட்ட ராமண்ணாவின் தலையில் வானமே இடிந்து விழுவது போலிருந்தது. மின்னல்களும் நட்சத்திரங்களும் அவர் தலையைச் சுற்றிவட்டமிட்டன. அவர் தலை சுழன்றது.

"அம்மா எங்கே?" என்றார் ராமண்ணா. இதற்குள் அங்கே வந்த அடுத்த வீட்டுக்காரர், "ஜுரமாகப் படுத் திருந்த உங்க மகன் நேற்று இறந்துவிட்டான். அந்த அதிர்ச்சி தாங்காமல் உங்கள் மனைவிக்கு வலி கண்டுவிட்டது. ஆசுபத்திரிக்கு எடுத்துக் கொண்டு போயிருக்கிறார்கள். மதுரைக்குத் தந்தி கொடுத்தோமே, வந்து சேரவில்லையா?" என்றார்.

தாம் மட்டும் சிரிக்காமல் மற்ற எல்லோரையும் சிரிக்க வைத்துக் கொண்டிருந்த ராமண்ணா அன்றுதான் முதல் தடவையாக வாய்விட்டுச் சிரித்தார். பின்னர் கையி லிருந்த பொன்னாடையைப் பிய்த்து எறிந்தார்.

அப்புறம் சிரித்துக்கொண்டே இருந்தார் அவர்.




## 1

'கூ ஊஊ!' என்று நீட்டி முழக்கிய ஆலைச் சங்கின் ஒலி அடங்கியதும் தொழிலாளர்கள் அனைவரும் அணை திறந்த வெள்ளம்போல் அலை அலையாக வெளியே வந்துகொண்டிருந்தார்கள்.

அப்போது மணி பன்னிரண்டரை.

சாப்பாட்டுக்கான இடைநேரம். மணி ஒன்றரை ஆனதும் இடைவேளை முடிந்து விட்டதை அறிவிக்க மீண்டும் சங்கு ஊதப்படும். இந்த ஒரு மணி நேர இடைவேளை தான் தொழிலாளர்களின் இன்ப நேரம்.

அதுவரை வெறிச்சோடிக் கிடக்கும் ஆலையின் வெளிப்புறச் சூழ்நிலையில் சங்கு பிடித்ததும் ஒருவிதப் பரபரப்பும் கலகலப்பும் தோன்றிவிடும். சாப்பாட்டுக் கூடைகளும், அவற்றிலுள்ள பளபளக்கும் பித்தளை டிபன் காரியர்களும் ஆங்காங்கே பளிச்சிடும்.

சாரங்கா மில்லைச் சுற்றிலும் நிழல் மரங்களுக்குக் குறைவில்லை. காட்டு வாழை, தூங்குமூஞ்சி, செந்நிறப் பூக்களைக்கொண்ட கலியாண முருங்கை ஆகிய பல்வேறு மரங்கள் குளிர் நிழலைப் பரப்பிக் கொண்டிருக்கும்.

அந்த மரங்களுக்கு அடியில்தான் தொழிலாளர்கள் உட்கார்ந்து சாப்பிடுவது வழக்கம். நாய்கள் நாக்கை நீட்டிய படியே அவர்கள் உண்ணும் உணவைக் கண்கொட்டாமல் கவனித்துக் கொண்டிருக்கும். மரங்களின்மீதும், சுவர்களின் மீதும் உட்கார்ந்துள்ள காக்கைகள் மேலிருந்தபடியே எதைக் கொத்திச் செல்லலாம் என்று குறி பார்த்துக் கொண்டிருக்கும்.

பூண்டு சேர்த்த மசாலாக் குழம்பின் நெடி சுற்றிலும் சூழ்ந்து வீசும்.

அன்று சங்கு ஊதியதும் தொழிலாளர்கள் அனைவரும் அவரவர்கள் வழக்கமாக உட்காரும் இடங்களில் போய் அமர்ந்து விட்டார்கள்.

அதோ, அந்த வேப்ப மரத்தடியில் நிற்கும் கன்னிப் பெண் யார்? அவள் யாரைத் தேடுகிறாள்? யார் வரவை அத்தனை ஆர்வத்துடன் எதிர்பார்த்துக் கொண்டிருக் கிறாள்?

மில் தொழிலாளி நாராயணசாமி நிதானமாக வெளியே வந்து கொண்டிருந்தான். அவன் கண்கள் யாரையோ தேடின.

வழக்கமாக அவனுக்குச் சாப்பாடு கொண்டு வரும் கிழவி எங்கே? நாராயணசாமியின் வரவை எதிர்நோக்கி வேப்ப மரத்தடியில் நின்றுகொண்டிருந்த அப்பெண்ணின் கண்களில் அவனைக் கண்டதும் ஒருவித ஒளி தோன்றியது. முகத்தில் மகிழ்ச்சி பிரதிபலித்தது. இதழ்கள் முறு வலித்தன.

அந்தப் பெண்ணைக் கண்டதும் நாராயணசாமிக்கு எத்தனை மகிழ்ச்சி! வேப்ப மரத்தை நோக்கி வேகமாக நடந்து சென்றான் அவன்.

''பாப்பா! இந்த வெயில்லே நீயா சாப்பாடு எடுத்துக் கிட்டு வந்தே? தார் ரோடிலே கால் சுட்டுப் போயிருக்குமே! ஏன், அந்தக் கிழவிக்கு என்னவாம்?''—அன்பும் பாசமும் கனிந்த குரலில் கேட்டான் நாராயணசாமி.

''அதுக்கு வூட்லே வேலை இருக்குதாம். புள்ளைக்குக் காய்ச்சலாம். வரலேன்னு சொல்லிடுச்சு. அதனாலே நான் எடுத்தாந்தேன்'' என்றாள் பாப்பா.

வேப்ப மரத்துக்குச் சற்றுத் தூரத்தில் காம்பவுண்டுச் சுவர் திருப்பத்தில் உட்கார்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்த கண்ணம்மாவின் முகம் கறுத்துச் சிறுத்தது. இதயத்தில் பொறாமைத் தீ கொழுந்துவிட்டு எரிந்தது. அவர்கள் இருவருக்கும் உள்ள உறவின் தன்மையை அறிந்து கொள்ளத் துடித்தாள் அவள்.

பாப்பா இலையைப் போட்டுப் பரிமாறினாள். அன்று அமாவாசையானதால் வெறும் மரக்கறி உணவுதான். நாராயணசாமிக்கு அவ்வளவாகப் பிடித்தமில்லாத சாப்பாடு. அவன் புட்டியில் நிரப்பிக்கொண்டு வந்திருந்த தண்ணீரை இடையிடையே குடித்துக்கொண்டே சாப்பாட்டை விழுங்கித் தீர்த்தான்.

''அம்மா எட்டணா வாங்கியாரச் சொல்லிச்சு.''-அந்தப் பெண் அவனிடம் பணம் கேட்டாள்.

''எதுக்குப் பணம் ?''

''அது எதுக்கோ ? என்னைக் கேட்டா ?''

அவன் தன் சட்டைப்பைக்குள் கையைவிட்டு எட்டணாச் சில்லறையை எடுத்துப் பாப்பாவின் கையில் கொடுத்தான். அவள் உற்சாகத்துடன் கூடையைத் தூக்கித் தலையில் வைத்துக்கொண்டு புறப்பட்டு விட்டாள்.

கண்ணம்மா சாப்பாட்டை முடித்துக்கொண்டு மில்லில் வேலை செய்யும் தன் சிநேகிதிகளுடன் 'தாயம்' ஆடிக் கொண்டிருந்தாள். நாராயணசாமி அந்தப் பக்கம் திரும்பிப் பார்த்தான்.

கண்ணம்மா கடைக்கண்ணுல் அவனைப் பார்த்தும் பார்க்காதது மாதிரிச் சட்டென முகத்தைத் திருப்பிக் கொண்டு, விளையாட்டில் கவனம் செலுத்துவதுபோல் பாசாங்கு செய்தாள்.

'எப்போதும் தன்னைச் சிரித்த முகத்துடன் பார்க்கும் அவள் இன்று ஏன் ஒரு மாதிரியாக இருக்கிறுள்?' நாராயணசாமிக்கு ஒன்றும் புரியவில்லை.

அவன் அவளை அணுகிப் பேசியிருப்பான். 'அவள் முகம் கொடுத்துப் பேசத் தயாராயில்லாதபோது தான் மட்டும் ஏன் அவளிடம் பேச வேண்டும்?' என்ற எண்ணம் அவனைத் தடுத்தது.

மில் சங்கு மீண்டும் ஒலித்தது. ஆலையைவிட்டு வெளியே வரும்போது எல்லாருக்கும் பின்னுல் நிதானமாக வந்த நாராயணசாமி இப்போது எல்லாருக்கும் முன்னுல் வேகமாக உள்ளே சென்றுன்.

இயங்கும் விசைக் கருவிகளிலிருந்து பிரிந்த மெல்லிய நூல் இழைகள் இடையருமல் ஓடிக் கொண்டிருந்தன.

இயந்திரங்களின் பேரிரைச்சல் தொடர்ந்து கேட்டுக் கொண்டிருந்தது. நாராயணசாமி ஏதோ செய்துகொண்டே எதையோ சிந்தித்துக்கொண்டிருந்தான். அவனிருந்த இடத்துக்கு அடுத்த பக்கத்தில் பெண்கள் வரிசையாக அமர்ந்து வேலை செய்து கொண்டிருப்பதைக் கண்ணுடி ஜன்னல் வழியாகக் காண முடியும். கண்ணம்மா எப்போதும் நாராயணசாமியும் தானும் ஒருவரையொருவர் பார்த்துக் கொள்ளும் கோணத்தில் உட்கார்ந்திருப்பது வழக்கம். ஆனுல் இன்று மட்டும் ஏனே வேறு இடத்தில் போய் உட்கார்ந்திருக்கிறுள்? தன்மீது அவளுக்கு என்ன கோபம்? இலேசாகத் தலையில் வெண்பஞ்சு படிந்திருக்கும் அவள் முகம் அவனுடைய மனக் கண்முன் தோன்றியது.

'பாவம், கண்ணம்மா கிழவியாகி விட்டால் அவள் தலை இப்படித்தான் நரைத்து வெளுத்துவிடும்!' என்ற ஒரு விசித்திரமான எண்ணம் அவன் உள்ளத்தில் தோன்றியது.

அதை நினைக்கும்போது அவனுக்குத் தன்னை அறியாமல் சிரிப்பு வந்துவிட்டது.

இடைவேளையில் எப்போதும் கண்ணம்மா தன்னைப் பார்க்காமல், பேசாமல், சிரிக்காமல் போக மாட்டாளே? இன்று என்ன வந்துவிட்டது அவளுக்கு?

ஒரு வேளை பாப்பாவைப் பார்த்துவிட்டுக் கண்ணம்மா தப்புக் கணக்குப் போட்டிருப்பாளோ?

தினமும் சாப்பாட்டு வேளையில் கீரை மசியல் அல்லது மீன் குழம்பு என்று ஏதாவது ஒன்றைக் கொண்டு வந்து கொடுப்பாளே? இன்று அவள் தன்னைத் திரும்பியும் பார்க்கவில்லையே!

இன்று வேலை செய்யும் இடத்திலும் வேண்டுமென்றே இடம் மாறி உட்கார்ந்திருக்கிறுள். எதையோ மனத்தில் எண்ணிக் கொண்டுதான் இப்படிப் பேசாமல் இருக்கிறுள்.

எத்தகைய துன்பங்களையும் பொறுத்துக் கொள்ளக் கூடிய நாராயணசாமிக்குத் தன்னுடைய காதலி கண்ணம்மாவின் போக்கு பெரும் வேதனையை அளித்தது.

2

ஆலையின் காரியாலயப் பகுதியில் ஏதோ ஒருவித இருள் படர்ந்த சூழ்நிலையின் அறிகுறி தென்பட்டது.

மில் முதலாளி சாரங்கபாணியின் அறையிலிருந்து ஒலித்த மணி ஓசையில் எப்போதும் தொனிக்கும் இனிமை இல்லை. துயரத்தின் ஓலமாகவே தொனித்தது.

பியூன் வேணுகோபால் ஓடிச்சென்று மானேஜர் ரங்கசாமியிடம் முதலாளி அழைப்பதாகக் கூறினுன்.

ரங்கசாமி தயாராக வைத்திருந்த ஆலைத் தொழிலாளர்களின் பட்டியல், அவர்களுடைய சம்பளம், சர்விஸ் காலம் முதலிய விவரங்கள் அடங்கிய 'பைலு'டன் முதலாளி அறைக்குள் புகுந்தார். இதற்குள்ளாகவே ஆபீசுக்குள் விஷயம் புகையத் தொடங்கிவிட்டது. 'ஆலையில் ஆள்

குறைப்பு நடக்கப் போகிறது' என்னும் இரகசியம் கிட்டத் தட்ட எல்லாருடைய செவிகளுக்கும் எட்டிவிட்டது.

"ஏதோ என்னுடன் முக்கியமான ஒரு விஷயத்தைப் பற்றிப் பேசவேண்டும் என்று நேற்று சொன்னீர்களே, என்ன விஷயம்?" என்றார் சாரங்கபாணி, மானேஜரிடம்.

"ஸார், வியாபாரிகளிடமிருந்து போதிய பருத்தி கிடைக்காததாலும், இரண்டு இயந்திரங்கள் உபயோக மற்றுப் போய்விட்டதாலும் இரண்டு வருட காலமாகவே நம்முடைய மில்லில் பெருத்த நஷ்டம் ஏற்பட்டுக்கொண் டிருக்கிறது. இந்த வருடம் ஏற்பட்டுள்ள நஷ்டம் இலட்சத்து அறுபதாயிரம் ரூபாய். இதோ 'பாலன்ஸ் ஷீட்'" என்றார் ரங்கசாமி.

புருவத்தைச் சுளித்தபடி அதைக் கவனித்தார் சாரங்க பாணி. "நஷ்டம் ஏற்படாமலிருக்க என்ன செய்யலாம்?"

"ஆட்களைக் குறைப்பதைத் தவிர வேறு எந்த வழியுமே தோன்றவில்லை. மொத்தத்தில் ஐந்நூறு ஆட்களைக் குறைத் தால்தான் நம்முடைய மில் மீண்டும் பழையபடி இலாபத் தில் வேலை செய்யத் தொடங்கும்" என்றார் மானேஜர்.

"எவ்வளவு? ஐந்நூறு பேரா? அப்படியானால் நம் மில்லில் வேலை செய்பவர்கள் மொத்தம் எத்தனை பேர்?" —இதயமே நின்றுவிடும் போன்ற அதிர்ச்சியுடன் கேட்டார் சாரங்கபாணி.

"பார்சல் செக்ஷனிலிருந்து 'கிளரிகல்' செக்ஷன்வரை மொத்தம் ஆயிரத்து நூற்று எழுபது பேர் இருக்கிறார்கள். இவர்களில் பெண் தொழிலாளர்கள் இருநூற்று அறுபது பேர்" என்றார் மானேஜர்.

முதலாளி ஈன சுரத்தில், 'உம், உம்' என்று முணு முணுத்தபடியே, மானேஜர் கொடுத்த பட்டியலை வாங்கிப் பார்த்தார்.

அவர் மேஜைமீது கொண்டு வைக்கப்பட்டிருந்த காப்பி சில்லென்று ஆறிப்போய், ஏடு தட்டிக் கொண்டிருந்தது.

"கூடாது, கூடாது, கூடாது!"—தலையை இப்படியும் அப்படியும் அசைத்தார் அவர்.

"ஐந்நூறு பேரை ஒரு நாளும் எடுக்கக்கூடாது. நமக்கு இலாபம் என்பதே வேண்டாம். நஷ்டம் இல்லாமல் நடந்து கொண்டிருந்தால் அதுவே போதும். நஷ்டமில்லாமல் நடத்துவதற்குக் குறைந்தபட்சம் எத்தனை ஆட்களைக் குறைத் தால் போதுமோ, அவ்வளவு பேரை மட்டுமே வேலையி லிருந்து எடுத்தால் போதும்."

"அதற்கும் இதோ ஒரு கணக்குப் போட்டு வைத்திருக் கிறேன். நூற்று முப்பது பேரைக் குறைத்தால் போதும். மில்லை இலாப நஷ்டமின்றி நடத்த முடியும்" என்றார் மானேஜர்.

"ஐந்நூறு பேரை அனுப்பிவிட்டு அதனால் கிடைக்கும் இலாபம் எனக்கு வேண்டவே வேண்டாம். அதைக் காட்டி லும் நூற்று முப்பது பேரை மட்டுமே குறைக்கலாம். மில் மீண்டும் இலாபத்தில் வேலை செய்ய ஆரம்பித்துவிட்டால் அவர்கள் அத்தனை பேருக்கும் முதலில் வேலை கொடுத்து விடலாம். இங்கு வேலை செய்யும் மற்றத் தொழிலாளர் களின் நன்மையை உத்தேசித்து இப்போதைக்கு இந்தக் காரியத்தைச் செய்வதைத் தவிர வேறு வழியே புலப்பட வில்லை. எங்கே, இப்படிக் காட்டுங்கள் அந்த லிஸ்ட்டை" என்று அந்தப் பட்டியலை வாங்கிப் பார்த்தார் சாரங் பாணி. அதில் வரிசையாக எழுதப்பட்டிருந்த பெயர்களுக் கிடையில் நாராயணசாமி என்னும் பெயரும் இருந்தது. அதைக் கண்டதும் அவர் திடுக்கிட்டார்.

"யார், இந்த நாராயணசாமி நம் மில்லில் போர் மேனயிருந்த பாண்டுரங்கத்தின் மகனா?"

"ஆமாம்" என்றார் ரங்கசாமி.

"பாண்டுரங்கம் இந்த மில்லில் முப்பது வருட காலம் உழைத்து, உடல் தேய்ந்து, காச நோயால் பாதிக்கப்பட்டு எலும்புக்கூடாகி உயிர் நீத்தவன். தன் வாழ் நாளெல்லாம் இந்த மில்லின் வளர்ச்சிக்காகவே பாடுபட்டவன். நேர்மை,

ஒழுக்கம், உழைப்பு, விசுவாசம், கடமை உணர்ச்சி முதலிய அரிய நற்பண்புகளுக்கெல்லாம் உறைவிடமாக விளங்கியவன். அவனுடைய ஒரே மகன்தான் நாராயணசாமி. எனக்கென்னவோ இவனை வேலையிலிருந்து விலக்குவது அவ்வளவு நியாயமாகப் படவில்லை. காலமெல்லாம் இந்த மில்லுக்காகவே உழைத்துப் பாடுபட்ட பாண்டுரங்கத்தின் குடும்பத்துக்கு நாம் செய்யும் பிரதி உபகாரம் இதுதானா ?''

முதலாளியின் குரலில் விவரிக்க இயலாத வருத்தமும் வேதனையும் வெளிப்பட்டன.

"தாங்கள் சொல்வது உண்மைதான். ஆயினும் நாராயணசாமியை வேலைக்கு வைத்துக்கொண்டால் அதனால் பல இடையூறுகள் ஏற்படுமே! அவனுக்கு முன்பாகவே வேலையில் சேர்ந்தவர்களை யெல்லாம் நீக்கிவிட்டு, அவனை மட்டும் வேலைக்கு வைத்துக் கொள்வது சரியாகாதே ?'' என்றார் மானேஜர்.

மானேஜர் வாதம் நியாயமாகப் பட்டது சாரங்கபாணிக்கு.

''அப்படியானால் அவனை வேலையிலிருந்து நீக்கி விடவேண்டியதுதானா? வேறு வழியே இல்லையா? நாராயணசாமிக்குப் பிறகு வேலைக்கு வந்தவர்களை மட்டும் நீக்கிவிட்டால் என்ன?'' என்று கேட்டார் அவர். "அவனுக்குப் பிறகு முப்பது பேர்களைத்தானே வேலைக்குச் சேர்த்திருக்கிறோம்'' என்றார் மானேஜர்.

முதலாளியின் நெற்றியில் சுருக்கங்கள் அலைந்தன.

''சரி; இந்த நூற்று முப்பது பேருக்கும் 'நோட்டீஸ்' கொடுத்து விடுங்கள். நோட்டீஸ் போர்டிலும் ஆள் குறைப்பு பற்றி விவரமாக அறிக்கை ஒன்றைத் தயார் செய்து ஒட்டி விடுங்கள்'' என்றார் சாரங்கபாணி அரை மனத்துடன்.

அடுத்த சில நிமிடங்களில் காரியாலயத்தில் இருந்த டைப் ரைட்டர்கள் அத்தனையும் நெல் பொரிவதைப் போல 'பட் பட பட்' டென்று எழுத்துக்களைப் பொறித்துக்கொண்டிருந்தன.

''போதிய பருத்தி கிடைக்காததாலும் இரண்டு இயந்திரங்கள் உபயோகமற்றுப் போய்விட்டதாலும் நம்முடைய மில் இரண்டு வருடமாக நஷ்டத்தில் நடைபெற்று வருகிறது. நஷ்டத்தைத் தவிர்க்க வேறு வழியே இல்லாததால் கீழ்க் கண்ட 130 பேரையும் வேலையிலிருந்து நீக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதைக் குறித்து நான் மிகவும் வருத்தப்படுகிறேன். இதர தொழிலாளர்களின் நன்மையை உத்தேசித்து வேலை இழக்க நேரிடும் தொழிலாளர்கள் இதனை ஒரு தியாகமாக மதித்து மன அமைதி பெற வேண்டுகிறேன். மீண்டும் மில் இலாபகரமாக நடக்கத் தொடங்கியதும் வேலை இழந்தோர் அனைவருக்குமே வேலை கொடுப்பதாக உறுதி அளிக்கிறேன். அத்துடன் வேலை இழக்கும் எல்லோருக்கும் சட்டப்படி கொடுக்க வேண்டியதற்குமேல் மூன்று மாதச் சம்பளம் கொடுத்தனுப்பவும் முடிவு செய்திருக்கிறேன்.

சாரங்கபாணி.''

அன்று மாலை சங்கு ஊதியதும் தொழிலாளர்கள் அனைவரும் வழக்கம்போல் ஆலையை விட்டு வெளியே செல்லவில்லை. அந்த நோட்டீஸ் போர்டு இருந்த இடத்தில் போய்ச் சூழ்ந்து கொண்டார்கள்.

நாராயணசாமி தனக்கு வந்த அந்த நோட்டீசைப் பிரித்துப் படித்துக்கொண்டே தளர்ந்த நடையுடன் ஆலையை விட்டு வெளியேறிக் கொண்டிருந்தான். இதற்குள் கண்ணம்மாவுக்கு விஷயம் எட்டிவிட்டது. அந்தப் பேரிடி போன்ற செய்தியைக் கேட்ட அவள் துடிதுடித்துப் போனாள். சற்றுத் தொலைவில் எட்டி நின்றபடியே கசங்கிய கண்களுடன் தன் காதலன் செல்லும் திக்கையே பரிதாபத்துடன் பார்த்துக்கொண் டிருந்தாள் அவள்.

3

ரேடியோப் பெட்டிகளைப்போல் வரிசை வரிசையாகக் கட்டப்பட்டிருந்த 'சாரங்கா நகர்' குவார்ட்டர்ஸில் சுமார் நூற்றைம்பது வீடுகள் இருந்தன.

பெரும்பாலும் ஆலையைச் சேர்ந்த ஊழியர்களே அந்த வீடுகளில் வாழ்ந்து வந்தனர். இரண்டாவது பிளாக்கைச் சேர்ந்த முதல் தெருவில்தான் நாராயணசாமி குடியிருந் தான். அவன் வீட்டுக்கும் மில் முதலாளி சாரங்கபாணியின் பங்களாவுக்கும் அதிக தூரம் இல்லை. பங்களாவுக்கு நேர் எதிரில் அமைந்திருந்தது அவன் வீடு.

நாராயணசாமி, அவனுடைய தங்கை பாப்பா, தாயார் மூவர்மட்டுமே அந்த வீட்டில் வசித்து வந்தனர்.

மறைந்துபோன பாண்டுரங்கத்தின் புகைப்படம் ஒன்று அந்த வீட்டுக் கூடத்தில் மாட்டப்பட்டிருந்தது. வெள்ளிக் கிழமைதோறும் பாப்பா அந்தப் படத்துக்கு மாலை தொடுத் துப் போடுவது வழக்கம்.

அன்று வெள்ளிக்கிழமையானதால் பாப்பா பூ வாங்கி வரும் பொருட்டுக் கடைத்தெருவுக்குப் புறப்பட்டாள்.

கடைத்தெருவுக்குச் செல்ல இரண்டு வழிகள் உண்டு. மெயின் கேட் வழியாகவும் போகலாம். இன்னொரு வழி யாகவும் போகலாம். பாப்பா மெயின் கேட் வழியாகவே சென்றாள்.

ஏனெனில், மெயின் கேட்டுக்கருகில்தான் அவளுடைய அத்தை மகன் மில் குவார்ட்டர்ஸ் வாச்மேன் வடிவேலு நின்று கொண்டிருப்பான்.

பாண்டுரங்கத்தின் சிபாரிசின் பேரில் வடிவேலுவுக்கு அந்தக் குவார்ட்டர்ஸில் 'வாச்மேன்' வேலை கிடைத்தது. இப்போது அவனுக்கு நாலைந்து வருட 'சர்விஸ்' ஆகி விட்டது. அவன் வேலைக்கு வந்து சேர்ந்த சமயம் பாப்பா பன்னிரண்டு வயதுச் சிறுமியாக இருந்தாள்.

இப்போது?...

பாவாடை சிற்றாடையாக மாறி, சிற்றாடை சேலையாகி விட்ட பருவம். அவள் பார்வை, நடை, பேச்சு எல்லாமே அவனை மயங்கச் செய்தன.

வடிவேலு பாப்பாவையே கண்கொட்டாமல் பார்த் துக்கொண்டிருந்தான்.

''வாச்மேன் ஐயா ! என்ன அப்படிப் பார்க்கிறீங்க ?'' என்று சிரித்துக்கொண்டே கேட்டாள் பாப்பா.

''இல்லே, உன்னே 'வாச்' பண்றேன்'' என்ருன் வடிவேலு.

''உனக்கு எப்போதும் குறும்புப் பேச்சுத்தான்...நான் போறேன்...''

''எங்கே?...''

''பூ வாங்க; இன்னேக்கு வெள்ளிக்கிழமையாச்சே. அண்ணன் வரதுக்குள்ளே அப்பாரு படத்துக்குப் பூ தொடுத்தும் போட்டு வைக்கணும்'' என்ருள் அவள்.

''பாப்பா? உனக்கு சங்கதி தெரியாதா ?''

''என்ன ?...''

''மில்லிலே நூற்றுமுப்பது பேரை வேலேயிலிருந்து எடுத்துட்டாங்க.''

''என்ன? நம்ப மில்லுலேயா? இருக்காதே! முதலாளி ரொம்ப நல்லவராச்சே!'' வியப்பும் திகைப்பும் மேலிட்டவளாய்க் கேட்டாள் அவள்.

''நல்ல முதலாளிங்களுக்குத்தானே சோதனேயெல்லாம் வந்து சேருது. மில்லிலே இரண்டு வருசமா இலட்சக்கணக்கிலே நஷ்டமாம். முதலாளி என்ன செய்வாரு ? அவர் நல்லவர்தான். ஆனுல், எத்தனே நாளேக்குத்தான் நஷ்டத்திலே நடத்துவாரு ? மறுபடியும் இலாபம் வருகிறபோது எல்லாரையும் வேலேக்கு எடுத்துக்கிறதாக வாக்குக் கொடுத்திருக்காராம்.''

''அது சரி, நமக்குத் தெரிஞ்சவங்க யாருக்கானும் வேலே போயிடுச்சா என்ன ?''

''அதெல்லாம் எனக்குத் தெரியாது உங்க அண்ணன் பேருகூட அதிலே இருக்குதுன்னு கேள்வி'' என்ருன் வடிவேலு. பாப்பா திடுக்கிட்டாள்.

வடிவேலுவைக் கண்டதும் பாப்பாவின் கண்கள் கலங்கி விட்டன. அதைக் கண்ட வடிவேலு, "அழாதே பாப்பா! கவலைப்படாதே!" என்று அவளைத் தேற்றினன்.

"அத்தான்! அண்ணனை வேலையிலிருந்து நிறுத்திட்டாங்களே, அப்படின்னு நாங்க குடியிருக்கிற வீட்டையும் காலி பண்ணிடச் சொல்லுவாங்களா?" என்று கேட்டாள் பாப்பா.

"முதலாளி அப்படியெல்லாம் செய்ய மாட்டாரு. அவர் ஒரு தெய்வப் பிறவி. வேலை இழந்த ஏழைத் தொழிலாளிங்களுக்கு வேறு எப்படி உதவி செய்யலாம்னுதான் யோசிச்சுக்கிட்டிருப்பாரு. நீ கவலைப்படாதே. பூ வாங்கிக்கிட்டு அண்ணன் வரத்துக்கு முன்னலே நீ வூட்டுக்குப் போய்ச் சேரு" என்று கூறி அனுப்பினன்.

4

அப்போது மணி ஆறு.

சாரங்கபாணி தம் பங்களாவுக்குத் திரும்பி வந்ததும் 'மள மள' வென்று மேல் மாடிக்குச் சென்றவர் அப்படியே படுக்கையில் சாய்ந்துவிட்டார். அவர் இதயம் கனத்தது. தலையை ஏதோ ஒரு பெரும் பாரம் அழுத்தியது. செய்யக்கூடாத ஒரு குற்றத்தைச் செய்துவிட்டதாக அவர் மனம் உறுத்தியது. படுக்கையை விட்டு எழுந்தார்; நின்றார்; உட்கார்ந்தார்; இப்படியும் அப்படியும் நடந்தார். எதிலும் அமைதி ஏற்படவில்லை. இத்தகைய ஒரு துன்பத்தை அவர் இதற்குமுன் அநுபவித்ததே இல்லை.

'நியாயமாகச் செய்ய வேண்டிய காரியத்தைத்தானே செய்திருக்கிறோம்? இதில் வருத்தப்பட என்ன இருக்கிறது?' என்று தனக்குத்தானே சமாதானம் கூறிக்கொண்டது அவர் மனம். அப்போது பங்களாவுக்கு முன்னல் மில் தொழிலாளர்களின் குழந்தைகள் கூச்சலிட்டு விளையாடிக் கொண்டிருப்பது அவர் காதில் விழுந்தது. மாடியிலிருந்தபடியே அவர்களை எட்டிப் பார்த்தார் அவர்.

குழந்தைகள் குதூகலத்தோடு ஓடி ஆடி விளையாடிக் கொண்டிருந்தார்கள்.

ஒரு குழந்தை கையில் மசால்வடையுடன் நின்றுகொண்டிருந்தது. மரத்திலிருந்த காக்கை ஒன்று சட்டெனப் பறந்து வந்து அக் குழந்தையின் கையிலிருந்த வடையைக் கொத்திக்கொண்டு போய்விட்டது. வடையைப் பறி கொடுத்த குழந்தை வீறிட்டு அழுதது. அந்தக் காட்சி சாரங்கபாணியின் இதயத்தை வாள்கொண்டு பிளப்பதைப் போல் இருந்தது. வேலை இழந்த அத்தனை தொழிலாளர்களும் தங்கள் வருமானம் பறிபோய் விட்டது குறித்து அழுவதுபோல் தோன்றியது அவருக்கு.

அவர் கண்களில் நீர் பெருகிக் கொண்டிருந்தது. மில் குவார்ட்டர்ஸ்களில் எரிந்துகொண்டிருந்த விளக்குகளிலிருந்து வீசிய ஒளிக் கதிர்கள் கண்ணீர்த் துளிகளாய் மாறிச் சிதறுவதுபோல் தோன்றின. தெருக் கோடியில் போர்மேன் பாண்டுரங்கத்தின் மகன் நாராயணசாமி தலை குனிந்த வண்ணம் மெதுவாக நடந்து வந்துகொண்டிருந்தான். அவனைக் கண்டபோது அவருக்கு உடம்பெல்லாம் என்னவோ செய்தது.

சத்தியத்தின் சின்னமாக, உழைப்பின் உருவமாக, கடமையின் தோற்றமாக விளங்கினுன் பாண்டுரங்கம். ஒழுக்கத்திலும் நேர்மையிலும் தந்தைக்கு மகன் சற்றும் தாழ்ந்தவனன்று என்ற பெயருடன் விளங்கினுன் நாராயணசாமி. அவனைக் கண்டதும் பாண்டுரங்கத்தின் நினைவு வந்துவிட்டது சாரங்கபாணிக்கு.

ஒரு சமயம் சாரங்கபாணி பாண்டுரங்கத்தினிடம், ''உனக்கு ஏதாவது செய்ய வேண்டுமென்று நான் வெகு நாட்களாக எண்ணிக் கொண்டிருக்கிறேன். எது வேண்டுமானுலும் சொல்'' என்று கேட்டபோது ''எனக்கு என்னங்க வேணும்? என் மகனுக்கு உங்க மில்லிலேயே ஒரு வேலை போட்டுக் கொடுத்து என் குடும்பத்தைக் காப்பாத்துங்க'' என்று திருப்தியுடன் அவன் கூறிய பதிலும் அப்போது அவர் நினைவுக்கு வந்தது.

'அந்தப் பாண்டுரங்கத்தின் மகனையா இப்போது வேலையிலிருந்து நீக்கி அவன் குடும்பத்தைத் தத்தளிக்க விட்டு

விட்டேன்?' சாரங்கபாணி தம் தலையை இரு கைகளாலும் அழுத்திப் பிடித்துக்கொண்டார்.

"அம்மா!" என்று அழைத்துக்கொண்டே உள்ளே நுழைந்த நாராயணசாமியை அவன் தங்கை பாப்பாவும் தாயாரும் எதிர்கொண்டழைத்தார்கள்.

"முதலாளிக்கு ரொம்ப நஷ்டம் வந்துட்டுதம்மா. அப்பா உயிரோடு இருந்தால் இதைக் காதால் கேட்கவே ரொம்பக் கஷ்டப்படுவாரு. நல்ல வேளை! அவர் இப்ப இல்லே."

"உன்னைக்கூடவா அந்த முதலாளி வேலையை விட்டு அனுப்பிச்சுட்டாரு?" என்று ஆத்திரமும் கோபமும் பொங்கக் கேட்டாள் அவன் தாயார்.

"ஆமாம்மா! நான் மட்டும் என்ன ஒசத்தி? எனக்கு முன்னாலே புடிச்சு வேலை செய்யறவங்களையே எடுத்துட்டப்புறம் என்னை மட்டும் எப்படி வெச்சிருக்க முடியும்? முதலாளி ரொம்ப நியாயமாத்தாம்மா செய்திருக்காரு..."

"ரொம்ப நியாயத்தைக் கண்டுட்டே நீ! உங்க அப்பாரு உழைச்ச உழைப்புக்கு முதலாளி செய்யற உபகாரமா இது? இப்போ நானே நேரில் போய் அவரைக் கேக்கறேன். அவர் என்ன பதில் சொல்றாருங்கறதைப் பார்க்கலாம். என் குடும்பத்தை நடுத் தெருவிலே தவிக்கவிட்ட அந்த முதலாளி நல்லாயிருப்பாரா?"

"அம்மா! அந்த உத்தமரைப்பற்றி இந்த மாதிரி இன்னொரு தடவை பேசாதே! நீங்க என்னைப் பெற்ற அம்மாங்கறதாலே பொறுத்துக்கிட்டிருக்கேன். நீங்க போய் அவரை இப்ப ஒண்ணும் கேக்க வேண்டாம். இந்தச் சமயத்திலே, அவரை ஏதாவது கேட்டீங்களானால் ஏற்கெனவே நொந்து போயிருக்கிற அவர் மனசு மேலும் புண்பட்டுப் போகும்.

"நமக்கு அவர் தனியாக எந்தச் சலுகையும் காட்டறதை நான் விரும்பவில்லே. அப்பாரு கஷ்டப்பட்டு உழைச்சாரு;

உண்மைதான். அவர் பிள்ளேங்கறதாலே எனக்கு வேலே கொடுக்கலேயா முதலாளி? நம்ப வடிவேலுக்கு வேலே கொடுக்கலேயா? இப்போ மில் நஷ்டத்துலே நடக்குது. யார் என்ன செய்ய முடியும்? மறுபடியும் இலாபம் வர ஆரம்பிச்சதும் வேலேக்கு எடுத்துக்கறேன்னு எழுத்து மூலமாகவே வாக்குக் கொடுத்திருக்காரே. இதைவிட நியாயமா எப்படி நடந்துக்க முடியும்? இப்போ நீ போய் அவரிடம் என்ன கேட்கப் போறே? என்னே மறுபடியும் வேலேக்கு வைத்துக் கொள்ளணும்னு சொல்லப் போறயா? அதுக்கு நான் தயாராயில்லே. என்னேடு வேலே இழந்தவங்க அத்தனே பேருக்கும் வேலே கொடுத்தப்புறம்தான் நான் வேலேக்குச் சேருவேன். அதுவரைக்கும் அந்த மில் பக்கமே போக மாட்டேன்.''

''பக்கத்து வீட்டு முருகேசனுக்கு நாலு குழந்தைங்க. அவன் படற கஷ்டத்தை விடவா நம் கஷ்டம் பெரிசு? மற்றவங்க படற கஷ்டத்தை நாமும் படுவோம்.'' உறுதியுடன், பிடிவாதத்துடன், தீரத்துடன், தன்னம்பிக்கையுடன் கூறிஞன் நாராயணசாமி.

மாடியில் நின்றபடியே இதையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்த சாரங்கபாணியின் உடல் சிலிர்த்தது. நாராயணசாமியின் உணர்ச்சி மிக்க பேச்சு அவர் உள்ளத்தில் ஊடுருவிப் பாய்ந்தது.

'பாண்டுரங்கத்துக்குப் பிறந்தவன் வேறு எப்படி இருப்பான்?'

வேலே இழந்து தவிக்கும் ஏழைகளின் கதியை எண்ணிய போது அவர் உடல் பதறியது. மகத்தான குற்றம் இழைத்து தீராத பழிக்கு ஆளாகி விட்டவர்போல் தம்மைத் தாமே நொந்து கொண்டார்.

"ஸார்!'' என்ற குரல் கேட்டுத் தலேநிமிர்ந்து பார்த்தார் சாரங்கபாணி. அவருடைய காரியதரிசி அங்கே கையில் ஒரு காகிதத்துடன் நின்று கொண்டிருந்தார்.

''என்ன அது?''

"ஒன்றுமில்லை. வேலையிலிருந்து நீக்கப்பட்டவங்களிலே சில பேர் நம்ம 'குவார்ட்டர்'சிலே குடியிருக்கிறவங்க. அவங்களுக்குத்தான் வேலை போய் விட்டதே! இனிமே அவங்க 'குவார்ட்டர்'சைக் காலிபண்ணச் சொல்லி நோட்டீஸ் கொடுத்துவிட வேண்டியதுதானே?"

"அப்படின்னு எந்தச் சட்டத்திலே சொல்லியிருக்குது? தொழிலாளிங்களை வேலையை விட்டுத்தான் அனுப்பி விட்டோம். இந்தச் சமயத்திலே அவங்க 'குவார்ட்டர்சை' யுமா காலிபண்ணச் சொல்வது? அவங்களை நடுத் தெருவிலே நிற்கச் சொல்றீங்களா? இதுகூடத் தெரியாதா உமக்கு? என்ன மனுஷரய்யா நீங்க! சரி, சரி, நீங்கதான் என்ன பண்ணுவீங்க? நீங்க சொல்ல வேண்டியதைச் சொன் னீங்க" என்றார் சாரங்கபாணி. அந்த அதிர்ச்சியில் அப்படியே மயக்கமுற்றுக் கீழே சாய்ந்து விட்டார் அவர்.

5

கண்ணம்மாவுக்குக் கோபம் ஒருபுறம், துக்கம் ஒரு புறம்.

அன்று பகல் இடைவேளையின்போது, நாராயணசாமி யாரோ ஒரு புதுப் பெண்ணிடம் சிரித்துப் பேசிக் கொண் டிருந்ததைக் கண்டதுமுதல் அவளுக்கு அவன்மீது உள்ளூறக் கோபம் பொங்கிக் கொண்டிருந்தது.

"ஐயோ, இந்தச் சமயம் பார்த்து அவரிடம் கோபித்துக் கொண்டோமே? அவரை எப்படிப் பார்த்துப் பேசுவது? எங்கே சந்திப்பது?" என்று தவியாய்த் தவித்தாள் அவள். திடீரென்று தன் காதலனுக்கு ஏற்பட்ட கதியை எண்ணிய தும், அவள் கோபமெல்லாம் மில் முதலாளியின்மீது திரும்பியது. மில் முதலாளிக்கு விரோதமாகக் கிளர்ச்சி செய்து, அதன்மூலம் மீண்டும் நாராயணசாமிக்கு வேலை வாங்கிக்கொடுத்துவிட விரும்பினாள். 'கிளர்ச்சி', 'புரட்சி' என்பதெல்லாம் அத்தனை எளிய காரியமா? தன்னைப்போன்ற ஒரு பெண்ணினால் சாதிக்கக்கூடிய காரியமா!" என்றும் யோசித்தாள்.

ஏன் முடியாது ?

இரண்டொரு பெண்களிடம் அவள் மெதுவாகப் பேச்சுக் கொடுத்துப் பார்த்தாள்.

''முதலாளி செஞ்சது ரொம்ப அக்கிரமம்னு ஊரிலே பேசிக்கிறுங்களே, தெரியுமா அஞ்சுகம் உனக்கு ?'' என்று தன்னுடன் வேலே செய்யும் பெண்ணெருத்தியுடன் மெதுவாகப் பேச்சைத் தொடங்கிஞள் கண்ணம்மா.

''ஆமாம், முதலாளி செஞ்சது ரொம்ப அநியாயம்னு தான் பேசிக்கிறுங்க'' என்ருள் அஞ்சுகம்.

வேலே இழந்தவர்களில் அஞ்சுகத்தின் அண்ணனும் ஒருவன். எனவே அவளுக்கும் முதலாளிமீது கோபம் இருந்ததில் வியப்பில்லே அல்லவா ?

இவர்கள் பேச்சை ஒட்டுக் கேட்டுக் கொண்டிருந்த இன் ஞெருத்தி, ''முதலாளி ரொம்பத் தங்கமானவரு. அவர் பேரிலே என்ன தப்பு ? நஷ்டம் வந்தால் வேறு என்ன செய் வாங்களாம் ?'' என்று கேட்டாள். தன்னுடைய விரோதி ஒருவனுக்கு வேலே போனதால் ஏற்பட்ட திருப்தியில் அவள் முதலாளி பக்கம் பேசிஞள்.

''உன்னே நியாயம் கேட்கல்லே. நீ சும்மா இரு'' என்று அவள் வாயை அடக்கினர் கண்ணம்மாவும் அஞ்சுகமும்.

''அஞ்சுகம், இந்த விசயத்தை இப்படியே விட்டுவிடக் கூடாது. இன்றுவேலே இழந்தவர்களுக்கு நேர்ந்த கதிதான் நாளேக்கு நமக்கும் நேரும்'' என்ருள் கண்ணம்மா.

''ஆமாம் ; இந்த ஆம்பிள்ளேங்களுக்கு ரோசமே இல்லேயே; எல்லாரும் சும்மா இருக்காங்களே !'' என்ருள் அஞ்சுகம். இருவரும் சேர்ந்து போய் நாலுபேரைத் தூண்டி விட்டார்கள். அந்த நாலுபேர் தங்களுக்குத் தெரிந்தவர் களேத் தூண்டி விட்டனர். இப்படியே ஒருவருக்கொருவர் தூண்டி விட்டுக் கிளர்ச்சியை வலுக்கச் செய்தனர். கடைசி யில் எல்லாத் தொழிலாளர்களுமே முதலாளிக்கு விரோத மாகத் திரும்பும் நிலே ஏற்பட்டு விட்டது ; ஆஞல் இத்தனே புகைச்சலுக்கும் மறைமுகமான காரணம் கண்ணம்மாதான் என்பதை யாராலுமே அறிந்துகொள்ள முடியவில்லே.

தொழிலாளர்கள் இடைவேளையில் சிறுசிறு கூட்டமாகப் பிரிந்து முதலாளிக்கு எதிராக என்ன நடவடிக்கை எடுக்கலாம் என்பதுபற்றி ஆலோசிக்கும் அளவுக்குக் குழப்பம் வளர்ந்து விட்டது. கடைசியில் லேபர் கமிஷனருக்கு ஆள் குறைப்பு விஷயத்தைத் தெரிவித்து விசாரணை நடத்தும்படி கடிதம் எழுதுவதென்று முடிவு செய்தார்கள்.

தான் ஊத்திவிட்ட சிறு பொறி பெருந்தீயாக வளர்ந்து விட்டதை அறிந்த கண்ணம்மாவுக்கு ஆனந்தம் தாங்கவில்லை.

தன் காதலன் நாராயணசாமியைச் சந்தித்து, அவனுக்குச் சாதகமாக மில்லுக்குள் தான் செய்துவரும் இரகசியக் கிளர்ச்சியைப்பற்றிப் பெருமைப்பட்டுக் கொள்ள வேண்டுமென்று நினைத்தாள். ஆனால், அவன் அதைப்பற்றி அறிய நேர்ந்தால் தன்னையே வெறுக்கக்கூடும் என்ற பயமும் இருந்ததால் அவனைப் பார்க்காமலேயே இருந்துவிட்டாள்.

சாரங்கா மில் மாஜித் தொழிலாளர்களில் ஒருவன் முருகேசன். அவனும் மில்லில் வேலை இழந்த இன்னும் சிலரும் மில் தொழிலாளர்களுக்குச் சாப்பாடு கொண்டு வந்து கொடுத்து அதன்மூலம் கிடைக்கும் சொற்ப வருவாயில் குடும்பத்தைக் காப்பாற்றி வந்தனர். வழக்கம்போல் அன்றும் முருகேசன் சாப்பாட்டுக் கூடையைக் கொண்டு வந்தான்.

கண்ணம்மா அவன் தலையிலிருந்த பளுவை இறக்கிக் கொண்டே, "நீங்கள்ளாம் சீக்கிரமே வேலைக்குத் திரும்பி வந்துடலாம். இம்மாதிரி கஷ்டப்படவேண்டாம்" என்றாள்.

"ஏன்...?" என்று ஆவலுடன் கேட்டான் அவன்.

"ஆமாம், தொழிலாளிங்களெல்லாம் சேர்ந்து லேபர் கமிஷனருக்கு எழுதியிருக்கோம். அநேகமாக எல்லாரையும் திருப்பி வேலைக்கு வெச்சுக்கும்படிதான் உத்தரவு போடுவாங்களாம். உங்க பக்கத்து வூட்டுக்கார ஐயாவைப் பார்த்தாச் சொல்லு" என்று உற்சாகத்துடன் கூறினாள் கண்ணம்மா.

"யாரு, நாராயணசாமி கிட்டேதானே? இவ்வளவு நல்ல சமாசாரத்தைச் சொல்லாமல் இருப்பேனு?"

"ஆமாம்; இவ்வளவு தூரத்துக்கு முயற்சி பண்ணி மேலுக்கு எழுதிப்போட்டது யாரு?" என்று கேட்டான் முருகேசன்.

"இங்கே வேலை செய்யற எல்லாருமேதான் முயற்சி எடுத்துக்கிட்டோம். ஏன்? நான்தான் செஞ்சேன்னு வேணுலும் வச்சுக்கயேன்" என்ருள் கண்ணம்மா.

6

மறு நாள் காலை.

மணி எட்டு இருக்கும்.

சாரங்கா மில் ரோடு வழியாகச் சைக்கிளில் போய்க் கொண்டிருந்தான் நாராயணசாமி.

சாலையில் அவனுக்குத் தெரிந்த தொழிலாளர்களெல் லாம் சாரி சாரியாக வந்துகொண் டிருந்தார்கள்.

இரண்டு மைல் தூரத்தில், கூட்டுறவுப் பால் பண்ணை ஒன்று இருந்தது. அந்தப் பண்ணையிலிருந்து பால் வாங்கி, வீடுகளுக்குச் 'சப்ளை' செய்தால் மாதம் முப்பது நாற்பது ரூபாய் கிடைக்கும் என்ற தகவலை அறிந்திருந்த கண்ணம்மா, தன் காதலனுக்காக அந்த வேலைக்கு முயன்று கொண்டிருந் தாள். அந்தப் பண்ணையில் கண்ணம்மாவின் அக்காள் புருஷன் கன்னியப்பன் மானேஜராயிருந்தார்.

இரண்டு நாட்களுக்கு முன்னுல் கண்ணம்மா தன் அக்காள் புருஷனைப் போய்ப் பார்த்து நாராயணசாமிக்கு அந்தப் பண்ணையில் ஏதாவது வேலை போட்டுக் கொடுக்கும் படி கேட்டுக்கொண்டாள்.

"இப்ப ஒண்ணும் 'சான்ஸ்' இல்லையே. பால் சப்ளை செய்யறத்துக்கு மட்டும் ஆள் தேவை. ஆனு அதுக்கும் சைக்கிள் இருக்கணும். சைக்கிள் அலவன்ஸ்னு பத்து ரூபாய் கொடுப்பாங்க. அது தவிர, படிக்கு ஒரணு கமிஷன் கொடுப்

பாங்க. பால் டின்னுங்களைச் சீல் வெச்சுதான் கொடுப்போம். சம்மதம்னு புதன்கிழமை வந்து பார்க்கச் சொல்லு... ஆமாம்; யாரு அந்த நாராயணசாமி?'' என்று விசாரித்தார் கன்னியப்பன்.

கண்ணம்மாள் நாணத்துடன் தலையைக் கவிழ்ந்து கொண்டே, ''எனக்குத் தெரிஞ்சவரு. மில்லிலே வேலை செஞ்சிக்கிட்டிருந்தாரு. இப்ப வேலை போயிடுச்சு'' என்றாள்.

கன்னியப்பன் விஷயத்தைப் புரிந்துகொண்டார். ''சரி, புதன்கிழமை காலம்பர ஒன்பது மணிக்குள்ளற வந்து என்னைப் பார்க்கச் சொல்லு'' என்று கூறி அனுப்பினார்.

கண்ணம்மா சாப்பாடு கொண்டு வரும் முருகேசனிடம் பால் பண்ணை வேலையைப்பற்றி நாராயணசாமிக்குத் தகவல் அனுப்பி யிருந்தாள்.

முருகேசன்மூலம் அந்தத் தகவலை அறிந்ததும் நாராயணசாமி பால் பண்ணைக்குப் போய்க்கொண்டிருந் தான்.

''சங்கு பிடிக்கும் நேரம் ஆயிற்றே, ஒரு வேளை கண் ணம்மா எதிரில் வருவாளோ? அல்லது இதற்குள் மில்லுக் குப் போய் விட்டிருப்பாளோ?'' என்ற எண்ணத்துடனேயே சைக்கிள் பெடலை உதைத்துக் கொண்டிருந்தான்.

அவன் எதிர்பார்த்தபடியே கண்ணம்மா சற்றுத் தொலை வில் வந்துகொண்டிருந்தாள்.

சைக்கிளை நிறுத்தி அவளுடன் பேசுவதா அல்லது 'பிகு' வாகப் பேசாமலே போய் விடுவதா என்ற அவசரப் பிரச்னை ஒன்று தோன்றிவிட்டது அவனுக்கு. இதற்குள் கண்ணம்மா அவன் சமீபமாக நெருங்கி வந்துவிட்டாள்.

நாராயணசாமியைப்பற்றி அவள் இதயத்தில் மூன்று விதமான உணர்ச்சிகள் கதம்பமாய்க் கலந்துகிடந்தன.

ஒன்று அன்பு.

மற்றொன்று கோபம்.

இன்னொன்று அநுதாபம்.

அவனைக் கண்டதும் அவள் கோபமெல்லாம் எங்கோ பறந்துவிட்டது, கண்ணீர் சிந்தியபடியே மௌனமாக நின்று கொண்டிருந்தாள்.

''அழாதே கண்ணம்மா! எனக்கு என்ன ஆண்டவன் கொடுத்த கைகால் இல்லையா, உழைச்சுப் பிழைக்க? கூட்டுறவுப் பால் பண்ணையிலே ஏதோ வேலை இருக்குதுன்னு முருகேசன் கிட்டே சொல்லி அனுப்பியிருந்தயே, அங்கே தான் போறேன்'' என்றான் அவன்.

''முதலாளி கொஞ்சங்கூட நன்றி இல்லாத மனுசன், உங்களை வேலையிலிருந்து விலக்கியது என்ன நாயம்? மில்லிலே எல்லாரும் பேசிக்கிறாங்க. உங்க அப்பாரு உழைச்ச உழைப்புக்கு, உங்க குடும்பத்தைத் தலைமுறை தலைமுறையாகக் காப்பாத்தக் கடமைப்பட்டிருக்காராம்.''

''ஏன்? எங்கப்பாரு சம்பளமே வாங்கிக்காமல் வேலை செய்தாராமா? கண்ணம்மா! யாரோ பொறுப்பில்லாதவங்க பேசற பேச்சைக் கேட்டுக்கிட்டு வாய்க்கு வந்தபடியெல்லாம் உளறாதே! யாரோ கூன் மனசைக் கெடுத்திருக்காங்க. அந்தத் தங்கமான மனுசரைப்பற்றி எவனாவது தவறாகப் பேசினா நான் அவங்களைச் சும்மாவிட மாட்டேன். ஆமாம்...என் பேரிலே உனக்கு அன்பு இருக்கலாம். அதுக்காக நீ யாரையும் தப்பாப் பேசக்கூடாது.''—நாராயணசாமி உணர்ச்சியோடு பேசினான்.

கண்ணம்மா ஏதோ சொல்ல வாயெடுத்தாள். இதற்குள் மில் சங்கு ஊதிவிட்டது.

"போ, போ நேரமாயிடுச்சு. வேலைக்கு லேட்டாப் போகக்கூடாது. ஏன்? என்ன, தயங்கறே?'' என்று கேட்டான் அவன்.

"ஒண்ணுமில்லே;—அண்ணைக்கு உங்களுக்குச் சாப்பாடு எடுத்து வந்தாளே......''

''ஓகோ! அவ யாருன்னு கேக்கறயா? எனக்குத் தெரிஞ்சவதான்.''

"அது தெரியுது. தெரியாதவளா அத்தனை அன்பா சோறு எடுத்தாந்து போடுவா? யாருன்னு கேட்டேன்."

"ஏன்? உனக்குப் பொறுமையாயிருக்குதா?"

"எனக்கென்ன பொறுமை?" அவள் கண்கள் சிவந்து உதடுகள் நெலிந்தன.

"பின்னே ஏன் பேசாமலே இருந்தியாம்! பயித்தியம்; அது யாருமில்லே. என் தங்கச்சிதான். பாப்பான்னு பேரு..."

"உங்க தங்கச்சியா அது? நான் யாரோன்னு பயந்துட்டேன். இவ்வளவு பெரிய தங்கச்சி இருக்காளா உங்களுக்கு? அழகாயிருக்காளே! உங்க தங்கச்சி பின்னே எப்படி இருப்பாளாம்? உங்களைத் தப்பா நினைச்சு உங்க கிட்டே பேசாமல் இருந்ததுக்கு என்னை மன்னிச்சுடுங்க..."

"பெண் புத்திதானே? அதிலும் நீ எப்பவுமே அவசர புத்திக்காரின்னுதான் எனக்குத் தெரியுமே!"

"உங்க தங்கச்சிக்குக் கலியாணம் ஆயிடுச்சா?"

"இந்த வருசம் அதுங்கலியாணத்தெ முடிச்சுடலாம்னு தான் இருந்தேன். ஆனல் அதுக்குள்ளேதான் இப்படியெல்லாம ஆயிடுச்சே? எப்படியும் அடுத்த வருசத்துக்குள்ளே யாவது செஞ்சுடுவேன்."

"அப்புறம்தான் உங்க கலியாணமா?..."

"அதைப்பற்றி இப்ப என்ன? வேலை கெடச்சப்புறம் பார்த்துக்கலாம். ஏன், அதுக்குள்ளே அவசரமோ?"

"அவசரம் ஒண்ணுமில்லே; எவ்வளவு நாளானாலும் காத்திருப்பேன்."

"சரி, நீ போ நேரமாயிடுச்சு."

கண்ணம்மா மில்லை நோக்கி விரைந்தாள்.

நாராயணசாமி கொஞ்ச தூரம் போனதும் எதிரில் வந்த முருகேசனும், ரத்னசாமியும் அவனைத் தடுத்து நிறுத்தினர்கள்.

"என்ன பண்றே முருகேசா? எங்கயாச்சும் வேலை கிடைச்சுதா?"

"வேலையா? மறுபடியும்தான் எல்லாருமே மில்லுக்குப் போகப் போறோமே, உனக்குத் தெரியாதா?"

"முதலாளி எல்லாரையுமே திரும்பச் சேத்துக்கறதாச் சொல்லியிருக்காரா?"

"இல்லை. மில் தொழிலாளிங்க எல்லாரும் சேர்ந்து பெட்டிஷன் போட்டிருக்காங்களாம். நாளைக்கோ, மறு நாளைக்கோ, மேலிடத்திலிருந்து அதிகாரிங்க வந்து விசாரணை நடத்தப்போறாங்கன்னு எல்லாரும் பேசிக்கிறாங்களே! அநேகமா எல்லாரையுமே திருப்பி எடுத்துக்கணும்னு உத்தரவாயிடும்னு கூடச் சொல்றாங்களே! முதலாளிக்கு எதிரா மில்லுக்குள்ளேயே பெரிய கிளர்ச்சி நடந்துக் கிட்டிருக்குதே...இதெல்லாம் உனக்குத் தெரியவே தெரியாதா?"

நாராயணசாமிக்குக் கோபமும் ஆத்திரமும் பொங்கி வந்தன.

"என்னது? கிளர்ச்சி செய்யறாங்களா? யாரு அவனுங்க? அவங்க யாருங்கறதை இப்பவே கண்டுபிடிச்சு ஆகணும். அவங்களைச் சும்மா விடக்கூடாது. அமைதியா நடக்கிற மில்லிலே கலவரத்தை ஏற்படுத்தி முதலுக்கே மோசம் செய்யப் போறாங்களா? இந்தக் கிளர்ச்சிக்கெல்லாம் யாரு காரணம்? அவங்களைச் சொல்லு, நான் போய்ப் பார்க்கிறேன்."

"அதுதான் இப்ப உன்னோடு பேசிட்டுப் போனாளே கண்ணம்மா, அவள்தான்" என்றான் ரத்னசாமி.

"யாரு? கண்ணம்மாவா? உங்களுக்கு எப்படித் தெரியும் அது?"

"அவளேதான் சொன்னாள். பெட்டிஷன் போட்டதே அவதானும்."

நாராயணசாமிக்கு ஒரே குழப்பமாயிருந்தது. கண்ணம்மாவா? அவளா இப்படியெல்லாம் செய்தாள்? அவனால் நம்பவே முடியவில்லை அதை.

7

" அம்மா, நாளையிலிருந்து நான் பால் விக்கப் போறேன் " என்று கூறிக்கொண்டே வந்த நாராயணசாமி சைக்கிளைத் தாழ்வாரத்தில் கொண்டுபோய் நிறுத்தினான்.

" பால் விபாபாரமா? அது பாவமான தொழிலாச்சே! இலாபம் வேணும்னு தண்ணி கலந்தாத்தான் முடியும். அப்படி மோசம் செய்து பிழைக்கிற பால் வியாபாரம் நமக்கு வேணும் " என்றாள் நாராயணசாமியின் தாய்.

" நான் விக்கப்போறது சீல் வெச்ச பாலம்மா; பால் டிப்போவிலேயே பாத்திரத்தை மூடி, சீல் வெச்சுக் கொடுத்துவிடுவாங்க. இலாபம் நம்மைச் சேர்ந்தது. பாவம் பால் டிப்போவைச் சேர்ந்தது. அதிருஷ்டம் இருந்தா மாசம் அம்பது ரூபாகூடக் கிடைக்கும். அம்மா, டிப்போவிலே தயிர்கூடக் கொடுக்கிறாங்க. நீ அதை வாங்கி விற்கலாம் " என்றான் நாராயணசாமி.

" தயிரா? அப்படின்னு நீ பால் வாங்கும்போதே அதையும் வாங்கிக்கிட்டு வந்துடு. நான் நாலு இடங்களில் வாடிக்கை பிடிச்சு வித்துட்டு வரேன். மானத்தோடு வாழணும். எந்த வேலை செய்தா என்ன?" என்றாள் அவன் தாயார்.

" அண்ணா! எனக்குத் தையல் வேலை தெரியும். நானும் சும்மா இல்லாமல் தையல் வேலை செய்யப் போறேன். நாம் மூணு பேருமே பாடுபட்டு உழைச்சா கடவுள் நமக்குப் படி அளக்காமலா போயிடுவாரு!" என்றாள் பாப்பா.

தினமும் எட்டு மைல் தூரம் சைக்கிளில் போய், பண்ணையிலிருந்து பாலும் தயிரும் கொண்டு வந்தான் நாராயணசாமி. காலையிலும் மாலையிலும் அலைந்து திரிந்து உழைத்தான்.

அவன் தாயாரும் தயிர் வியாபாரம் செய்து வந்தாள். பாப்பா வீட்டோடு தையல் வேலை செய்து வந்தாள்.

சாரங்கபாணி தம் பங்களாவிலிருந்தபடியே பாண்டுரங்கத்தின் மனைவி மக்கள் படும் துன்பங்களைக் கண்டு மனம்

நெகிழ்ந்தார். மற்ற குடும்பங்களிலும் இப்படித்தானே கஷ்டப்பட்டுக் கொண்டிருப்பார்கள்? இதற்கெல்லாம் யார் காரணம்? செய்யக்கூடாத ஒரு பெரும் குற்றத்தைத் தாம் செய்துவிட்டதாக எண்ணிக்கொண்டு தமக்குத் தாமே சங்கடப்பட்டார் அவர். பாண்டுரங்கத்தின் குடும்பத்துக்குத் தன்னால் எந்த விதத்தில் உதவ முடியும்? அவர்கள் துன்பத்தைத் துடைக்கக்கூடிய, துயரத்தைப் போக்கக் கூடிய, வசதியும் சந்தர்ப்பமும் தமக்கு இல்லவே இல்லையா?

ஏன் இல்லை?

ஆனால் நாராயணசாமி அதற்கு ஒப்ப வேண்டுமே! தன்னிடமிருந்து அவன் எவ்வித உதவியையும் ஏற்றுக்கொள்ள மாட்டானே! அப்பனைப் போலவே அவனும் கண்டிப்பு மிக்கவனாயிற்றே! அன்று அவன் தாயாருடன் பேசிக் கொண்டிருந்ததெல்லாம் அவர் நினைவில் பளிச்சிட்டன.

நாராயணசாமி வெளியே புறப்படக் காத்திருந்தான். அவனுடைய கிழிந்துபோன சட்டையைத் தைத்துக்கொண்டிருந்தாள் பாப்பா.

அப்போது, ''நாராயணசாமி இருக்காரா?'' என்று கேட்டுக் கொண்டே வந்தான் சாரங்கபாணியின் பியூன்.

நாராயணசாமி வாசலுக்கு வந்து பார்த்தான்.

''முதலாளி உங்களைக் கையோடு அழைத்து வரச் சொன்னாரு'' என்றான் பியூன்.

அவசர அவசரமாக, பாப்பா தைத்துக் கொடுத்த சட்டையை வாங்கிப் போட்டுக்கொண்டு, முதலாளி பங்களாவுக்குப் புறப்பட்டான் நாராயணசாமி.

சாரங்கபாணி அவனை அன்போடு அழைத்துக் கனிவோடு பேசினார்.

''தம்பி, அன்றைக்கு நீயும் உன் தாயாரும் பேசிக்கிட்டிருந்ததைக் கேட்டுக்கிட்டுதான் இருந்தேன். நான் உனக்கு எந்த வேலை கொடுத்தாலும் நீ அதை ஒப்புக்க மாட்டேங்

கறது எனக்குத் தெரியும். நம் மில் 'காண்டீனு'க்கு நாளை யிலிருந்து நீ பால் சப்ளை செய். நானும் எனக்கு வேண்டிய பால் தயிரை இனி உன்னிடமே வாங்கிக்கிறதுன்னு முடிவு செஞ்சிருக்கேன். எனக்குத் தெரிஞ்சவங்க கிட்டேயும் சிபாரிசு செய்யறேன். இதுக்கு உனக்கு ஆட்சேபனை கிடையாதே?''

''உங்க உபகாரத்துக்கு நன்றி! இதிலே ஆட்சேபனைக்கு என்ன இருக்கு? உங்க அன்புதான் முக்கியம்'' என்றான் நாராயணசாமி.

"நாராயணசாமி! நான் ஒண்ணு சொல்றேன்; அதைத் தட்டமாட்டாயே?''

''சொல்லுங்க ஐயா!''

''இப்ப நீ இருக்கிற வீட்டுக்கு எவ்வளவு வாடகை கொடுக்கிறாய்?"

"முப்பது ரூபாய்.''

''கொஞ்ச நாளைக்கு நீ வாடகையே கொடுக்க வேணும்.''

''அது கூடாதுங்க. எனக்கு மட்டும் எதுக்கு நீங்க வாடகை இல்லாமல் சலுகை காட்டணும்? என்னை மன்னிச்சிடுங்க. இது எனக்கு இஷ்டமில்லிங்க. நான் வரேன்" என்று அந்த இடத்தை விட்டு நகர்ந்து விட்டான் அவன். சாரங்கபாணி அதற்குமேல் பேசவில்லை.

அவன் அப்பால் சென்றதும் காரியதரிசி அவர் எதிரில் வந்து நின்றார். எங்கோ கவனமாயிருந்த சாரங்கபாணிக்குத் தம் காரியதரிசி எதிரில் வந்து நிற்பதுகூடத் தெரியவில்லை.

''கூப்பிட்டீர்களா?'' என்று குரல் கொடுத்தார் காரிய தரிசி.

"ஆமாம்; நம்ம குவாட்டர்ஸிலே உள்ள வீட்டுக் கெல்லாம் என்ன வாடகை?''

''முப்பது ரூபாய்.''

"சரி. இந்த மாதத்திலேருந்து எல்லா வீட்டுக்கும் வாடகையைப் பதினைந்து ரூபாயாக்கி விடுங்கள்; போங்க, அதுக்குத்தான் கூப்பிட்டேன்.''

சாரங்கபாணியின் மனம் ஓரளவு நிம்மதியடைந்தது. நாராயணசாமி குடியிருக்கும் வீட்டுக்கு மட்டும் தனியாக வாடகையைக் குறைத்தால் அவன் அதை ஒப்புக்கொள்ள மாட்டான் என்றே எல்லா வீடுகளுக்கும் வாடகையைக் குறைத்துவிட்டார். இந்தச் செய்கை அவர் மனத்துக்குப் பெருத்த ஆறுதலை அளித்தது.

காரியதரிசி போய்விட்டார். சற்று நேரத்துக்கெல்லாம் டெலிபோன் மணி ஒலிக்கவே சாரங்கபாணி எழுந்துபோய் ரிஸீவரைக் கையில் எடுத்தார்.

"ஸார், நம் மில்லுக்கு லேபர் ஆபீசர் வந்திருக்கிறார். 'ரிட்ரெஞ்ச்மெண்ட்' விஷயமா உங்களோடு பேசணுமாம்'' என்றார் மில் மானேஜர்.

''அப்படியா கொஞ்ச நேரத்திலே நான் அங்கே வரேன்'' என்று பதில் கூறிவிட்டு உடனே மில்லுக்குப் புறப்பட்டார் சாரங்கபாணி.

8

''இதோ, இந்த ரிக்கார்டுகளையெல்லாம் தாங்கள் நன்றாகப் பார்த்துவிட்டுப் பிறகு முடிவு செய்யுங்கள். நான் செய்தது சரியா தவறா என்பது தங்களுக்கு அப்போது தான் தெரியும். இரண்டு வருடங்கள் மில்லை நஷ்டத்தில் நடத்திய பிறகே இந்த முடிவுக்கு வந்தேன். 130 பேரை எடுத்தால்தான் மற்றத் தொழிலாளர்கள் காப்பாற்றப்படுவார்கள் என்ற நிலை ஏற்பட்டதாலேயே இந்தக் காரியத்தைச் செய்தேன். இதை ஆட்சேபித்து லேபர் இலாகாவுக்கு யாரோ சிலர் 'பெட்டிஷன்' எழுதிப் போட்டிருக்கிறார்கள். தாங்கள் எல்லா விவரங்களையும் ஆராய்ந்து பார்த்து, விசாரிக்க வேண்டியவர்களை விசாரியுங்கள்; கடைசியில் தாங்கள் எந்த முடிவுக்கு வந்த போதிலும் அதை நான்

அப்படியே ஏற்றுக் கொள்கிறேன். இரண்டு இயந்திரங்கள் உபயோகமற்றுப் போய் விட்டன. மேலும் பருத்தி அதிகமாகக் கிடைக்கவில்லை. இந்த நிலையில் நான் என்ன செய்வது? தொழிலாளர்களை வேலையை விட்டு நீக்கியதில் என்னைக் காட்டிலும் வருத்தப்படுகிறவர்கள் யாரும் இருக்க முடியாது. அவர்களை மீண்டும் வேலையில் சேர்த்துக் கொள்வதற்குத் தங்களுக்கு ஏதேனும் வழி புலப்பட்டாலும் சொல்லுங்கள்; மகிழ்ச்சியுடன் நிறைவேற்றி வைக்கிறேன்.'' சுருக்கமாகவும் விவரமாகவும் எடுத்துக் கூறினார் சாரங்கபாணி.

அவருடைய நியாயமான பேச்சைக் கேட்ட லேபர் ஆபீஸர் மௌனமாகத் தலையை ஆட்டியபடியே உட்கார்ந்திருந்தார். சாரங்கபாணியிடம் அவரால் எவ்விதக் குற்றத்தையும் காண முடியவில்லை.

நான் என் கடமையைச் செய்யவே இங்கு வந்திருக்கிறேன். தங்கள் நிலை என்ன என்பது பற்றி எனக்கு நன்ருகப் புரிகிறது. தங்கள் குணத்தைப்பற்றியும் நான் ஏற்கெனவே அறிந்திருக்கிறேன். எதற்கும் வேலையிழந்த தொழிலாளர்களில் சிலரையும் பார்த்துப் பேச முடிவு செய்திருக்கிறேன். தங்களுக்குச் சிரமம் கொடுப்பதற்காக மன்னிக்கவும்'' என்ருர் லேபர் ஆபீஸர்.

லேபர் ஆபீஸர் கேட்கும் எல்லா ரிக்கார்டுகளையும் எடுத்துக் காட்டும்படி மானேஜருக்கு உத்தரவு போட்டு விட்டு வீட்டுக்குப் புறப்பட்டுச் சென்ருர் சாரங்கபாணி. இதற்குள் ஆதாரமற்ற வதந்தி ஒன்று மில் முழுதும் பரவி விட்டது.

''எல்லாரையும் மறுபடியும் வேலைக்கு வெச்சுக்கச் சொல்லி லேபர் ஆபீஸர் உத்தரவு போடப் போருராம்'' என்பதே அந்த வதந்தி. இந்த ஆதாரமற்ற வதந்தியைப் பத்திரிகைகள் உண்மைச் செய்தி போல் திரித்துக் கொட்டைத் தலைப்பில் கீழ்வருமாறு பிரசுரம் செய்தன:

''சாரங்கா மில் தகராறு !
சர்க்கார் தலையீடு !''

''வேலையை விட்டு அனுப்பப்பட்டவர்கள் எல்லாரையும் மீண்டும் வேலைக்கு வைத்துக் கொள்ளும்படி லேபர் கமிஷனர் உத்தரவு !''

9

வாச்மென் வடிவேலு மெயின் கேட்டுக்கருகில் உட்கார்ந்தபடியே மலபார் முண்டு விற்கும் காக்கா ஒருவனிடம் பேசிக் கொண்டிருந்தான்.

தூரத்தில் பாப்பா வருவதைக் கண்டதும் வடிவேலுவுக்குக் காக்காவிடம் பேசிக்கொண்டிருக்கப் பிடிக்கவில்லை. என்வே, அவள் வருவதற்குள் எப்படியோ அவனிடம் பேச்சை முறித்து அனுப்பிவிட்டான்.

''இன்னிக்கு என்னைப் பார்த்தா ஏதாவது புதிசாத் தெரியுதா உனக்கு ?'' என்று கேட்டாள் பாப்பா.

''அப்படி ஒண்ணும் தெரியல்லியே ?''

''ஆமாம். உனக்கு எங்கே தெரியப் போவுது ? இந்தப் புல்லாக்கைப் பாத்தியா ? எங்க அம்மாவுது இது. இத்தனை நாளாப் பெட்டியிலே இருந்தது, காலையிலே எதுக்கோ பெட்டியைத் திறந்தபோது இந்தப் புல்லாக்கு அதிலே கிடந்தது. 'நீதான் எடுத்துப் போட்டுக்கோயேன்'னு அம்மா சொன்னுங்க, போட்டுக்கிட்டேன். எப்படி இருக்குது ?''

''இந்தப் புல்லாக்குக்காகவே நீ பிறந்த மாதிரி அவ்வளவு பொருத்தமா இருக்குது !'' என்று அவள் புல்லாக்கைத் தொட்டுப் பார்க்கும் சாக்கில் வடிவேலு அவள் கன்னத்தைத் தொட்டான்.

''நேரமாச்சு. நான் வரட்டுமா ?'' என்று அவன் கையை அப்பால் தள்ளிவிட்டாள் பாப்பா.

''எங்கே ?'' என்று கேட்டான் வடிவேலு.

''கடைக்கு நூல்கண்டு வாங்கப் போறேன்.''

"அதுக்கு ஏன் இவ்வளவு பெரிய கூடை ?"

"அப்படியே வீட்டுக்குக் காய்கறியும் வாங்கிக்கிட்டு வருவேன். அண்ணனும் அம்மாவும் பால் தயிர் விக்கறுங்க. நான் தையல் வேலே ஆரம்பிச்சிருக்கேன்."

"அது எப்பத் தெரிஞ்சுக்கிட்டே? எனக்குத் தெரியவே தெரியாதே !"

"ஏன் ? உனக்குத் தெரிஞ்சுக்கணும்னு ஆசையாயிருக்குதா ? நான் கத்துக் கொடுக்கட்டுமா ?"

"அட, நீ ஒண்ணு; உனக்குத் தையல் வேலே தெரியுங்கற தகவல் எனக்குத் தெரியாதேன்னு சொன்னேன்."

பாப்பா சிரித்துவிட்டாள் !

"ஆமாம் ; தெரிஞ்சிருந்தா மட்டும் என்ன செஞ்சுடப் போறயாம் !"

"நேற்று என் காக்கிச் சட்டையிலிருந்த கிழிசலேத் தைக்க டைலருக்கு இரண்டணு கொடுத்தேன். நீ தைப்பேன்னு தெரிஞ்சிருந்தா எனக்கு அந்த ரெண்டணு மிச்சமாயிருக்குமே !"

"அதான் முடியாதுன்னேன். நான் யாருக்கும் காசு வாங்காமல் தைச்சுக் கொடுக்க மாட்டேன்."

"எனக்குக்கூடவா ?"

"யாராயிருந்தாலும் சரித்தான்."

"நம்ம ரெண்டு பேருக்கும் கலியாணம் ஆனப்புறம் கூடவா ?"

"அதைப்பற்றி அப்போது யோசிச்சுக்கலாம்."

"இப்பவே யோசிக்க வேண்டியதுதான். எங்கப்பாரும் அம்மாவும் உங்க வூட்டுக்கு இன்னேக்கு வரப்போறுங்களாம்."

"எதுக்கு வரப் போறுங்க ?"

"எனக்குத் தெரியாது."

“வந்தால் வரட்டுமே!”

“சாயந்திரம் வீட்டிலேயே இரு; எங்கேயும் போயிடாதே.”

“ஏன்?”

“நம்ம கலியாண விசயமாத்தான் பேச வராங்க. சீக்கிரமே முகூர்த்தம் வெச்சுக்கப் போறுங்களாம்.”

“எங்க அண்ணனுக்கு ஒரு நல்ல வேலே கெடச்சப்புறம் தான் என் கலியாணப் பேச்செல்லாம்.”

“அதான் கூடாது; உங்கண்ணன் வேலேயில்லாமல் இருக்கப்போ உனக்கும் சோறு போடணும்னு கஷ்டம் தானே? நமக்குக் கலியாணம் ஆயிடுச்சுன்னு நீ என் வூட்டுக்கு வந்துடலாம் பாரு. ஆமாம்; இப்பவெல்லாம் உன் அண்ணனேப் பார்க்கவே முடியல்லியே, எங்கே போயிடுறு?”

“மில்லிலே யாரோ ஆபீஸரு வந்து யார் யாரையோ கூப்பிட்டு விசாரணே செஞ்சுக்கிட்டு இருக்காராமே, தெரியாதா? அண்ணன் அதே கவலேயாயிருக்காரு. சந்தர்ப்பம் கிடைச்சால்? வேலேபோனவங்களே யெல்லாம் கூட்டிக்கிட்டு அந்த ஆபீஸர்கிட்டே போய் ‘முதலாளி செஞ்சது ரொம்ப நியாயம். நாங்க எல்லாருமே அதை ஆமோதிக்கிறேம்’னு சொல்லப் போறுராம். அதுக்காகத்தான் நாலு நாளா வீட்டிலேயே தங்காமல் அலேஞ்சுக்கிட்டிருக்காரு” என்றுள்.

“பாவம்! யாரோ முதலாளி பேரிலே அநியாயமா ‘பெட்டிஷன்’ எழுதிப் போட்டிருக்காங்களாம். அவர் செஞ்சதிலே என்ன தப்பு? அவராலே எத்தனே நாளேக்குத்தான் நஷ்டப்பட முடியும்? மொத்தமா மில்லே மூடி எல்லார் வயிற்றிலேயும் அடிக்காமல் இந்த வரைக்கும் செஞ்சதே எவ்வளவோ புண்ணியமாச்சே! ஆனுல் நியாயத்துக்கு இது ஏது காலம்? சரி, பாப்பா! நேரமாச்சு. நூல்கண்டு விலே ஏறிடப் போவுது, ஜல்தி போ” என்று கூறி அனுப்பினுன் வடிவேலு.

## 10

வேலை இழந்த சாரங்கா மில் தொழிலாளர்கள் அனை வரும் நெடுஞ்சாலை ஆலமரத்தடியில் கூடியிருந்தார்கள். அவர்களைப் பார்த்து நாராயணசாமி உணர்ச்சியோடு பேசிக் கொண்டிருந்தான்.

"தோழர்களே, உங்க எல்லாரையும் நான் இங்கே கூடும்படி கேட்டுக்கொண்டதற்கு ஒரு முக்கியமான காரணம் உண்டு. நம் முதலாளிக்கு விரோதமா 'பெட்டிஷன்' போயி ருக்கிற விஷயம் உங்களுக்குத் தெரிஞ்சிருக்கும். இது யார் செய்த வேலையாயிருந்தாலும் சரி. நாம் அவங்களைக் கண்டிக்கக் கடமைப்பட்டிருக்கோம். சமயம் கிடைக் கறப்போ லேபர் ஆபீஸரிடமே எல்லாரும் கூட்டமாப் போய் 'முதலாளி செய்தது சரி'ன்னு சொல்லிடணும். மில்லிலே நடக்கிற குழப்பத்தைத் தடுத்து நிறுத்தாவிட்டால் நாம் முதலாளிக்குத் துரோதம் செஞ்சவங்களாவோம். நம்ம மில்லுக்குக் கெட்ட பேர் ஏற்படறதைப் பார்த்துக்கிட்டு நாம் பேசாமல் இருக்கலாமா? யாருடைய சூழ்ச்சிக்கும் இதிலே இடம் தரக் கூடாது. நீங்க என்ன சொல்றீங்க?"

"நாராயணசாமி! நீ சொல்றபடியே நடக்கறத்துக்கு நாங்க தயார்" என்று கூட்டத்திலிருந்த அத்தனை பேரும் குரல் கொடுத்தனர்.

"நீங்க இத்தனைப் பேரும் நியாய உணர்ச்சியோடு இருப்பதைப் பார்க்கறப்போ எனக்கே உற்சாகமாயிருக்குது. நம் முதலாளிக்கு இது தெரிஞ்சா ரொம்பச் சந்தோஷப் படுவாரு. அவர்மேல் எந்தவிதமான பழியும் வராமல் பார்த்துக்கறதுதான் இப்ப நம்முடைய முதல் வேலை" என்று கூறிவிட்டு நாராயணசாமி சைக்கிளில் ஏறி, பால் பண்ணையை நோக்கிப் புறப்பட்டான்.

சற்றுத்தூரம் சென்றதும் எதிரில் கண்ணம்மா வந்தாள். நாராயணசாமியை எதிர்பாராதவிதமாக அந்த இடத்தில் சந்தித்ததில் அவளுக்கு அளவற்ற மகிழ்ச்சி! வேறு சமயமா யிருந்தால் நாராயணசாமியும் கூடச் சந்தோஷப்பட்

டிருப்பான். இப்போது அவனுக்கு அவள்மீது ஆத்திரம் ஆத்திரமாக வந்தது.

"என்னங்க! ஏன் ஒரு மாதிரி இருக்கீங்க? வேலே போயிட்டதுக்காகவா வருத்தப்படறீங்க? நான்தான் அதுக்கெல்லாம் வழி பண்ணிட்டேனே. சீக்கிரமே நீங்களெல்லாம் மறுபடியும் மில்லுக்கு வந்துடலாம். லேபர் ஆபீஸர் உங்களுக்கெல்லாம் சாதகமாக இருக்காராம்" என்று உற்சாகம் பொங்கக் கூறினுள் அவள்.

"நீ செய்தது பெரிய தப்பு, கண்ணம்மா! சே! உன்னே என்னவோன்னு நெனேச்சேன். இவ்வளவு மோசமா நடந்துக்குவேன்னு நான் சொப்பனத்திலேயும் கருதல்லே!" —கோபமும் ஆத்திரமும் கலந்த குரலில் வார்த்தைகளே வீசினுன் அவன்.

"ஆமாம், நான்தான் இவ்வளவுக்கும் காரணம். எல்லாம் உங்க நன்மைக்குத்தான். மில்லேக் கெடுக்கறதிலே எனக்கு என்ன இலாபம்?"

"உன்னுலே மில்லுக்கே கெட்ட பேரு. முதலாளிக்கே அவமானம். உன் முகத்திலே முழிக்கிறதே பாவம்."

"நான் செஞ்சது நியாயமா, நீங்க சொல்றது நியாயமாங்கறது லேபர் ஆபீஸர் முடிவு சொன்னப்புறம் தெரியும். பார்த்துக்கிட்டே இருங்க."

தெரியட்டும்; அதையும்தான் பார்த்துடுவோம்; லேபர் ஆபீஸர் முடிவு ஒரு நாளும் உனக்குச் சாதகமாக இருக்காது" என்று கோபத்துடன் கூறிவிட்டுப் போய் விட்டான் நாராயணசாமி.

## 11

சாரங்கபாணி காகிதத்தில் ஏதோ கணக்குப் போட்டு அடித்துக் கொண்டிருந்தார். புள்ளி விவரங்கள் இலட்சக்கணக்கில் இருந்தன. அப்போது டெலிபோனில் மில் மானேஜர் அவரை அழைத்து, "பம்பாயிலிருந்து இலட்சுமி மில் முதலாளி ஜயந்தி லால் ஜோஷி

வந்திருக்கிறார். பங்களாவுக்கு அழைத்து வரட்டுமா?'' என்று கேட்டார்.

''வேண்டாம்; இதோ நானே மில்லுக்கு வந்து விடுகிறேன்'' என்று பதில் கூறிவிட்டு மில்லுக்குப் புறப்பட்டார் சாரங்கபாணி. ஜோஷி அவருடைய பழைய நண்பர். சாரங்கபாணி இரண்டு வருடங்களுக்குமுன் பம்பாய்க்குப் போயிருந்தபோது அவரைப் பார்த்தது. மீண்டும் இப்பொழுதுதான் சந்திக்கிறார்.

மனத்துக்குகந்த பழைய நண்பர்களை அபூர்வமாகச் சந்திக்கும்போது ஏற்படுகிற இன்பமே தனி அல்லவா? ஜோஷியைக் கண்டதும் சாரங்கபாணிக்கு ஆனந்தம் தாங்கவில்லை.

அன்று சாரங்கபாணியின் வீட்டில் ஜோஷிக்குப் பலமான விருந்து நடைபெற்றது. வடக்கத்தி பாணியில், ஜாமூன், சப்பாத்தி, எலுமிச்சம்பழம் கலந்த வெங்காயத் துருவல் ஆகிய தினுசுகள் பரிமாறப்பட்டன. ஜோஷி அவற்றை ரசித்துச் சாப்பிட்டார். இருவரும் சாப்பிட்டபடியே பழைய கதைகளையெல்லாம் பேசினார்கள். ஜோஷியின் வழுக்கைத் தலையைக் கண்ட சாரங்கபாணி, ''உன் தலையில் இப்போது ஒரு மயிர்கூட இல்லையே!'' என்று வியப்புடன் அவரை நோக்கினார்.

"ஆமாம்; பம்பாய்த் தண்ணீரின் விசேஷம் அது. பம்பாயில் நூற்றுக்கு அறுபது பேர் 'பால்டு' தான்'' என்றார் ஜோஷி. பேச்சுக்கிடையில் சாரங்கபாணி, "ஆமாம்; உங்க மில்லை மூடிவிடப் போவதாகக் கேள்விப்பட்டேனே, வாஸ்தவமா?'' எனக் கேட்டார்.

''ஆமாம்; எனக்கு வயசாகி விட்டது. மில்லை வைத்து 'மானேஜ்' பண்ண முடியவில்லை. அத்துடன், என் மாப்பிள்ளை ஏதோ புதுசாக 'எக்ஸ்போர்ட்' பிஸினஸ் ஆரம்பிக்கப் போறானாம். அதற்கு நிறைய 'கேபிடல்' வேண்டுமாம். அதனாலே மில்லை விற்று வரும் பணத்தை மாப்பிள்ளையிடம் கொடுத்துவிட உத்தேசித்திருக்கிறேன்'' என்றார் ஜோஷி.

"அப்படின்னா உங்க மில்லிலிருந்து எனக்கு இரண்டு இயந்திரங்களை விலைக்குக் கொடுக்க முடியுமா? நான் என்

னுடைய மில்லைப் பெரிதாக விஸ்தரிக்கலாம் என்று யோசனை செய்து கொண்டிருக்கிறேன் '' என்ருர் சாரங்கபாணி.

'' தேவையான பருத்தி கிடைக்காததால் ஏக நஷ்டம். அதனுலே நூறு பேருக்குமேல் ஆள் எடுத்துட்டேன்னு லெட்டர் போட்டிருந்தீங்களே? இப்ப எதுக்குப் புதுசா மெஷின் வாங்கப் போறீங்க?''

''இப்ப பருத்தி நிறையக் கிடைக்குது. அதனுலே இரண்டு மெஷினை வாங்கிப் போட்டால், வேலையிலிருந்து நீக்கப் பட்டவங்களுக்குத் திரும்பவும் வேலை கொடுக்கலாமென்று பார்க்கிறேன்.''

'' அது சரி; இப்போது இயந்திரம் வாங்கப் பணம் ஏது உங்களுக்கு ?'' என்று கேட்டார் ஜோஷி.

'' பணத்துக்கு ஏதாவது வழி பண்ணிடறேன். எப்படி யாவது மில்லைப் பெரிசாக்கலாம்னு நினைக்கிறேன்.''

'' சாரங்கபாணி! இயந்திரங்களை உங்களுக்கு விலைக்குக் கொடுப்பதில் எனக்குத் தடையில்லை. ஆனுல் எனக்கு உடனடியாகப் பணம் வேண்டும். அது உங்களால் முடியுமா ?'' என்று கேட்டார் ஜோஷி.

'' அந்த இரண்டு இயந்திரங்களும் என்ன விலை ஆகும் ?''

'' இரண்டரை இலட்சத்துக்குக் குறையாது.''

'இரண்டரை இலட்சமா ?' ஒருகணம் யோசித்த சாரங்க பாணி, ''சரி, நான் என் மானேஜரைக் கலந்துகொண்டு சாயந்திரம் சொல்கிறேன் '' என்ருர்.

ஜோஷி சாப்பிட்டுவிட்டு நன்ருகக் குறட்டை விட்டுக் கொண்டிருந்தார்.

அந்த நேரத்தில் சாரங்கபாணி தமது மில் மானேஜரைக் கூப்பிட்டு, '' ரங்கசாமி, நம்மிடத்தில் இப்போது எவ்வளவு பணம் இருக்கிறது ?'' என்று கேட்டார்.

'' காஷ் பாலன்ஸ் குறைவாக இருக்கிறது. பாங்கிலும் ஓவர் டிராப்ட் வாங்கி, பருத்தி 'ஸ்டாக்' பண்ணியாயிற்று'' என்ருர் மானேஜர்.

சாரங்கபாணி சற்று யோசித்தார். "ரங்கசாமி! நம் மில் குவார்ட்டர்ஸை அப்படியே விலைக்கு வாங்கிக் கொள்வதாகக் கல்கத்தா ஆசாமி 'ஆபஃர்' கொடுத்திருக்கிறார். மூன்று இலட்சத்துக்குக் கேட்கிறார். அதை விற்றுவிடலாம்னு முடிவு செய்திருக்கிறேன். உங்க அபிப்பிராயம் என்ன?" என்று கேட்டார்.

"நீங்க எது செய்தாலும் அது நாலு பேருக்கு நன்மையாத்தான் இருக்கும்" என்றார் மானேஜர்.

"சரி; இப்ப நம்ம குவார்ட்டர்ஸைப் பாக்கறதுக்காக அந்தக் கல்கத்தா ஆசாமிங்க இன்னும் கொஞ்ச நேரத்திலே இங்கே வரப் போறாங்க" என்று சாரங்கபாணி முடிப்பதற்குள்ளாகவே, "அதோ வராங்களே, அவங்கதான் போலிருக்குது" என்றார் மானேஜர்.

கலகத்தாவிலிருந்து சௌத்ரி என்பவரும் அவருடன் இன்னும் இரண்டு பேரும் காரில் வந்து இறங்கினார்கள்.

"என்ன, குவார்ட்டர்ஸைப் பார்க்கப் போவோமா? ரெடியா?" என்று கேட்டுக்கொண்டே வந்தார் சௌத்ரி.

"என்னுடைய காரியதரிசி உங்களோடு வந்து குவார்ட்டர்ஸைக் காட்டுவார். நீங்க பார்த்துட்டு வரலாம். ஆமாம்; உங்களுக்குக் குவார்ட்டர்ஸ் எப்போதுமுதல் தேவை?" என்று கேட்டார் சாரங்கபாணி.

"இன்னும் பதினைந்தே நாட்களில் தேவை. கல்கத்தாவிலிருந்து எங்கள் ஆட்கள் வருகிறார்கள். ரொம்ப அவசரம்" என்றார் சௌத்ரி. சாரங்கபாணியின் முகம் சட்டென மாறியது.

"சரி, முதலில் வீடுகளைப் பார்த்துவிட்டு வாருங்கள். மற்ற விஷயங்களை அப்புறம் பேசிக் கொள்ளலாம்" என்றார்.

## 12

இச்சமயம் டெலிபோன் மணி ஒலிக்கவே, சாரங்கபாணி ரிஸீவரை எடுத்து விசாரித்தார். மில்லிலிருந்து லேபர் ஆபீஸர் பேசினார்.

"என்ன ஸார் என்ன வேண்டும்?" என்று கேட்டார் சாரங்கபாணி,

"ஒன்றுமில்லை; நான் வந்த வேலை முடிந்துவிட்டது. தகுந்த காரணத்துடன்தான் தாங்கள் 130 பேரை வேலையை விட்டு நீக்கியிருக்கிறீர்கள் என்பதில் எனக்குத் துளியும் சந்தேகம் இல்லை. ஆகையால் சாரங்கா மில் ஆள் குறைப்பு விஷயம் நியாயமாகவே நடந்திருக்கிறது என்று நான் மேலிடத்துக்குத் தெரியப்படுத்தி விட்டேன். இதைச் சொல்வதற்காகத்தான் தங்களைக் கூப்பிட்டேன்" என்றார் அந்த ஆபீஸர்.

"இவ்வளவுதானா? அந்த 130 பேரையும் மீண்டும் வேலையில் சேர்த்துக்கொள்வதற்கு எப்படியும் தாங்கள் ஒரு யோசனை கூறுவீர்கள் என்றல்லவா எதிர்பார்த்தேன்? ஒரு வழியும் புலப்படவில்லையா?...ம்...சரி...பார்க்கலாம்" என்று கூறிவிட்டு ரிஸீவரைக் கீழே வைத்தார் சாரங்கபாணி.

"ஐயா!..."

அவர் காதுகளுக்குப் பழக்கமான குரல் அது!

"யார் அது?"—சாரங்கபாணி வாசலுக்கு வந்தார்.

தட்டில், வெற்றிலை, பாக்கு, புஷ்பம் இவற்றுடன் நின்று கொண்டிருந்தான் நாராயணசாமி.

"நாராயணசாமியா?...வா, வா...என்ன இதெல்லாம்?"

"தங்கச்சிக்குக் கலியாணம் நிச்சயம் செய்திருக்கேன். வாச்மேன் வடிவேலுக்குத்தான் கொடுக்கப் போறேன். என் தந்தை உயிரோடு இருக்கப்பவே முடிவு செஞ்ச சம்பந்தம் இது. நீங்க கிட்ட இருந்து நடத்தி வைக்கணும். வீட்டிலே பெரியவங்க இல்லாத குறையை நீங்கதான் தீர்த்து வைக்கணும். இத்தனை நேரம் இங்கே நடந்த பேச்சு எல்லாத்தையும் கேட்டுக்கிட்டுதான் இருந்தேன். உங்க நல்ல குணத்துக்கு ஒரு கெடுதலும் வராதுங்க. ஆனால்..." என்று இழுத்தான் நாராயணசாமி.

"ஆனால், என்ன சொல்லு?"

"இந்தக் கலியாணம் நடக்கிற சமயம் பார்த்து வீடு நம்ம கையை விட்டுப் போகுதேன்னுதான் வருத்தமாயிருக்குது. எங்க அப்பாரு காலத்திலேருந்து அந்த வீட்டிலே இருந்துக்கிட்டிருக்கோம். திடீர்னு இப்படி முடிவாயிட்டுது. அதுக்கு நீங்க என்ன செய்வீங்க? எங்களுக்கெல்லாம் உதவி செய்யணுங்கிற நோக்கத்தோடுதானே விக்கறீங்க? இந்தப் 'பெட்டிஷன்' எழுதிப் போட்ட ஆசாமிகளுக்கு இதெல்லாம் எங்கே விளங்குது?" என்றான் நாராயணசாமி.

"எப்போது முகூர்த்தம் வைத்திருக்கிறாய், நாராயண சாமி?"

"அடுத்த மாதம் அஞ்சாந்தேதி..."

"ஏன், கலியாணத்தை என் வீட்டிலேயே நடத்தி விடேன். நானே உனக்கு வேண்டிய ஒத்தாசைகளைச் செய்யறேன்."

"வேண்டாங்க; இவ்வளவு பெரிய பங்களாவிலே கலியாணத்தை நடத்தறதுன்னா அதுக்குத் தகுந்த மாதிரி செலவு செய்ய வசதி வேணுமா? அவ்வளவு தூரத்துக்கு நான் எங்கே போவேன்? நீங்க இவ்வளவு சொன்னதே போதும். உங்க புண்ணியத்திலே பால் வியாபாரத்திலே கொஞ்சம் பணம் சேர்த்து வெச்சிருக்கேன். போதாததற்கு என் தாயார் நகைகளையும் வித்துடப்போறேன். கலியாணத்தைக் கோயில்லேயே நடத்திடறேன். நீங்க அவசியம் கலியாணத்துக்கு வந்து என்னைக் கௌரவப் படுத்தணும். அதுதான் முக்கியம்."

வெற்றிலைப் பாக்குத்தட்டை மில் முதலாளியிடம் கொடுத்துவிட்டு மரியாதையுடன் கையெடுத்துக் கும்பிட்டுக் கொண்டே, "நான் போய் வரேனுங்க!" என்றான் அவன்.

கண்களில் நீர் மல்க, நெகிழ்ந்த நெஞ்சத்துடன் அவனுக்கு விடை கொடுத்து அனுப்பினார் சாரங்கபாணி.

"இப்படி நான் செய்யும் காரியம் ஒவ்வொன்றும் பாண்டுரங்கத்தின் குடும்பத்துக்கு இடையூறாக முடிந்து கொண்டிருக்கிறதே!"—இதை எண்ணியபோது அவர் இத

யமே வெடித்து விடும்போல் ஆகிவிட்டது, திடீரென்று மயக்க முற்றுக் கீழே சாய்ந்தார் அவர். மனக்கவலை அதிகரிக்கும் போதெல்லாம் அவருக்கு இம்மாதிரி மயக்கம் வருவது உண்டு.

## 13

"பாப்பா, உனக்குச் சங்கதி தெரியுமா?" என்று கேட்டான் வடிவேலு.

"சொன்னாத்தானே தெரியும்?"

"முதலாளி பேரில் எந்த விதமான தப்பும் இல்லே. மில்லிலே ஆள்குறைப்பு செய்தது ரொம்ப நியாயம்தான்னு லேபர் ஆபீஸர் தீர்ப்புக் கூறிட்டாராம். வேறே என்ன சொல்வாரு? நான் லேபர் ஆபீஸராயிருந்தாலும் இந்த முடிவைத்தான் சொல்லியிருப்பேன்" என்றான் வடிவேலு.

"'முதலாளிக்கு விரோதமாப் 'பெட்டிஷன்' போட்டவங்களுக்கு ரொம்ப வருத்தமா யிருக்கும், பாவம்" என்றாள் பாப்பா.

"அதுதான் இல்லேன்னேன். தீர்ப்பு முதலாளிக்குச் சாதகமானதிலே எல்லோருக்குமே சந்தோசம்தான். ஒருத்தருக்குமே முதலாளிக்கு விரோதமாக எழுதிப் போடறதிலே விருப்பம் கிடையாது. ஆனால் எல்லோரும் சேர்ந்து ஒரு காரியம் செய்யறப்போ, தான் மட்டும் தனியாப் பிரிஞ்சு இருக்க முடியாமல்தான் எல்லோருமே அப்படிச் செய்தாங்க. பார்க்கப்போனா ஒவ்வொருத்தரும் மனசுக்குள்ளே வருத்தப்பட்டுக்கிட்டேதான் இருந்தாங்க. இது ஒரு சிலருடைய முயற்சியாலே நடந்ததுதானே?" என்றான் வடிவேலு.

"அண்ணனுக்கு இந்தச் சமாசாரம் தெரிஞ்சா ரொம்பச் சந்தோஷப்படும்" என்றாள் பாப்பா.

"அண்ணன்தான் இப்போ எனக்கு இதைச் சொல்லி விட்டுப் போனாரு. அது சரி... நம்ம கலியாணம் எங்கே நடக்கப் போவுது தெரியுமா, உனக்கு?" என்று கேட்டான்.

"ஏன், எங்க வூட்லேதான்."

" அதான் இல்லே. முருகன் வூட்லே!"

" அது யாரு முருகன்? பக்கத்து வீட்டு முருகேசனைச் சொல்றயா?"

" இல்லே; முருகன் கோயில்லே நடக்கப் போவுதுன்னேன், குவார்ட்டர்ஸை முதலாளி யாரோ வெளியூர்க்காரருக்கு வித்துட்டாராம். அதனலே இனிமே வாச்மேன் தேவையில்லேன்னு எனக்கும் நோட்டீசு கொடுத்துட்டாங்க. ஆனல் அதைப்பற்றி நான் கொஞ்சங்கூடக் கவலைப் படல்லே. உண்மையா உழைக்கிறவனுக்கு உலகமெங்கும் வேலை" என்ருன் வடிவேலு.

" முதல்லே அண்ணனுக்கு வேலை போச்சு. இப்ப உனக்கும் வேலை போயிட்டுதா?"-பாப்பா கண் கலங்கினள்.

" இதுக்கு நீ ஏன் அழுவறே? சந்தோஷமாயிரு, முதலாளி நமக்கெல்லாம் ஏதாவது வழி செய்யாமல் இருக்க மாட்டாரு. பாவம், கொஞ்சநாளா அவருக்கு மனசே சரியில்லையாம். பாவம்! அடிக்கடி மயக்கம் வேறே வருதாம்!"

" நம்ம கலியாணத்துக்கு வருவாரு, இல்லையா?"

" என்ன அப்படிக் கேக்கறே? கண்டிப்பா வருவாரு. அவர் வந்தப்புறம்தான் உன் கழுத்திலே நான் தாலி கட்டுவேன்" என்ருன் வடிவேலு.

## 14

ஞாயிற்றுக் கிழமை. அன்றுதான் பாப்பா—வடிவேலுவின் திருமணத் திருநாள். முருகன் கோவிலில் உள்ளூர் நாதசுரக்காரர் சக்கைப்போடு போட்டுக்கொண்டிருந்தார். நாராயணசாமி குறுக்கும் நெடுக்கும் அலைந்து கொண்டிருந்தான். மில் தொழிலாளர்கள் அனைவரும் கலியாணத்துக்கு வந்திருந்தார்கள். கண்ணம்மா தன் சொந்த வீட்டுக் கலியாணம்போல் இங்குமங்கும் அலைந்து வேலை செய்துகொண்டிருந்தாள். குறுக்கே வந்த நாராயணசாமியைப் பார்த்து, " அதோ முதலாளி கார் வருது" என்ருள். நாராயணசாமி ஓடிப்போய்க் கார்க் கதவைத் திறந்து முதலாளியை எதிர்

கொண்டு அழைத்து வந்து புதுப்பாயில் உட்காரவைத்தான். வடிவேலுவும் பாப்பாவும் திருமணக் கோலத்துடன் முதலாளியின் முன்வந்து கும்பிட்டு நின்றனர். முதலாளி அவர்களை மனமார வாழ்த்திவிட்டு மாப்பிள்ளையை உற்று நோக்கிஞர். வாச்மேன் வடிவேலுதான் மாப்பிள்ளை என்கிற விஷயம் அப்போதுதான் அவர் நினைவுக்கு வந்தது. 'அடாடா' அவனுக்கும் அல்லவா வேலை போய்விட்டது?' அவரால் அதற்குமேல் அங்கே தாமதிக்க முடியவில்லை.

"நான் வருகிறேன், நாராயணசாமி! முடிந்தால் நாளைக்கு என் வீட்டுப்பக்கம் வந்துவிட்டுப் போ" என்று அவனிடம் சொல்லிக்கொண்டு வீட்டுக்குப் புறப்பட்டுச் சென்றுர் அவர்.

மறுநாள் காலை நாராயணசாமி அவர் வீட்டுக்குப் போயிருந்தான்.

"நாராயணசாமி! உன்னிடம் சில முக்கியமான விஷயங்கள் பேசவே உன்னை வரச்சொல்லியிருந்தேன். உன் குடும்பத்துக்கு நான் எந்த விதத்திலாவது உபகாரம் செய்யவேண்டுமென்று நீண்ட நாட்களாக எண்ணிக்கொண்டிருக்கிறேன். ஆனுல் நீயோ என்னிடமிருந்து எவ்வித உதவியும் ஏற்றுக்கொள்ள மறுக்கிருய். நான் நினைப்பதற்கு நேர்மாருக என்னுல் உன் குடும்பத்துக்குப் பல கஷ்டங்கள் நேர்ந்துவிட்டன. முதலில், மில்லில் நஷ்டம் ஏற்பட்டதால் நீ வேலையிலிருந்து விலகும்படி நேர்ந்தது. இப்போது, குவார்ட்டர்ஸை விற்கப்போக அதனுல் நீ குடியிருக்கும் வீட்டையே காலி செய்யும்படி ஆகிவிட்டது. போதாததற்கு உங்க மாப்பிள்ளை வடிவேலுக்கும் வாச்மேன் வேலை போய்விட்டது."

"இதுக்கெல்லாம் நீங்க வருத்தப்படலாமா? உங்க மனசு எனக்குத் தெரியாதா? நீங்க நிம்மதியா இருங்க" என்ருன் நாராயணசாமி.

"உன்னிடம் ஒரு முக்கியமான பொறுப்பை ஒப்படைக்கப் போகிறேன். அதாவது மில் தொழிலாளர்களுக்குக் குறைந்த விலையிலே எல்லாச் சாமான்களும் கிடைக்க வழி

செய்யருப்போல் ஒரு ஸ்டோர் ஆரம்பிக்கப் போகிறேன். அந்த ஸ்டோரை நீயும் வடிவேலும்தான் பொறுப்பேற்று நடத்த வேண்டும். வியாபாரத்தைப் பலப்படுத்தி ஸ்டோரை அபிவிருத்தி செய்து முடிஞ்சவரை வேலை யில்லாமலிருக்கிற தொழிலாளர்களுக்கு அதில் வேலை கொடுக்க வழி செய்யணும். இந்த ஸ்டோரை நடத்துவ தற்கு எவ்வளவு முதல் தேவையானுலும் நான் போடத் தயாரா யிருக்கிறேன். தொழிலாளர்களுக்கு இந்த ஸ்டோர் மூலம் பல நன்மைகளை நீ செய்ய முடியும் என்கிற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. உன் உழைப்புக்கு ஊதிய மாக நீ மாசம் நூறு ரூபாய் எடுத்துக்கொள். சீக்கிரமே ஸ்டோரை ஆரம்பித்து விடலாம். என்ன சொல்கிருய்?''

'' இத்தனை பேருக்கு உபகாரமாக இருக்கும் ஒரு நல்ல காரியத்தைச் செய்யும்படி நீங்க சொல்றபோது நான் ஏன் தடை சொல்லப் போகிறேன்? உடனே ஆரம்பிச்சுடலாம்'' என்று மகிழ்ச்சியுடன் கூறினுன் நாராயணசாமி. அடுத்த சில தினங்களுக்குள்ளாகவே ஸ்டோர் ஆரம்பிப்பதற்கான முயற்சிகளில் தீவிரமாக முனைந்தான் அவன்.

ஒரு நல்ல நாள் பார்த்து ஸ்டோர் ஆரம்பிக்கப்பட்டது. நாராயணசாமி 'காஷ்' மேஜை முன் உட்கார்ந்தபடி எல்லாரையும் வரவேற்றுக் கொண்டிருந்தான். வடிவேலு பண்டங்களை ஒழுங்காக அடுக்கிக் கொண்டிருந்தான்.

காஷ் மேஜைக்கு நேராகச் சுவரில் மாட்டப்பட்டிருந்த விநாயகர், இலட்சுமி, சரஸ்வதி ஆகிய மூன்று படங்களையும் பூமாலைகள் அலங்கரித்தன. ஊதுவத்தியின் மணம் ''கம்' மென்று வீசிக்கொண்டிருந்து. மில் தொழிலாளர்கள் எல்லாரும் ஸ்டோர் வாசலில் கூடி முதலாளியின் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். முதலாளி வந்ததும் எல்லாரும் மரியாதையுடன் எழுந்து அடக்கமாக நின்ருர் கள். நாராயணசாமி தேங்காய் உடைத்துச் சூடம் கொளுத்தி ஞன். வடிவேலு எல்லாருக்கும் கற்கண்டு வழங்கிஞன். ''உங்க கையாலேயே 'போணி' செய்து ஆரம்பிச்சு வைக்க

ணும்'' என்று விநயமாக முதலாளியைப் பார்த்துக் கேட்டுக் கொண்டான் நாராயணசாமி.

"இல்லே நாராயணசாமி! தொழிலாளருக்காக ஏற்பட்ட கடை இது. ஆகவே நம் மில்லிலே ரொம்ப நாளா வேலே செய்கிற வேலுச்சாமிப் பெரியவரை ஆரம்பித்து வைக்கச் சொல்றதுதான் நியாயம்'' என்றார் முதலாளி. வேலுச்சாமிக் கிழவரை அழைத்துப் "பெரியவரே, நீங்க தான் கைராசிக்காரர். உங்க கையாலேயே 'போணி' செய்து ஸ்டோரை ஆரம்பிச்சு வையுங்க'' என்று கேட்டுக் கொண்டார் சாரங்கபாணி.

வேலுச்சாமி மிக்க மகிழ்ச்சியுடன் தம் கையால் கற்கண்டை விலேக்கு வாங்கி முதல் முதலாக வியாபாரத் தைத் தொடங்கி வைத்தார்.

தொழிலாளர்கள் அனேவரும் உற்சாகத்தோடு கைதட்டி ஆரவாரம் செய்தனர்!

பின்னர் சாரங்கபாணி அந்த ஸ்டோரை ஆரம்பித்ததன் நோக்கத்தை விளக்கிச் சில வார்த்தைகள் பேசினர்:

"நம் மில் தொழிலாளர்களின் சௌகரியத்தையும் நன்மையையும் முன்னிட்டு இன்று இந்த ஸ்டோர் ஆரம் பிக்கப்பட்டுள்ளது. இதில் உங்களுக்கு வேண்டிய எல்லாவித மான பொருள்களும் குறைந்த விலேயில் கிடைக்கும். நாரா யணசாமி நம் எல்லாருடைய நம்பிக்கைக்கும் பாத்திர மானவன். அவனுடைய சலியாத உழைப்பாலும் முயற்சியாலும் இந்த ஸ்டோர் வெகு சீக்கிரமே மிகப் பெரிய அளவில் வளர்ந்துவிடும் என்பதில் எனக்குச் சந்தேகமில்லே. இந்த முயற்சிக்கு உங்கள் எல்லாருடைய ஒத்துழைப்பும் ஆதரவும் தேவை என்று கேட்டுக் கொள் கிறேன்.''

பாண்டுரங்கத்தின் குடும்பத்துக்குத் தாம் செய்ய வேண் டியதைச் செய்து விட்டோம் என்ற மனத் திருப்தியுடன் வீட்டுக்குத் திரும்பிச் சென்றார் சாரங்கபாணி. வீட்டை அடைந்ததும் அவருக்கு மார்வலி கண்டுவிட்டது. அப்படியே படுக்கையில் போய்ப் படுத்துக்கொண்டவர்தான். டிரைவரை

அனுப்பி டாக்டரை அழைத்து வரச்சொன்னார். டாக்டர் வந்ததும் அவரைப் பரிசோதித்துப் பார்த்துவிட்டு, "தற்போதைய உடல் நிலையில் தங்களுக்கு அதிக சந்தோஷமோ துக்கமோ ஏற்படக்கூடாது. பூரண ஓய்வு எடுத்துக்கொள்ள வேண்டும். யாருடனும் அதிகம் பேசக்கூடாது'' என்று எச்சரித்து விட்டுப் போனார்.

முதலாளிக்கு உடம்பு சரியில்லை என்னும் தகவல் இதற்குள் ஆலைத்தொழிலாளிகள் அனைவருக்கும் எட்டிவிட்டது. அவர்கள் எல்லாரும் கூட்டமாகப் பங்களா வாசலில் வந்து கூடிவிட்டனர்.

அன்று மாலையே சாரங்கபாணி ஒரு முடிவுக்கு வந்து விட்டார். தம்முடைய காரியதரிசியை அழைத்து, "இனி நான் அதிக நாள் உயிர் வாழ மாட்டேன். என்னிடம் இத்தனை அன்பும், மதிப்பும், நம்பிக்கையும் வைத்துள்ள தொழிலாளர்களுக்கு என் உயிர் போவதற்குள் ஏதாவது செய்துவிட வேண்டும். நம்முடைய வக்கீலை அழைத்துவரச் சொல்லுங்கள்'' என்றார்.

வக்கீல் வந்ததும், "வக்கீல் ஸார்! என் கடைசிக் காலம் நெருங்கி விட்டது. நான் இனி அதிக நாள் இருக்க மாட்டேன். எனவே, வாரிசு இல்லாத என் சொத்துக்களுக்கு வாரிசு ஏற்படுத்த விரும்புகிறேன். என்னுடைய மில்லை, அதில் வேலை செய்யும் எல்லாத் தொழிலாளர்களுக்கும் பொதுச் சொத்தாக்கி அதில் வரும் இலாபத்தை அவர்களே சமமாகப் பங்கிட்டுக் கொள்ள வேண்டும். இதற்கு ஒரு 'டிரஸ்ட்' ஏற்படுத்திவிட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக ஸ்டோரை நாராயணசாமிக்கு உரிமையாக்கி அவன் பெயருக்கே மாற்றி எழுதிவிட வேண்டும். நாளைக்கே உயிலை எழுதிக்கொண்டு வந்து விடுங்கள். நான் கையெழுத்துப் போட்டு விடுகிறேன்'' என்றார் சாரங்கபாணி.

வக்கீல் எழுந்து போனதும் சாரங்கபாணி மானேஜரை அழைத்துக் "குவார்ட்டர்ஸ் விற்ற பணம் கைக்கு வந்ததும் பம்பாயிலுள்ள இயந்திரங்களைக் கொண்டு வர உடனே ஏற்பாடு செய்யுங்கள். அந்த இயந்திரங்கள் வந்து வேலை

செய்யத் தொடங்கிவிட்டால் நம் மில்லிலிருந்து நீக்கப்பட்ட அத்தனை தொழிலாளர்களையும் மறுபடியும் வேலையில் சேர்த்துக் கொண்டு விடலாம்'' என்றார்.

'' ஏன் இப்படியெல்லாம் பேசுறீங்க? அதெல்லாம் உங்களுக்கு ஒன்றும் இராது '' என்றார் மானேஜர்.

இந்த நிகழ்ச்சிக்குப் பின்னர் சில தினங்களுக்குள்ளாகவே, வாழ்வின் பயனை அடைந்துவிட்ட மனநிறைவுடன் சாரங்கபாணி கண்களை மூடிவிட்டார். அன்று அந்த ஊரே சாரங்கபாணியின் பங்களாவில் கூடியிருந்தது. சாரங்கபாணியின் அந்திம ஊர்வலம் புறப்பட்டதும் அவ்வளவு பேரும் கண்ணீர் வடித்தபடியே ஊர்வலத்துக்குப் பின்னால் நடந்துபோய்க் கொண்டிருந்தார்கள். அவருடைய ஈமச் சடங்குகளை நாராயணசாமியே முன்நின்று செய்து முடித்தான். அவன் நெருப்புச் சட்டியுடன் தலைகுனிந்த வண்ணம் முன்னால் செல்ல, தொழிலாளர்கள் தோள்மீது சாரங்கபாணி தமது கடைசி யாத்திரையைச் செய்து கொண்டிருந்தார். அந்தக் காட்சி எல்லாரையும் உலுக்கிவிட்டது.

## 15

'' என்ன, கண்ணம்மா, உனக்கு என்ன வேணும்?'' என்று கேட்டான் நாராயணசாமி.

'' அரிசி.''

''சரி. கியூவிலே நில்லு. யாராயிருந்தாலும் வரிசையிலே நின்னுத்தான் கிடைக்கும்.''

கியூவிலே நின்று அரிசியை வாங்கிக் கொண்டே கண்ணம்மா, வீட்டுக்குப் புறப்பட்டாள். இதற்குள் கூட்டமும் கொஞ்சம் குறைந்தது.

'' கண்ணம்மா, எங்கே அதுக்குள்ளே கிளம்பிட்டே? இரு கொஞ்சம். இதோ வந்துடறேன். உங்கிட்டே கொஞ்சம் பேசணும் '' என்று கூறிய நாராயணசாமி, வடிவேலுவிடம் ஸ்டோரைக் கவனித்துக் கொள்ளச் சொல்லிவிட்டு வெளியே வந்தான்.

'' நீங்க எல்லாரும் சேர்ந்து செய்த காரியம் முதலாளியின் உயிருக்கே எமனா முடிஞ்சுட்டுது. இந்த மாதிரி ஒரு பழி

ஏற்பட்டது முதல் முதலாளி அதே கவலையாகப் படுத்தவர் தான். அவர் உயிர் போயிட்டுது. நீ இந்த மாதிரிச் செய்ததை என்னுலே பொறுக்கவே முடியவில்லை. என் மேலே உனக்கு அன்பு இருக்கலாம். ஆனுல் அதற்காக இப்படியா செய்ய றது. சே !'' கோபமும் வெறுப்பும் கலந்த குரலில் பேசினுன் நாராயணசாமி. கண்ணம்மா பதில் கூருமல் கண்ணீர் சிந்தியபடியே நின்றுகொண்டிருந்தாள்.

'' ஏன் நிக்கறே? நீ போகலாம். உன்னைப் பார்க்கப் பார்க்க எனக்குக் கோபம்தான் அதிகமாகுது; நீ போய்விடு. இனி உன் சிநேகமே எனக்கு வேண்டாம்'' என்று ஆத்திரத் துடன் சீறினுன் அவன்.

'' தெரியாமல் செய்துவிட்ட தப்பு இவ்வளவு விபரீதமா ஆகும்னு நான் நினைக்கவில்லை. என் குற்றத்தை நான் இப்பத்தான் உணர்கிறேன். உங்க மேலே இருந்த அன்பிலே கண்மூடித்தனமா செய்துட்டேன். இனி உங்க விருப்பத் துக்கு மாரு ஒரு நாளும் நடக்கமாட்டேன். நான் திருந் திட்டேன். என்னை நீங்க மன்னிச்சுடுங்க...என்னைக் கை விட்டுவிடாதீங்க. மன்னிச்சேன்னு ஒரு வார்த்தை சொல் லுங்க...'' என்று கதறிக்கொண்டே நாராயணசாமி யின் காலடியில் விழுந்துவிட்டாள் கண்ணம்மா. நாராயண சாமி அவளைத் தூக்கி அணைத்துக் கொண்டான்.

'' உனக்குத் தெரியுமா? முதலாளி மில்லை அப்படியே தொழிலாளர்கள் பேருக்கு எழுதி வெச்சிட்டாரு. இந்த ஸ்டோரை என் பேருக்கு எழுதி வெச்சிருக்காரு. அவர் விரும்பியபடி நான் இந்த ஸ்டோரை எப்பாடு பட்டாவது முன்னுக்குக் கொண்டுவந்து தொழிலாளர் சமூகத்துக்கு உதவி செய்யப்போறேன். அப்பத்தான் அவர் ஆத்மா சாந்தி அடையும்'' என்ருன் அவன்.

நாராயணசாமியின் சலியாத உழைப்பு, ஊக்கம், முயற்சி காரணமாக அந்த ஸ்டோர் ஒரே வருடத்தில் மிகப் பெரிதாக வளர்ந்துவிட்டது. அதில் கிடைத்த இலாபத்தைக் கொண்டே மேலும் மேலும் அதைப் பலப்படுத்தினுன் அவன். கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த தொழிலாளர்களில் சிலருக்கு அதில் வேலையும் போட்டுக்கொடுத்தான்.

ஆயினும், அவனுடைய இலட்சியம் இன்னும் பூர்த்தியாக வில்லையே ! வேலை இழந்த மில் தொழிலாளர்கள் எல்லாரும் மீண்டும் போய் மில்லில் சேர்ந்து விட்டார்கள். இருந்தாலும் ஊரில் இன்னும் எத்தனையோ தொழிலாளர்கள் வேலை இழந்து திண்டாடிக் கொண்டிருக்கிறார்களே? ஸ்டோரில் வரும் இலாபத்தைக்கொண்டு அத்தகைய ஏழைத் தொழிலாளர்களுக்கு நிரந்தரமான உதவி அளிக்க விரும்பினான் அவன்.

அதற்காக ஒரு சங்கத்தையே ஆரம்பித்து, வேலையின்றித் தவிக்கும் தொழிலாளர்களை அந்தச் சங்கத்தில் சேர்த்துக்கொண்டான். அவர்களுக்கு உண்ண உணவும், உடுக்க உடையும் கொடுத்து உதவினான். ஆங்காங்கு வேலை கிடைக்கும் போதெல்லாம் அவர்களுக்கு வேலையும் தேடித்தந்தான். ஆனால் அவன் மட்டும் அந்தப் பழைய நூறு ரூபாயே பெற்றுக்கொண்டிருந்தான்.

ஆண்டு விழா தினம். அழகாக அலங்கரிக்கப் பெற்று பந்தலில் ஆயிரக்கணக்கான பேர் அமர்ந்திருந்தார்கள். பிரமுகர்கள், பிரபலஸ்தர்கள், அரசியல் தலைவர்கள் அனைவரும் மேற்படி விழாவுக்கு விஜயம் செய்திருந்தனர். ஆண்டு விழாவை யொட்டி முதலாளி சாரங்கபாணியின் படத்தைப் பிரபலஸ்தர் ஒருவரைக்கொண்டு திறந்துவைத்தான் அவன். மேற்படி தலைவரின் சொற்பொழிவு முடிந்ததும் நாராயணசாமி சங்கோசத்துடன் எழுந்து நின்று பேசினான் :

'' இங்கே கூடியுள்ள தொழிலாளர்களே, பெரியவர்களே ! உங்கள் எல்லாருக்கும் என் வணக்கம். இன்று நம்ம சங்கத்திற்கு ஆண்டு விழா. நம்ம மில் தொழிலாளர்களில் ஒருவர்கூட இப்போ வேலையில்லாமலில்லை. இப்ப நம்ப முதலாளி உயிரோடு இருந்தால், ரொம்பச் சந்தோஷப் பட்டிருப்பாரு. கடைசி காலத்திலே அவர் ரொம்ப மனக்கஷ்டத்திற்கு உள்ளாகி இருந்தாரு. அது உங்களுக்கெல்லாம் தெரிஞ்ச சங்கதிதான். இத்தனைக்கும் பல பேருடைய நலனுக்காகத்தான் சில பேரை வேலையைவிட்டு எடுத்தாரு. அப்படி வேலை இழந்தவர்கள்கூட அவங்க வாழ்க்கையைப்பற்றி ரொம்பக் கவலைப்படவில்லை. ஆனால், அதை நினைச்சுநினைச்சு முதலாளிதான் ரொம்ப வருத்தப்

பட்டாரு. அவர் செய்யாத குற்றம் நிழல்போல அவருடைய வாழ்நாள் பூராவும் தொடர்ந்து கொண்டிருந்தது. அவர் ஆத்மா சாந்தியடையணும் என்பதற்காகவே இந்தச் சங்கத்தை ஒரு வருடம் முன்னுடி நான் ஆரம்பிச்சேன்.

"இந்தச் சங்கத்தின் நோக்கம் உங்கள் எல்லாருக்கும் தெரியும்னு நம்பறேன். இதில் வேலை இழந்தவர்களுக்கு மட்டுமே இடம் உண்டு. வேலை விருப்பமில்லாதவர்களுக்கு இங்கே இடம் கிடையாது. அப்படிச் செய்வது சோம்பேறி களுக்கு இடம் கொடுப்பதாகும். குற்றம் செய்ததற்காக வேலையிலிருந்து நீக்கப்பட்டவர்களுக்கும் இதில் இடம் கிடையாது. அப்படிச் செய்வது குற்றவாளிகளுக்கு இடம் கொடுப்பதாகும். ஒரு குற்றமும் புரியாமல் வேலையினின்று விலக்கப்பட்ட தொழிலாளர்கள் எல்லாருக்கும் இங்கே உதவி கிடைக்கும். ஆனுல் இதில் சேருகிறவர்கள் எந்த வேலை செய்யவும் தயாராயிருக்க வேண்டும். தொழிலில் உயர்வு தாழ்வு என்கிற வித்தியாசமே பாராட்டக் கூடாது. அப்பொழுதுதான் நம் தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரம் உயரும்; நாட்டின் நிலை உயரும்.

"நம் முதலாளி இந்த ஸ்டோரை என் பெயருக்கு எழுதி வைத்துவிட்டுப்போனுர். ஆனுலும் இன்றுவரை இந்த ஸ்டோரை நான் என்னுடைய சொந்தமாகக் கருதவில்லை. இந்தச் சங்கத்தின் வளர்ச்சிக்காகவே அதில் வரும் இலாபத்தைப் பயன்படுத்தி வருகிறேன். முதலாளி உயிரோடு இருந்தால் என்னுடைய இந்தக் காரியத்தை ஆமோதிப்பார் என்ற நம்பிக்கையுடனேயே இதையெல்லாம் செய்து வருகிறேன்.

"'அந்த உத்தமரின் நினைவு நம் எல்லாருடைய உள்ளத்திலும் எப்போதும் நிலைத்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை'' என்று சுருக்கமாகவும் உருக்கமாகவும் பேசி முடித்தான் நாராயணசாமி. அவன் பேச்சு முடிந்ததும் கூட்டத்திலிருந்த அனைவரும் எழுந்து தலை வணங்கி நின்றனர். ஒரு மூலையில் நின்றுகொண்டிருந்த கண்ணம்மாவின் கண்களிலிருந்து நீர் வழிந்துகொண்டிருந்தது.




கார்த்திகைத் திருநாள். ஊரே ஒளி மயமாய்த் திகழ்ந்து கொண்டிருந்தது. இல்லங்கள்தோறும் ஆண்டவன் சரவிளக்குகளாகக் கொலுவிருந்து தீபச்சுடராகப் பிரகாசித்துக்கொண் டிருந்தான். ஆண்களும், பெண்களும், சிறுவர்களும் மலர்ந்த முகத்தோடு மகிழ்ச்சி நிறைந்த உள்ளத்தோடு வீதிகளில் நடமாடிக் கொண்டிருந்தார்கள்.

சுந்தரமூர்த்தியின் பங்களா வாசலில் மட்டும் ஓர் அசாதாரணச் சூழ்நிலை நிலவியது. வாசல் வராந்தாவில் சுந்தரமூர்த்தியும் இன்னும் சிலரும் ஒரு மங்கள நிகழ்ச்சியை எதிர்பார்க்கும் ஆவலில் பங்களாவிற்குள் எட்டி எட்டிப் பார்த்துக்கொண் டிருந்தார்கள்.

நர்ஸ் ஒருத்தி அவ்வப்போது வெளியே வருவதும், அவர்களுக்கெல்லாம் உதட்டினால் சமிக்ஞை காட்டுவதும், மீண்டும் உள்ளே செல்வதுமாக இருந்தாள்.

'லேடி டாக்டரும், நர்ஸும் வந்து இரண்டு மணி நேரமாகிறதே; இன்னும் ஒன்றும் தெரியவில்லையே' என்ற கவலையில் அமைதி இழந்தவராய்க் காணப்பட்டார் சுந்தர மூர்த்தி.

மணி ஏழு இருக்கும். அந்த ஆங்கிலோ இந்திய லேடி டாக்டர் புன்னகை பூத்த முகத்துடன் வெளியே வந்தாள்.

அவள் என்ன சொல்லப் போகிறாள் என்பதை எதிர் பார்த்து எல்லாரும் அவள் முகத்தையே பார்த்துக்கொண் டிருந்தார்கள்.

"மேல் பேபி! பியூடிபுல் சைல்ட்! கண்ணும் நோஸும் அளகா யிருக்குது!" என்று தனக்குத் தெரிந்த கொச்சைத் தமிழில் கூறினாள் அவள்.

சில விநாடிகளுக்கெல்லாம் உள்ளுக்குள் குழந்தையின் 'முதல் முழக்கம்' சுநாதமாய் ஒலிக்கத் தொடங்கியது.

"கங்ராஜுலேஷன்ஸ், மிஸ்டர் சுந்தரம்!" என்று சுந்தரமூர்த்திக்குத் தெரிந்தவர்கள் அவருடைய கையைக் குலுக்கி, தங்கள் பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொண் டார்கள்.

"அது ஆண் குழந்தையாகத்தான் பிறக்கும் என்று எனக்கு அப்போதே தெரியும்" எனக் கூறி ஒரு சிலர் தங்க ளுடைய தீர்க்கதரிசனத்தை வெளிப்படுத்திக்கொண் டார்கள்.

சுந்தரமூர்த்தி அவர்கள் அனைவருக்கும் சர்க்கரையும், கற்கண்டும் வழங்கினார்.

குழந்தை பிறந்த பத்தாவது தினத்தன்று சுந்தரமூர்த்தி யின் பங்களாவில் நாதஸ்வர இசை 'ஜாம் ஜாம்' என முழங்கிக் கொண்டிருந்தது.

அன்றுதான் அவருடைய அருமைக் குழந்தையின் நாமகரண விழா!

ஆயர்பாடியில் கோபியர்கள் கோகுல கிருஷ்ணனைச் சூழ்ந்துகொண்டு கொஞ்சிக் குலவியதைப்போல், ஊர்ப்

பெண்கள் அனைவரும் சுந்தரமூர்த்தியின் குழந்தையைச் சுற்றிச் சூழ்ந்துகொண்டார்கள்.

ஒருத்தி, குழந்தையை வாரி எடுத்து முத்தமிட்டாள்.

இன்னொருத்தி, அதன் உச்சி முகர்ந்து உள்ளம் மகிழ்ந்தாள்.

மற்றொருத்தி, 'குழந்தையின் ஜாடை அம்மாவை அப்படியே உரித்து வைத்திருக்கிறது!' என்று புகழ்ந்து, குழந்தையின் அப்பாவைக் கண் ஜாடையாகப் பார்த்துப் புன்னகை பூத்தாள்.

வேறொருத்தி, அதற்கும் பதில் சவால் கொடுப்பதுபோல் "அம்மா ஜாடை ஒன்றுமில்லை; அப்பா ஜாடைதான்" என்றாள்.

குழந்தையோ இவர்களுடைய அசட்டுப் பேச்சைக் கேட்கச் சகிக்காததைப்போல் முகத்தைச் சுளித்துக் கொண்டது.

பின்னர், வீட்டுக்குப் பெரியவர்கள் வந்து தாயையும் சேயையும் வைத்துத் திருஷ்டி சுற்றிப் போட்டார்கள். பிறகு, குழந்தையைப் பூமணித் தொட்டிலில் இட்டுத் தாலாட்டுப் பாடினார்கள். இந்தக் கோலாகலத்தையெல்லாம் கண்ட குழந்தை தன்னுடைய அழகிய செவ்விதழ் விரித்துச் சிரித்தது.

குழந்தையின் தாய் தேவகி, தன்னுடைய அன்புக் கணவரை அருகில் அழைத்து, "குழந்தைக்கு என்ன பெயர் வைக்கலாம்?" என்று கேட்டாள்.

"கார்த்திகைத் திருநாளன்று பிறந்திருக்கிறான். முருகக் கடவுளின் பெயர்களில் ஏதாவதொன்றை வைக்கலாம்" என்றார் சுந்தரமூர்த்தி.

"குழந்தை மூக்கும் முழியுமாக அழகா யிருக்கிறான். கண்ணன் என்றே வைக்கலாம்" என்று தன் ஆசையைத் தெரிவித்துக் கொண்டாள் தேவகி.

''குழந்தை நல்ல சிவப்பு! கண்களிலே அறிவின் ஒளி வீசுகிறது. முகத்திலே புத்திக்களை தாண்டவமாடுகிறது. ஆகையால் ரவி என்ற பெயர்தான் மிகவும் பொருத்தமாயிருக்கும்'' என்றார் குழந்தையின் மாமா.

'' தவமிருந்து பெற்ற குழந்தை. அது தீர்க்காயுசாய் வாழவேண்டும். ஆகையால் குழந்தைக்கு மூக்குக் குத்தி, குப்பையிலிட்டு, குப்புசாமி எனப் பெயர் வைக்கலாம்'' என்றாள் குழந்தையின் அத்தை.

கடைசியில், ஒருவராலும் ஒரு முடிவுக்கும் வர முடியாமற்போகவே, கிருஷ்ணன் படத்துக்கு முன்னால் விளக்கேற்றி வைத்து, திருவுளச் சீட்டுப் போட்டுப் பார்த்தார்கள்.

'கண்ணன்' என்ற பெயரே வந்தது. அருமைத் தாயின் விருப்பமே ஆண்டவனின் விருப்பமாகவும் இருந்தது.

* * * *

மாந்தளிர் போன்ற சிவந்த மேனி; 'கொழு கொழு' வென்ற உடலமைப்பு; குமிழ்க் கன்னங்கள்; சலனமிடும் விழிகள். நெற்றியிலே தவழ்ந்து விளையாடும் 'கரு கரு' வென்ற மிருதுவான வெல்வெட் சுருட்டை மயிர்! குழந்தையைக் காண்போர் 'இது தெய்வக் குழந்தையோ?' என வியக்கும் அதிசயமான தோற்றம்.

குழந்தைக்கு ஓராண்டு பூர்த்தியாயிற்று. செல்வக் குடும்பத்தில் பிறந்த குழந்தை. அதுவும் தவமிருந்து பெற்ற ஒரே குழந்தை! ஆண்டு விழாவின் சிறப்புக்குச் சொல்லவா வேண்டும்?

அது தெய்வக் குழந்தைதான், சந்தேகமில்லை. விக்கிரகம் போன்ற வடிவத்தில் வீடு முழுவதும் தவழ்ந்து விளையாடுவான் கண்ணன். ஆனால் கதவிடுக்கில் கையை வைத்துச் சார்த்திக்கொண்டு அழமாட்டான். தினம் தினம் பால முருகன் படத்தின் எதிரில் போய் உட்கார்ந்துகொண்டு

அந்தப் படத்தையே கண்கொட்டாமல் பார்த்துக்கொண்டிருப்பான். ஆனால் அருகில் சுடர்விட்டு எரியும் குத்து விளக்கைத் தொட்டுக் கையைச் சுட்டுக்கொண்டு அழமாட்டான். இவ்வளவு புத்திசாலியான, அழகான குழந்தை அழக்கூடிய சமயங்கள் இரண்டே இரண்டுதான்.

அது பசி எடுக்கிறபோதும், இருட்டைக் காண்கிற போதும்தான். அது ஏனோ தெரியவில்லை; இருள் என்றால் மட்டும் அந்தக் குழந்தைக்குக் கட்டோடு பிடிக்கவில்லை.

மேலும் இரண்டு ஆண்டுகள் கடந்தன. குழந்தைக் கண்ணன் தவழும் நிலையிலிருந்து தத்தி நடக்கும் பருவத்தை அடைந்தான். மழலை மொழி மாறி அழகாகப் பேசவும் வந்துவிட்டது அவனுக்கு!

அவன் சின்னக் குழந்தைதான்; ஆயினும் அந்தக் குழந்தையின் அறிவுக் கூர்மையோ சொல்லத் தரமன்று.

"அம்மா! எப்போதும் வெளிச்சமாகவே இருக்க வேண்டும். இரவெல்லாம் தீபம் எரிந்தபடியே இருக்க வேண்டும்" என்பான்.

வானத்திலே சுடர் வீசும் சந்திரனையும், நட்சத்திரங்களையும் கண்கொட்டாமல் பார்த்துக்கொண்டே இருப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைவான் அவன்.

"அம்மா, இன்றைக்கு ஏம்மா சந்திரனே வல்லே!"

"இன்றைக்கு அமாவாசையடா, கண்ணு! அதனால் சந்திரன் வரமாட்டான்!" என்பாள் அவன் தாய்.

"அம்மா! இந்தக் கடவுள் அமாவாசைன்னு ஒன்றை ஏன்தான் படைச்சாரோ?" என்று அலுத்துக் கொள்வான் கண்ணன்.

"குறையில்லாமல், குற்றமில்லாமல், களங்கமில்லாமல் இந்த உலகத்தில் எதுவுமே கிடையாதுடா என் செல்வமே!" என்பாள் தேவகி.

"அம்மா, அதோ தெரிகிறதே, அது என்ன நட்சத்திரம்மா?"

''துருவ நட்சத்திரம் !''

'' துருவன்னு யாரு ?''

'' அவன் ஒரு சின்னப் பையன். தபஸ் இருந்து நட்சத்திர மாக மாறிவிட்ட ஒரு தெய்வக் குழந்தை !''

''அம்மா! நானும் ஏம்மா துருவனாட்டமா தபஸ் பண்ணி நட்சத்திரமாகி ஆகாசத்திலே போய் 'ஜம்'மென்று பிரகா சிக்கக் கூடாது ? இந்த இருட்டைக் கண்டாலே எனக்குப் பிடிக்கலேம்மா. நான் தெய்வமா யிருந்தா சந்திரனைத் தேயவே விடமாட்டேன். எப்பவும் வெளிச்சமாவே வைத்தி ருப்பேன்.''

குழந்தையின் பேச்சைக் கேட்ட தாயின் கண்களில் பனித்திரையிட்டது.

அன்றொரு நாள் அமாவசை இரவு; கண்ணனுக்குத் தூக்கமே வரவில்லை.

'' அம்மா, சினிமான்னு என்ன அம்மா ?'' என்று கேட்டான் அவன்.

சினிமாவைப் பற்றி விளக்கினாள் தேவகி.

'' அம்மா, என்னை ஒரு நாள் சினிமாவுக்கு அழைச்சுண்டு போக மாட்டாயா ?''

'' ஆகட்டுமடா என் கண்மணியே !'' என்றாள் தாய். தேவகியும் சுந்தரமூர்த்தியும் ஒரு நாள் கண்ணனைச் சினிமா வுக்கு அழைத்துச் சென்றார்கள். வெளிச்சமாயிருந்த கொட்டகையில் படம் ஆரம்பமாகுமுன் விளக்குகள் அணைக் கப்பட்டுச் சட்டென இருள் சூழ்ந்தது.

அந்த இருட்டைக் காண மிகவும் பயந்து நடுங்கினான் கண்ணன்.

''அம்மா, இந்த இருட்டிலே சினிமா பார்க்க எனக்குப் பிடிக்கவில்லை. எழுந்து வா, வீட்டுக்குப் போகலாம்'' என்றான்.

கண்ணனுக்கு வயது நாலு ஆயிற்று. ஆயினும் அவனுடைய புத்திசாலித்தனத்துக்கு வயது மதிப்பிட முடியவில்லை.

காலையில் இருள் விலகி ஒளி பரவத் தொடங்குவதுதான் தாமதம். சின்னஞ்சிறு கண்ணன் தானாகவே படுக்கையை விட்டு எழுந்து விடுவான். எழுந்திருக்கும்போதே தன்னுடைய படுக்கையைச் சுருட்டிக் கொண்டு போய் அதை வைக்க வேண்டிய இடத்தில் வைப்பான். பிறகு குளிக்கும் அறைக்குச் சென்று பல் துலக்குவான். குளித்துவிட்டு, வேறு உடை மாற்றிக் கொள்வான். கையோடு பழைய உடைகளைக் கொண்டு போய் அழுக்குத் துணிகள் போடும் கூடைக்குள் போடுவான். பிறகு பீரோக் கண்ணாடியின் முன்னால் நின்றுகொண்டு தானாகவே தலைவாரிப் பொட்டிட்டுக் கொள்வான். அங்கிருந்து பூஜை அறைக்குள் சென்று தெய்வப் படங்களுக்கு முன்னால் நின்றவண்ணம் கண் மூடி, கரம் குவித்துக் கடவுளை வழிபடுவான்.

இந்த அதிசயக் குழந்தையின் புத்தியையும் பக்தியையும் கண்டு தாயும் தந்தையுமே வியப்படைந்து போனார்கள்.

மாயக்கண்ணனே தங்கள் வயிற்றில் மறுபிறப்பு எடுத்து வந்து விட்டானோ என எண்ணி மெய் சிலிர்த்தார்கள்.

கண்ணனுக்குக் காலிலே வெள்ளிச் சலங்கையும், இடுப்பிலே தங்க அரைஞாணும், கழுத்திலே சங்கிலியும் அணிவித்து அழகு பார்த்து அகமகிழ்ந்தார்கள். அவன் குதித்து ஓடும்போது வெள்ளிச் சதங்கையின் கிண்கிணி ஓசை கேட்டு அவர்கள் உள்ளம் பூரித்தார்கள்.

நாலு ஆண்டுகள் பூர்த்தியாயின. ஒரு நல்ல நாள்பார்த்து மேளதாளத்துடன் குழந்தைக்கு அட்சராப்பியாசம் செய்து வைத்தார் சுந்தரமூர்த்தி.

கண்ணன் தன்னுடைய தளிர்க்கரங்களில் பலகையை ஏந்திப் பள்ளிக்குச் சென்ற காட்சி ஒரு தனி அழகு பொருந்தி விளங்கிற்று.

அந்த அறிவுக் குழந்தை, அழகுக் குழந்தை பள்ளிக் கூடம் போகும்போதும், வரும்போதும், ஊரார் அவனை அள்ளி விழுங்கி விடுவதுபோல் அதிசயத்துடன் பார்த்தார்கள்.

மாதங்கள் சில கடந்தன. ஒருநாள் கண்ணன் பள்ளிக் கூடத்திலிருந்து திரும்பி வந்தான். அன்று அவன் முகத்தில் வழக்கமாக உள்ள உற்சாகத்தைக் காணவில்லை. தோட்டத்துக்குச் சென்று கைகால்களைக் கழுவிக்கொண்டு உள்ளே வந்தவன் "அம்மா! எனக்குத் தலையை வலிக்கிறதம்மா?" என்றான்.

அந்த அதிர்ச்சியைத் தாங்காத தேவகி, "ஐயோ, என் குழந்தைக்கு என்ன வந்து விட்டது?" என்று துடிதுடித்துப் போனாள். பரபரப்புடன் கணவனை அழைத்து டாக்டரைக் கூட்டி வரச் சொன்னாள்.

கண்ணனைப் பஞ்சணையில் படுக்க வைத்து அவன் தலையைத் தன் இரு கைகளாலும் அமுக்கிப் பிடித்தாள். அவன் உடம்பு இலேசாகச் சுட்டுக் கொண்டிருந்தது.

'அம்மா, அம்மா' என்று ஈன் சுரத்தில் முனகினான் கண்ணன்.

டாக்டர் வந்து கண்ணனைப் பரிசோதித்துப் பார்த்து விட்டு, "குழந்தைக்குக் கடும் ஜுரம் அடிக்கிறது. இன் ஜெக்ஷன் கொடுத்துவிட்டுப் போகிறேன். நாளைக்கு மறு படியும் வந்து பார்த்த பிறகுதான் என்ன ஜுரம் என்று சொல்லமுடியும்" என்று கூறி, குழந்தையின் பொன்னனை கையைப் புண்ணாக்கிவிட்டுச் சென்றார்.

ஊசியால் டாக்டர் தன்னைக் குத்தும்போதுகூட, கண்ணன் அழவேயில்லை. தலைவலியைப் பொறுப்பதுபோல் அந்த வலியையும் பொறுத்துக் கொண்டான்.

டாக்டர் தினம் தினம் வந்து ஊசி குத்திக் கொண் டிருந்தார். ஆனால் வாரம் ஒன்றாகியும் ஜுரம் குறைந்த பாடில்லை. ஊரிலுள்ள பெரிய பெரிய டாக்டர்களெல்லாம் வந்து பார்த்தார்கள். குழந்தை ஜுர வேகத்தில் அனலில்

பட்ட இளந் துளிர்போல் துவண்டு சுருண்டு கட்டிலில் படுத்துக் கிடந்தான்.

"அம்மா!" என்று எப்பொழுதாவது ஒரு தடவை அழைத்து, "விளக்கு எரியறதாம்மா?" என்று மட்டும் கேட்டுவிட்டு மீண்டும் கண்களை மூடிக் கொள்வான்.

கண்ணனுடைய உடல் நிலை மேலும் மோசமாகிக் கொண்டே போயிற்று. தேவகியும் சுந்தரமூர்த்தியும் குழந்தை படும் துன்பம் தாங்காமல் துடித்துப் போனார்கள். அந்த வேதனையில் துரும்பாக இளைத்தும்விட்டார்கள்.

"தெய்வமே! உனக்கு நாங்கள் என்ன தீங்கு செய்தோம்? கண்ணன் நீ கொடுத்த பிச்சை! அவனை ஏன் இப்படி வதைக்கிறாய்? எங்கள் வயிற்றில் பிறக்கக்கூடிய குழந்தையா அவன்? அவன் ஒரு தெய்வப் பிறவி! அவனுக்கு ஏன் இந்தக் கொடுமை? அவனுக்கு உயிர்ப் பிச்சை கொடு" என்று இருவரும் தெய்வத்தைப் பிரார்த்தனை செய்துகொண்டார்கள்.

பெற்றோரின் பிரார்த்தனை வீண் போகவில்லை. தெய்வம் அவர்களுடைய இதயக் குமுறலுக்குச் செவி சாய்த்தது.

ஒரு மாதம் கழித்துக் கண்ணன் கண் திறந்தான். கொஞ்சம் கொஞ்சமாகப் பேசவும் தொடங்கினான். தேவகியும் சுந்தரமூர்த்தியும் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேது?

"இன்னும் ஒரு மாதத்துக்கு அவன் எழுந்து நடமாடக் கூடாது. அதிகம் பேசக்கூடாது. பள்ளிக்கூடம் போகக் கூடாது. 'பிரெயின் மெனன்ஜடிஸ்' என்னும் கொடிய நோய் இவனைத் தாக்கியிருக்கிறது. இவன் உயிர் தப்பிப் பிழைத்ததே புனர் ஜன்மம்" என்று கூறிய டாக்டர், தேவகியையும் அவள் கணவனையும் தனியாக ஓரிடத்துக்கு அழைத்துச் சென்றார்.

"இனி உங்கள் கண்ணனுடைய உயிருக்கு ஓர் ஆபத்தும் இல்லை. ஆனால் அவனுக்குக் கண் பார்வை போய்விட்டது. இந்த நோய் அவன் உயிரைக் கொண்டு போவதற்குப்


பதிலாக அவன் பார்வையைக் கொண்டு போய்விட்டது'' என்று கூறினார்.

இந்தப் பேரதிர்ச்சியைத் தாங்கமுடியாத தேவகி அப்படியே மூர்ச்சையுற்றுக் கீழே சாய்ந்தாள். சுந்தர மூர்த்தி பிரமை பிடித்தவர்போல் சிலையாக ஸ்தம்பித்து நின்றார். ஆண்டவனுடைய சோதனையை யாரால் தடுத்து நிறுத்த முடியும்?

பார்வை இழந்துவிட்ட கண்ணன் தட்டுத் தடுமாறிய படியே வீட்டுக்குள் வளையவரத் தொடங்கினான். ஆனால் தனக்குக் கண்ணே தெரியவில்லை என்னும் செய்தியைத் தன் வாயால் சொல்லித் தாய் தந்தையாரைத் துன்பத்திற்கு ஆளாக்க விரும்பவில்லை அவன்.

'பிறவி முதல் இருளையே விரும்பாத குழந்தை இனி என் றென்றும் நிரந்தரமான இருளிலேயே வாழவேண்டியதாகி விட்டதே' என்று பெற்றோர்கள் கண்ணீர் வடித்தார்கள். ஆனால், அந்தக் குழந்தையோ தன்னைப்பற்றித் துளியும் வருத் தப்படவில்லை. எப்போதும்போல் அந்தக் குழந்தையின் முகத்தில் புன்னகை தவழ்ந்து விளையாடிக்கொண்டுதான் இருந்தது. இனி அவன் வாழ்வில் இருள் ஏது?

அருள் பொருந்திய நெஞ்சம் உடைய அக்குழந்தைக்கு இப்போது இருள் என்பதே தெரியவில்லை. இருளிலேயே ஒளியைக் காணும் தெய்வக் குழந்தையாகிவிட்டான் அவன்!




''அம்மா, இந்தச் சித்திரம் எப்படி இருக்கிறது பார்த்தீர்களா !'' பதினெட்டு வயது நிரம்பிய ராஜூ தன் தாயிடம் சிறு குழந்தையைப் போல் கொஞ்சிப் பேசினான். அவன் தாயார் அவன் எழுதிய அந்தச் சித்திரத்தையே இமை கொட்டாமல் கவனித்துக் கொண்டிருந்தாள். ராஜூவின் கற்பனையில் உதித்த ஓர் உருவம் அது. வானவில்லின் வர்ணஜாலங்களையெல்லாம் திரட்டிக் குழைத்து, தேவ கன்னியர்களின் வனப்பையெல்லாம் வடித்தெடுத்து உருவாக்கியிருந்தான் அந்த எழில் உருவத்தை.

''ராஜூ ! இத்தகைய அழகு வாய்ந்த பெண் ஒருத்தி இந்த உலகத்தில் உண்மையாகவே வாழ்ந்து கொண்டிருந்தால் அவளைத்தான் நான் உனக்கு மணம் முடித்து வைப்பேன்'' என்றாள் அவன் தாய் பாகீரதி.

''அம்மா, இந்தக் கலியாணப் பேச்சை மட்டும் என் காதில் போடாதே. நான் ஒரு சிறந்த சித்திரக்காரனாக விளங்க வேண்டும். இதுதான் என்னுடைய வாழ்க்கையின்